மே. 25 - மே. 31, 2008 May 25 - May 31, 2008 பக்கங்கள் - 28 20.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## அரச படைகளுக்கு சிம்மசொப்பனமாக இருந்த பால்ராஜ்

## பயங்கரமான எதிர்காலத்தில் இலங்கை



## மகிந்த அரசின் துரோகத்தனமும் முஸ்லிம் தலைமைகளின் கபடத்தனமும்

# படையினரின் வியூகத்தை முடக்க கடற்புலிகள் புதுவியூகம்

PUBLIC LIBRARY JAFFNA

# படையினரின் வியூகத்தை முடக்க கடற்புலிகள் புதுவியூகம்!

வடக்குப் போர்முனையில் - மன்னார், மணலாறு, முகமாலை ஆகிய மூன்று முனைகளில் போர் தீவிரமாகி வரும்நிலையில் -

அந்தப் போர்முனைகளுக்கு ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங் கள், உணவுப் பொருள்கள் மற்றும் துருப்புக்களை நகர்த்தும் கிழக்கு கடல் ஊடான போக்குவரத்தைமுடக்க விடுதலைப்புலிகள் புதியவியூகம் ஒன்றை அமைத்துள்ளனர்.

2001 ஆம் ஆண்டு மன்னாரில் கொல்லப்பட்ட கடற் புலித் தளபதி கங்கை அமரனின் பெயரில் உருவாக் கப்பட்டுள்ள புதிய அணி இந்த தந்தி ரோபாய வியூகத்தை வகுத்துள்ளது.

விநியோகத்துக்கு பயன்படுத்தும் கப்பல்களை பிந்திய தொழில்நுட் பத்தைப் பயன்படுத்தித் தகர்க்கும் பணியை அந்த அணி தொடக்கியுள்ளது.

பாதுகாப்பு ஆய்வாளர்களின் தகவல்படி, இருவிதமான வழிமுறைகளை இந்த அணியினர் கைக்கொள்கின் றனர் என்று தெரியவந் துள்ளது.

முதலாவதுமுறை:-

நீருக்கு அடியில் கப்பலில் ஏதாவது ஒரு பக்கத்தைப் பற்றிப்பிடித்து அதன் பின்னர் வெடிக்கச் செய்தல். நீருக்கு அடியில் இவ்வாறு மேற்கொள்ளப்படும் தாக்குதல் எப்போதுமே மிகவும் ஆபத்தானது. தாக்குதல் நிகழ்ந்த 13 நிமிடத்துக் குள் கப்பல் முற்றாக நீரில் மூழ்கி விடும் என்று சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாவது முறை:-

சக்திவாய்ந்த குண்டை, நீருக்கு அடியில் சென்று கப்பலில் குறித்த பக்கத்தில் பொருத்தி விட்டு, நேரக் கணிப்பான் மூலமாகவோ அல்லது அழுத்தம் மூலமாகவோ வெடிக்கச் செய்ய முடியும். இந்தத் சந்தர்ப்பத்தில் தாக்குதலை மேற்கொள்ளுபவர் தாக்குதல் நடத்தப்படும் இடத்தை விட்டு அப்பால் செல்லக் கூடிய வாய்ப்பு உள்ளது.


கடந்த மார்ச் 22 ஆம் திகதி நாயாறுக் கடற்பகுதியில் வைத்து டோறா படகு ஒன்று தாக்கப்பட்டது.

மீண்டும் கடந்த 9 ஆம் திகதி திருகோணமலை 'அஷ்ரவ்' துறைமுகத்தில் கடற்படை யின் வழங்கற் கப்பலான 'இன்விசிபிள்' என்ற கப்பல் தாக்கப்பட்டுள்ளது.

புதிய தொழில்நுட்பத்தின் அடிப் படையில், மேற்கூறப்பட்ட இரு முறைகளில் ஒருமுறையைப் பயன் படுத்தியே கப்பல்கள் தகர்க்கப் பட்டுள்ளன.

போர் உத்திகளில் ஒன்றைப் புலி கள் தற்போது பயன்படுத்த ஆரம்பித் துள்ளனர். போர் முனைக்கு விநி யோகம் செல்வதைத் தடுக்கும் உத்தியே இதுவாகும். வடக்குப் போர் முனைக்கும் யாழ். குடாநாட்டுக்கும் துருப்புக்களை நகர்த்த கிழக்கு கடல் பகுதியையே படையினர் பயன்படுத்து கின்றனர். அத்துடன் போர் முனைக்கு ஆயுதங்கள் மற்றும் தளபாடங்கள், உணவுப் பொருள்களை நகர்த்தவும் இந்த கடற்பகுதியையே அரசு பயன்படுத்த வேண்டியுள்ளது.

அந்தக் கடற்பகுதியில் இந்தப் பணியில் ஈடுபடும் கப்பல்களை தகர்த்து, விநியோகத்தை சீர் குலைத்து போர் முனையில் இக்கட்டை உருவாக்குவதே இத் தாக்குதல்களின் நோக்கம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.



விடுதலைப்புலிகள் தாக்கி அழித்துள்ள 'இன்விசிபிள்' கப்பல், விடுதலைப்புலிகளின் மூன்று கப்பல்கள் தாக்கப்பட்ட சம்பவங்களில் உதவியுள்ளது என்று ஆய்வாளரான இந்தியக் கடற்படையின் முன்னாள் அதிகாரி வாசன் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த வேளை,

**யாழவன்**

திருகோணமலை கடற்பிரதேசத்தில் பணியாற்றிய வாசன் விடுதலைப்புலிகளின் புதிய தாக்குதல் குறித்து கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

"தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் எந்த நேரத்திலும் எதிர்பாராத திடீர் தாக்குதல்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் மீது மேற்கொள்ளக் கூடிய வல்லமை கொண்டவர்கள் என்பதையே இத் தாக்குதல்கள் காட்டுகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையில், கடற்பகுதிகளில் தமது பலத்தை உறுதிப் படுத்திக் கொள்வது மிகவும் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இத்தகைய தாக்குதல்கள் ஸ்ரீலங்கா அரச படைத்தரப்பின் மனோ வலிமையை வெகுவாகத் தாக்கக் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

குறிப்பாக தற்போது மேற்கொள்ளப் பட்டு வரும் இராணுவ முன் நகர்வுகளுக்கு கிழக்கு கடற்பிராந்தியத்தில் இருந்தே ஆயுத விநியோகம் நடைபெற்று வருகின்றது.

இத்தகைய பல தாக்குதல்கள் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கடற்படையின் மீது நடத்தப்படக் கூடும்". இப்படி வாசன் எதிர்வு கூறியுள்ளார்.

அவரின் ஆய்வின் பிரகாரம் தாக்குதல்கள் தொடரப்போகின்றன என்றே கருத வேண்டியுள்ளது.

கடலில் தாக்குதல்களை தீவிரமாக்கி களமுனையில் படையினருக்கு நெருக்கடி கொடுப்பதே புலிகளின் திட்டம் என்று கருதப்படுகின்றது.

நாலாம் கட்ட ஈழப் போரில் புதிய பரிமாணம் எடுத்துள்ள கடற்புலிகளின் கங்கை அமரன் தாக்குதல் படையணியின் உத்தி கடற்படைக்கு பெரும் சவாலாக அமையப் போகின்றது.

கடந்த இரு மாதங்களில் இரு பாரிய கப்பல்களைத் தகர்த்த இந்தப் படையணியின் அடுத்த நகர்வு படையினரின் விநியோகத்தை முடக்குமா? அல்லது ஈழப்போர் நான்கு வெடிக்க உதவப்போகின்றதா? அதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# இழுபறியில் தொடரும் மாகாண அமர்வு

இதேவேளை-

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிந்து முதலமைச்சராக பிள்ளை யான் பதவியேற்றும் முடிந்துவிட்டது. ஆனால் முதலாவது அமர்வை நடத்துவது எப்போது என்பதில் இழுபறி நிலை நீடிக்கின்றது.

அரசின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம். எல். எம். ஹிஸ்புல்லாவின் அணி தனியாக செயற்படும் முடிவால் இழுபறி நிலை தொடர்கின்றது.

ஹிஸ்புல்லாவை சமாளித்து அவரையும் உள்வாங்கி மாகாண சபை நிர்வாகத்தை சீராக முன்னெடுக்க அரசு பகீரதப்பிரயத்தனத்தில் இறங்கியுள்ளது.

இந்த முயற்சி வெற்றி பெற்று தமிழர் விவகாரத்தை பிள்ளையானும் முஸ்லிம் விவகாரத்தை ஹிஸ்புல்லாவும் கையாளக்கூடிய ஓர் இணை நிலை ஏற்படும் என செய்திகள் கசிகின்றன. ஏதோ ஒரு வகையில் மாகாண சபையின் நிர்வாகம் நகரத்தான் போகின்றது.

மாகாண சபையின் முதலமைச்சராக தமிழர் ஒருவரை நியமித்த அரசின் முடிவை இந்தியா முழுமையாக ஆதரிக்கின்றது என்று இந்தியச் செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இந்தியாவின் பங்களிப்புடன் உருவான இந்திய - இலங்கை ஒப்பந்தம் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் செயலிழந்தது. அத்துடன் வடக்கும் கிழக்கும் இரு மாகாணங்களாகப் பிரிந்தன.

இந்த நிலையில் தமிழர் ஒருவர் முதலமைச்சராகப் பதவியேற்றது, ஓரளவுக்காவது தமிழர்களுக்கு ஆறுதல் அளிக்கலாம் என இந்தியா கருதுகின்றது என்று அந்தச் செய்தியாளர் கூறுகின்றார்.

இந்தியாவின் நிலைப்பாடும் மகிந்தரின் நிலைப்பாடும் ஒரே நோக்கில் அமைந்ததால் தமிழர் ஒருவர் முதலமைச்சரானார் என்று மேலும் அவர் கூறுகின்றார்.

இழுபறிகள் முடிவுக்கு வந்து மாகாண நிர்வாகம் சீராக முன்னெடுக்கப்படுகின்றதா? இல்லையா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# அரசபடைகளுக்கு சிம்மசொப்பனமாக இருந்த பால்ராஜ்



தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரும், சமர்க்களங்களின் நாயகனுமான பால்ராஜ், இலங்கைப் படைகளுக்கு போர்முனைகளில் சிம்மசொப்பனமாக விளங்கினார்.

தமிழீழத்தின் இதயபூமியான கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த பிரிகேடியர் பால்ராஜ், 1983 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார்.

வன்னியில் மேஜர் பசீலனுடன் இணைந்து அரசபடைகளுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தினார்.

இந்தியப்படை வல்வளைப்புக் காலத்தில் வன்னியில் செயற்பட்ட இவர், மேஜர் பசீலனுடன் தமிழீழ தேசியத் தலைவர் மணலாறு மண்ணில் இருந்தபோது அவரைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் மேஜர் பசீலனுடனும் தொடர்ந்து லெப். கேணல் நவத்துடனும் செயற்பட்டார்.

இந்தியப்படை வெளியேற்றத்தின் பின்னர் வன்னிக்கான தளபதியாகி வன்னியில் தடைக்கற்களாக இருந்த அரசு படைத்தளங்களை துடைத் தழிக்கும் நடவடிக்கையில் ஈடு பட்டார்.


1990 ஆம் ஆண்டில் கொக்காவில் - மாங்குளம், கிளிநொச்சி ஆகிய வன்னியின் நடுப்பகுதியில் இருந்த அரச படைத்தளங்கள் இவர் நடத்திய தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் தகர்த்தழிக்கப்பட்டன.

முல்லைத்தீவை விரிவாக்கும் அரசபடையினரின் 'கடற்காற்று' எதிர் நடவடிக்கையையும் தலைமையேற்று வழிநடத்தினார்.

தமிழீழ தேசியத் தலைவரினால் உருவாக்கப்பட்ட முதல் சிறப்பு படையணியான சார்ள்ஸ் அன்ரனியின் முதலாவது சிறப்புத் தளபதியாக இவர் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்துக்கான ஒரே பாதையான கிளாலிப் பாதையை அரச படைகள் மூடிவிடும் நோக்கத்தில் மேற்கொண்ட 'யாழ்தேவி' நடவடிக்கையை முறியடித்து அரச படைகளின் டாங்கிகளை முதல் தடவையாக அழித்த நடவடிக்கையில் காலில் காயமடைந்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாத முத்திரை குத்தப்பட்ட ஒபாமா!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெளிவிவகாரக் கொள்கை ஏற்கனவே பேசப்படும் விடயமாக மாறியுள்ளதுடன் கடும் விவாதங்களையும் உருவாக்கியுள்ளது.

ஜனநாயகக் கட்சியின் பராக் ஒபாமா பயங்கரவாதம் குறித்து கடுமையான நிலைப்பாட்டை முன்வைக்காதவர், ஹமாஸின் ஆதரவாளர், அமெரிக்காவை பாதுகாக்க முடியாதவர் என குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோன் மக்கெய்னின் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹமாஸ் பேச்சாளர் அஹமட் யூசுவ், வானொலி நிகழ்ச்சியொன்றில் தாங்கள் ஒபாமாவை விரும்புவதாக வும், அவர் தேர்தலில் வெற்றிபெறுவார் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

ஒபாமா, ஜோன் கென்னடியை போன்று கொள்கைப் பிடிப்புள்ளவர் என தான் கருதுவதாகவும் ஹமாஸ் பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பின்னரே ஒபாமா மீது பயங்கரவாத ஆதரவாளர் முத்திரை குத்தப்பட்டது.

அமெரிக்காவில் மாற்றம் அவசியம் எனினும் ஹமாஸிடமிருந்து பாராட்டுப் பெறும் மாற்றமல்ல. ஈராக்கை கையளித்துவிட்டு ஈரான் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் மாற்றம் அமெரிக்காவிற்கு அவசியமில்லை என மக்கெய்ன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கை வகுப்பாளர்களுக்கு அச்சம் தருவதாக அமைந்துள்ள ஹமாஸ், ஈராக், ஈரான் ஆகிய மூன்றையும் தொடர்புபடுத்திய ஜோன் மக்கெய்ன் இந்த விடயங்களில் பராக் ஒபாமா நம்பமுடியாதவர் என்ற கருத்தை உருவாக்கி அவரை தனிமைப்படுத்த முயல்கின்றார்.

ஜோன் மக்கெய்னின் உரைகளில் எதிர்காலத்தில் ஈரான் ஜனாதிபதி அஹமத் நிஜாத் முக்கியமாக இடம்பெறுவார் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. பராக் ஒபாமாவை தாக்குவதற்கு அவர் இதனைப்



பயன்படுத்துவார்.

இதேவேளை ஜோன் மக்கெய்ன், தன்னை சுதந்திரமான பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்கக் கூடியவராக சித்திரிக்க முயல்கின்றார்.

2013 இற்குள் ஈராக்கில் வெற்றி பெறுவதாகவும் அவர் உறுதியளிக்கின்றார்.

ஈராக்கில் வெற்றி பெறுவது குறித்த வாக்குறுதியை அளிப்பது வாக்காளர்களை கவர்ந்திழுக்கக்கூடிய விடயம்.

ஈராக்கிலிருந்து விலகுவது என்பது தோல்வியை ஏற்றுக்கொள்வதாக கருதப்படும்.

பராக் ஒபாமாவினால் அதிகமாக வலியுறுத்தப்படும் யுத்தத்திற்கு எதிர்ப்பு என்ற கருத்தை இது பலவீனப்படுத்துகின்றது.

மிகச் சமீபகாலத்தில் அமெரிக்கப் படையினருக்கு கிடைத்துள்ள சிறிய வெற்றிகாரணமாக யுத்தத்தை எதிர்ப்பது என்பது ஆதரவற்ற விடயமாக மாறி வருகின்றது. பலரும் படைகளை விலக்கவேண்டுமென வேண்டு கோள் விடுத்த காலத்திலேயே அதனை எதிர்த்தவர் மக்கெய்ன். அதற்கான பலனை அவர் அனுபவிக்க தொடங்கியுள்ளார்.

குடியரசுக்கட்சியின் பலவீனமாக கருதப்பட்ட ஈராக் யுத்தம் அதன் வேட்பாளர் மக்கெய்னுக்கு பலமானதாக மாறியுள்ளது.

வெளிவிவகாரக் கொள்கை தொடர்பான மற்றுமொரு கருத்து அமெரிக்க ஜனாதிபதி

**- ரஜீவ் -**

புஷ்ஷிடமிருந்து வெளியாகியுள்ளது.

பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிப்பவர்களை புஷ் விமர்சித்தார்.

பயங்கரவாதத்தை அமைதிப்படுத்துவது, சாந்தப்படுத்துவது பிழையான எதிர்பார்ப்பு என்கிறார் அவர்.

புஷ் இந்தக் கருத்தை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரை இலக்காக வைத்தே தெரிவித்ததாக வெள்ளைமாளிகை தெரிவிக்கிறது. கார்ட்டர் சமீபத்தில் ஹமாஸ் தலைவர்களைச் சந்தித்திருந்தார்.

எனினும், பராக் ஒபாமா இது தன்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்றார். புஷ், மக்கெய்ன் இருவரும் அமெரிக்காவை பாதுகாப்பது குறித்து என்னுடன் விவாதிக்க தயார் என்றால் தானும் தயார் என்கிறார் ஒபாமா.

ஜோன் மக்கெய்னின் பலவீனமொன்றையும் ஒபாமா கண்டுபிடித்துள்ளார். 2006 இல் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் ஜோன் மக்கெய்ன், அமெரிக்கா ஹமாஸுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற கருத்துப்பட தெரிவித்திருந்ததை ஒபாமா சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், தனது பேச்சு திரிபுபடுத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ள மக்கெய்ன், ஹமாஸ் இஸ்ரேலை அங்கீகரிக்கும் வரை அதனுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் சர்வதேச நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் மட்டுமே அதனுடன் பேச்சுவார்த்தை என்பதே ஒபாமாவின் நிலைப்பாடுமாகும்.

ஜோன் மக்கெய்னின் வெளி விவகாரக் கொள்கைகளுடன் தொடர்புபடுத்தி அவரை மற்றுமொரு புஷ்ஷாக சித்திரிக்க ஒபாமா முயல்கின்றார். வெள்ளை மாளிகை மிகப்படுத்தி கூறுகின்றது, யுத்த வெறியர்களை தூண்டுகின்றது என்பவை அவரது குற்றச்சாட்டுக்கள்.

அமெரிக்க மக்கள் வெற்றிகுறித்த தடயங்களை கோரப்போகின்றார்கள் என பராக் ஒபாமா சுட்டிக்காட்டுகின்றார்.

புஷ்ஷின் வெளிவிவகாரக்கொள்கை புத்திசாலித்தனமானதோ, கடுமையானதோ அல்ல என்பது ஒபாமாவின் கருத்து.

ஈரான் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதை ஊக்குவிப்பதற்காக அதனுடன் தனிப்பட்ட தீவிர இராஜ தந்திர பேச்சுவார்த்தைகளை மேற் கொள்ளப்போவதாக ஒபாமா தெரிவித்தார்.

---

## அரச படைகளுக்கு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)



1995 ஆம் ஆண்டில் அரச படையினர் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட 'முன்னேறிப்பாய்தல்' முறியடிப்புத் தாக்குதலான 'புலிப்பாய்ச்சலில்' அணிகளை களத்தில் வழி நடத்தி அரசப்படையினருக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தி அந்த நடவடிக்கை முறியடிக்கப்பட்டதில் பங்காற்றினார்.

யாழ்ப்பாணத் தினை அரச படைகள் வல்வளைத்த 'சூரியக்கதிர்' நடவடிக்கை எதிர்த்தாக்குதலில் பங்காற்றிய இவர், 1996 ஆம் ஆண்டில் போராட்டத்துக்கு பெரும்பலம் சேர்த்து அரசபடையினருக்கு பேரழிவை ஏற்படுத்திய முல்லைத்தீவு படைத்தளம் அழிக்கப்பட்ட 'ஓயாத அலைகள் - 1' நடவடிக்கையின் ஒருங்கிணைப்புத் தளபதியாக செயற்பட்டார்.

வவுனியாவிலிருந்து ஸ்ரீலங்கா படைகள் மேற்கொண்ட 'வன்னி விக்கரம்' நடவடிக்கையை முறியடித்து படையினரின் உலங்கு வானூர்தியைச் சுட்டு வீழ்த்தி படையின ருக்கு பேரிழப்பை ஏற்படுத்திய சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தாக்குதல்களை வழிநடத்தினார்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் படைத்தளம் மீதான 'ஆகாய - கடல் வெளி'ச் சமரில் வன்னிப்பகுதி ஊடாக நகர்ந்து சுற்றுலா விடுதி படைமுகாம் தகர்ப்பு நடவடிக்கை இவர் தலைமையில் நடத்தப்பட்டது.மணலாறில் அரச படைகள் மேற் கொண்ட 'மின்னல்' நடவடிக்கை முறியடிப்புத் தாக்குதலையும் வழி நடத்தியிருந்தார்.

இதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

வன்னியை அரச படையினர் வல்வளைத்த 'ஜெயசிக்குறு' நடவடிக்கை எதிர் நடவடிக்கையில் தொடக்ககாலத்தில் செயற்பட்ட இவர், பின்னர் கிளிநொச்சியில் நிலைகொண்டிருந்த படையினர் விரட்டியடிக்கப்பட்ட 'ஓயாத அலைகள் - 2' நடவடிக்கையின் வெற்றிக்கு உறுதுணையாக ஊடறுப்புத் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தினார்.

தொடர்ந்து 'ஓயாத அலைகள்-3' நடவடிக்கையில் அரச படைகளின் மிகப் பெரும் தளமான ஆனையிறவை வெற்றி கொள்வதற்காக குடாரப்பில் பெரும் அணிக்கு தலைமையேற்று கடல்வழியாகச் சென்று தறையிறளங்கி இத்தாவிலில்



ஊடறுத்து 34 நாட்கள் அரச படையினரின் முற்றுகைக்குள் நின்று எதிரிகளுக்குப் பெரும் இழப்புகளை ஏற்படுத்தி ஆனையிறவு வெற்றிக்கு உறுதுணையாக நின்றார்.

அப்போது அரசபடை மாறி மாறி 4 தளபதிகளை தனது சிறப்புப்படைக் கொமாண் டோக்களுக்கு நியமித்து பெரும் தாக்குதலை நடத்திய போதும், ஆனையிறவு வெல்லப்பட்டு பளையைக் கைப்பற்றி விடுதலைப் புலிகள் வந்து கைகுலுக்கும் வரை இத்தாவிலில் அரச படையினரை திணறடித்தவர் இவர்.

2001 ஆம் ஆண்டில் முகமாலையில் இருந்து படையினர் மேற்கொண்ட 'தீச்சுவாலை' என்ற பெரும் தாக்குதலையும் முறியடித்ததில் முதன்மைப் பங்கை வகித்திருந்தார்.

போர் நிறுத்த காலத்தில் மட்டக்களப்பின் வாகரைப் பகுதியில் நின்று செயற்பட்ட இவர், அங்கு ஆழிப்பேரலையில் அகப்பட்டுத் தப்பினார். பின்னர் வன்னிக்குத் திரும்பிய இவர், போராளிகளுக்கு பயிற்சி கொடுத்து வளர்த்தல் மற்றும் போரியல் உத்திகளை கற்றுக்கொடுத்தல் ஆகிய முதன்மைச் செயற்பாடுகளில் ஈடுபட்டார்.

அமைதிக்காலத்தில் நோய்க்காக சிகிச்சை பெற சிங்கப்பூர் சென்றிருந்தார். போராளிகளினதும் மக்களினதும் அன்பையும் மதிப்பையும் பெற்றவராக அரசபடைகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்த பிரிகேடியர் பால்ராஜின் இழப்பில் உலகத்தமிழினம் துயருற்று இருக்கின்றது.

# மகிந்த அரசின் துரோகத்தனமும் முஸ்லிம் தலைமைகளின் கபடத்தனமும்

அஸ்லம் எஸ். மௌலானா

அரசுத் தலைமை வாக்குறுதி அளிதததின் பிரகாரம், கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி முஸ்லிம் தரப்புக்குத் தரப்படவில்லை என்கின்ற கவலையும் கண்டனமும் சீற்றமும் முஸ்லிம் மக்களிடையே தணிவதற்கு முன்பதாகவே ஹிஸ்புல்லா அணியினர் மீளவும் அரசுத்தரப்புடன் இணைந்து மாகாண அமைச்சுப் பதவியொன்றை ஏற்பதற்குத் தயாராகி வருகின்றனர் என அறியமுடிகின்றது.

இதன்மூலம் ஹிஸ்புல்லா அணியினரின் தனித்தியங்கும் தீர்மானமும் மகிந்த அரசுக் கெதிரான போராட்டமும் கிழக்கின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான திட்டமும் வெறும் புஸ்வாணமாகிவிட்டன என்றே கூறவேண்டியுள்ளது.









## மீறப்பட்ட உத்தரவாதம்

நடந்துமுடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது அரசாங்கத் தரப்பினரால் வழங்கப்பட்ட உத்தரவாதம் மீறப்பட்டு - முதலமைச்சர் நியமனம்தனக்குத் தரப்படாமல் பிள்ளையானுக்கு அப்பதவி கொடுக்கப்பட்டதனால் கடும் அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்திருக்கும் முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் தனது அரசியல் சதுரங்க விளையாட்டுகளை நியாயப்படுத்தி - எதிர்கால அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுப் பத்திரங்கள் தாக்கல்செய்யப்பட்டது முதல் இன்று வரையான ஒன்றரைமாத காலப்பகுதிக்குள் மூன்றுவகையான அரசியல் நிலைப்பாடுகளுக்கு விளக்கமளிக்க வேண்டியதேவை ஹிஸ்புல்லாவுக்கு எழுந்திருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது தேர்தல் வியூகத்தை எவ்வாறு வகுத்துக்கொள்ளப்போகிறது என்று முழு உலகமுமே எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தபோது ஹிஸ்புல்லா தன்னோடு மேலும் இருவரைச் சேர்த்துக்கொண்டு இறுதிநேரத்தில் அரசுப்பக்கம் கட்சி தாவினார்.

இதனால், நிலைகுலைந்துபோன முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் கட்சித் தவிசாளர் மற்றும் செயலாளர் நாயகம் சகிதம் எம்.பி. பதவியைத் துறந்து மாகாண சபைத் தேர்தலில் தாமே களமிறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

## மேடைக்கோஷம்

இந்தநிலையில், தாம் முஸ்லிம் காங் கிரஸிலிருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியில் இணைந்து போட்டியிடுவதற்கான ஒரேயொரு காரணத்தை ஹிஸ்புல்லா, முஸ்லிம்களுக்கு விவரித்து வந்தார்.

அவரது அந்த முதலாவது நிலைப்பாட்டிற்காக அவர் தெரிவித்த ஒரேயொரு காரணம் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை முஸ்லிம் சமூகம் தமதாக்கிக்கொள்ளவேண்டும் என்பதேயாகும்.

கிழக்கின் முதலமைச்சர் பதவியை முஸ்லிம் ஒருவர் அடைந்துகொள்ள வேண்டுமாயின் அரசாங்கத் தரப்புடன் இணைந்துபோட்டியிடுவதே சிறந்த இலக்கு எனவும், முஸ்லிம் காங்கிரஸ் அதற்கு முன்வரவில்லை எனவும், முஸ்லிம் ஒருவர் அப்பதவிக்கு வருவதில் ரவூப் ஹக்கீமுக்கு விருப்பமில்லை எனவும் ஹிஸ்புல்லா மற்றும் முஸ்லிம் அமைச்சர்கள் மேடைகளில் முழங்கி வந்தனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசுத் தரப்பு சுதந்திர முன்னணியில் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் சமூகத்தினருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என்று ஜனாதிபதி உத்தரவாதம் தந்திருப்பதால் முஸ்லிம்கள் வெற்றிலைக்கே வாக் களிக்க வேண்டும் என்பதுதான் அவர் களது மேடைக்கோஷமாக இருந்துவந்தது.

## பகிரங்க வாக்குறுதி

''ஐ.தே.க. - மு.கா.கூட்டணி வெல்லப்போவதுமில்லை, அதில் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகப் போவதுமில்லை. ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியே நிச்சயம் வெற்றியீட்டப் போகிறது. அதில் 'முஸ்லிம் உறுப்பினர்கள் அதிகம் தெரிவுசெய்யப்பட்டுவிட்டால் ஹிஸ்புல்லா முதலமைச்சராக நியமனம் பெறுவதில் எவ்வித சந்தேகமும் கிடையாது'' என்று அவரும் முஸ்லிம் அமைச்சர்களும் உரத்துப் பேசி வந்தனர்.

இதற்கு மேலதிகமாக தென்னிலங்கையிலிருந்து படையெடுத்து வந்த அரசின் முன்னணி அமைச்சர்கள் பலரும் இதனை உறுதிப்படுத்தி பிரசாரத்தில் ஈடுபட்டதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தனது உறுதிமொழியைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தார்.

இத்தகைய வாக்குறுதியின் பேரிலேயே முஸ்லிம்களுள் கணிசமான தொகையினர் சுதந்திர முன்னணிக்கும் அதில் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்களுக்கும் வாக்களித்துள்ளனர். பிள்ளையானின் கட்சியினர் தமிழ்ப் பிரதேசங்களில் ஆறு ஆசனங்களையே பெறமுடிந்திருக்கிறது. எனினும், முஸ்லிம் தரப்பு எட்டு ஆசனங்களைப் பெற்றிருக்கிறது.

## பஸிலின் தந்திரம்

இதன் பிரகாரம் அரசுத்தலைமை உத்தரவாதம் வழங்கியபடி ஹிஸ்புல்லாவே முதலமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கவேண்டும். எனினும், பல்வேறு காரணங்களின் நிமித்தம் அப்பதவி பிள்ளையானுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் தரப்பினருக்கு அவ்வாறான உத்தரவாதம் வழங்கப்பட்டபோதிலும், அதற்கு முன்னரே மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலுக்கான உடன்படிக்கையின் பிரகாரம் கிழக்கின் முதலமைச்சர் பதவியைப் பிள்ளையானுக்குக் கொடுக்கவேண்டிய கடப்பாடு மஹிந்த அரசுக்கு இருந்துள்ளது.

எனினும், கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தன்னோடு கூட்டணி அமைக்க முன்வராத முஸ்லிம் காங்கிரஸை உடைத்துவிடுவதன் மூலம் அக்கட்சியை பலமிழக்கச் செய்வதன் ஊடாக ஐ.தே.க.கூட்டணியில் வாக்குச் சரிவை ஏற்படுத்தி, தமது சுதந்திர முன்னணியின் வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்திக்கொள்ளும்நோக்கில் ஹிஸ்புல்லா அணியைப் பிரித்தெடுப்பதற்காகவே - அவ்வணிக்கு மேற்படி உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கிறது. முன்னதாக பஸில் ராஜபக்ஷவே ஹிஸ்புல்லாவுக்கு இந்தக் கயிற்றைக் கொடுத்துள்ளார் எனவும் அவரது தந்திரோபாய ஆலோசனையின் பிரகாரம் ஒப்புக்காகவே ஜனாதிபதியும் அப்படி வாக்குறுதியளித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஏமாற்றம் ஹிஸ்புல்லாவுக்கு மட்டுமல்ல

முஸ்லிம் காங்கிரஸின் இணைவு இல்லாத சுதந்திரக்கூட்டமைப்பில் நிச்சயம் முஸ்லிம் உறுப்பினர்கள் அதிகம் தெரிவுசெய்யப்பட வாய்ப்பில்லை என்ற நம்பிக்கையிலும் பிள்ளையான் குழுவே கூடிய ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் என்கின்ற எதிர்பார்ப்பிலுமே பஸில் ராஜபக்ஷ முதலமைச்சர் பொதியை ஹிஸ்புல்லாவுக்கு அவிழ்த்துக் காட்டியுள்ளார்.

அதனை முழுமையாக நம்பிய அவரும் - நப்பாசையில் பல்டி அடித்து - முஸ்லிம் அமைச்சர்களின் துணையுடன் முஸ்லிம் மக்களைத் தவறாக வழிநடத்தியுள்ளார் என்கின்ற செய்தி முஸ்லிம் சமூகத்திற்கு அதிர்ச்சிகரமாகவே இருக்கும்.

எவ்வாறாயினும் ஜனாதிபதியும் அரச மேல்மட்டத்தினரும் முஸ்லிம்களுக்கு அளித்த பகிரங்க உத்தரவாதத்தை மீறியிருப்பதானது பெரும் துரோகமாகவே பார்க்கப்படு கிறது. இது தொடர்பில் அமைச்சர் அதாவுல்லாவும் வன்மையாகக் கண்டிக்கப்படுகிறார்.

## அதாவுல்லா மீது காட்டம்

தேர்தல் முடிந்த கையோடு அந்த வாக்குறுதி மீறப்பட்டு முஸ்லிம்களின் வாக்குகளுக்கு எவ்வித பெறுமானமும் இல்லாமல் செய்யப்பட்டிருப்பதோடு அவர்களது நம்பிக்கையும் வீணடிக்கப்பட்டிருக்கிறது.

''இது முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும். அரசின் கபடத்தனமான இந்தச் செயற்பாட்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. முஸ்லிம்களின் அபிலாஷைகளை ஒட்டுமொத்தமாகப் புறந்தள்ளிவிட்டு ஆயுதக்குழுவிடம் கிழக்கின் ஆட்சியைத் தாரைவார்த்திருப்பதானது மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும்.

அளிக்கப்பட்ட உறுதிமொழியை மீறி, நீதி, நியாயத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, ஜனாதிபதி மேற்கொண்டிருக்கும் தீர்மானம் பெரும் துரோகத்தனமாகும். இதன்மூலம் கிழக்கு முஸ்லிம்களை அவர் ஆயுதக் குழுவொன்றுக்கு அடிமைப்படுத்தி விட்டார்'' என முஸ்லிம் அமைப்புகள் கொதிக்கின்றன.

ஜனாதிபதியின் இத்தகைய முஸ்லிம் விரோத சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் அமைச்சர் அதாவுல்லா கண்மூடித்தனமாகத் துணைபோயிருப்பது குறித்து முஸ்லிம்கள் பெரும் சந்தேகம் கொள்வதோடு அவரது சுயநல அரசியலுக்கான இத்தகைய நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்து வருகின்றனர்.

## கைநழுவிப்போன ஆட்சி அதிகாரம்

'முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக நியமித்துக்கொள்வதற்கு வாய்ப்பாகக் கிடைக்கப்பெற்ற எட்டு உறுப்பினர்களையும் பயன்படுத்தி அரசுத் தலைமையுடன் பேரம் பேசுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் அமைச்சர் அதாவுல்லாவின் தன்னிச்சையான செயற்பாடு காரணமாகவே தோல்வியடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமூக நலனை முற்றாகப் புறக்கணித்துவிட்டு, தனது அரசியல் லாபத்திற்காக - நிபந்தனை எதுவுமின்றி பிள்ளையானை முதலமைச்சராக நியமிப்பதற்கு தனது கட்சியின் நான்கு உறுப்பினர்கள் சார்பிலும் அமைச்சர் அதாவுல்லா வழங்கிய எழுத்துமூலமான உத்தரவாதத்தைச் சாதகமாகப் பயன்படுத்தியே ஜனாதிபதி தனது கபடநாடகத்தை அரங்கேற்றியுள்ளார்.

''முஸ்லிம்களுக்குஒருபோதும் தனியலகு கிடைக்கப்போவதில்லை. சமாதானப்பேச்சு மேசையில் தனித்தரப்பும் கிடைக்கமாட்டாது. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்படுவதன்மூலமே முஸ்லிம்கள் கிழக்கை ஆட்சி செய்யமுடியும்'' என்று மேடைக்கு மேடை முழங்கிவந்த அதாவுல்லா, முஸ்லிம் சமூகத்திற்குக் கிடைக்கப்பெறவிருந்த அந்த ஆட்சி அதிகாரத்தை ஆயுதக்குழுவொன்றிடம் ஒப்படைப்பதற்கு ஒப்புதல் வழங்கியதன் மர்மம் என்ன என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது. வன்னிப் புலிகளைக் கடுமையாக எதிர்த்து வருகின்ற அமைச்சர் அதாவுல்லா மட்டுப் புலிகளிடம் கிழக்கின் அதிகாரத்தைக் கையளிப்பதற்குத் துணைபோனதன் பின்னணி என்ன என்பதை முஸ்லிம் சமூகத்திற்கு அவர் தெளிவுபடுத்தியாக வேண்டும் என்று தேசிய கவுன்ஸில் கேட்டுள்ளது. அது கல்முனையில் கூடி அமைச்சர் அதாவுல்லா மீதான கண்டனத் தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளது. அதேவேளை கிழக்கு மாகாணம் பூராவும் அவரை கண்டித்து போஸ்டர்கள்

(23 ஆம் பக்கம் பார்க்க)

சுடர்ஒளி
மே.25 - மே.31 2008
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

## இலங்கை படித்த பாடம்

ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலுக்கான உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் இலங்கை தோல்வி அடைந்துள்ளது. 47 உறுப்பினர்களைக் கொண்ட மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு நான்கு ஆசிய நாடுகளின் உறுப்பினர்கள் உட்பட 15 உறுப்பினர்களைக் தெரிவு செய்யும் வாக்களிப்பு கடந்த புதன்கிழமை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. பொதுச் சபையில் இடம் பெற்றது.

ஆசிய நாடுகளுக்கான நான்கு வெற்றிடங்களுக்கு இலங்கை உட்பட்ட ஆறு நாடுகள் போட்டியிட்டன. 192 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச்சபையில் 101 உறுப்பினர்களின் ஆதரவை மட்டும் இலங்கை பெற்றதால் மனித உரிமைகள் கவுன்ஸிலில் உறுப்புரிமை பெறுவதை இலங்கை இழந்துள்ளது. உறுப்புரிமை பெறத்தவறிய மற்றைய ஆசிய நாடு, சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தோனேஷியாவிலிருந்து பிரிந்து தனிநாடான கிழக்கு திமோர்.

மனித உரிமைகள் கவுன்ஸிலில் உறுப்புரிமைக்கு இலங்கை போட்டியிட்டு உலக நாடுகளினால் நிராகரிக்கப்பட்டுள்ளமை, கடந்த இரண்டு வருட கால மகிந்தரின் ஆட்சிக்கு பெரும் பின்னடைவு என்பதில் சந்தேகம் இல்லை.

மனித உரிமைகள் கவுன்ஸிலின் சாசனத்தில், மனித உரிமைகள் பாதுகாப்புத் தொடர்பில் 27 விதப்புரைகள் உள்ளன. அனைத்து நாடுகளும் இவற்றை நூறு வீதம் பின்பற்றும் என்று கூற முடியாது.

சிறு சிறு தவறுகள் செய்யும் நாடு களை கவுன்ஸில் பெரிதுபடுத்து வதில்லை. ஆனால், சில நாடுகள் மோச மாக நடந்து கொள்கின்றன. இந்த மோசமான நாடுகள் பட்டியலில் இலங்கையும் உள்வாங்கப் பட்டிருப்பது சர்வதேச அரங்கில் இலங்கைக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

இலங்கையில் கடந்த இரண்டு வருட காலமாக ஆள்கடத்தல்கள், படுகொலைகள், தாக்குதல்கள், ஜனநாயக உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன. இதனை எவரும் மறுக்க முடியாது . ஆனால், இலங்கை அரசாங்கம் இவை குறிந்து அசமந்தப் போக்கையே கடைபிடித்து வருகின்றது. இவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் இல்லை.

தலைநகரில் பட்டப்பகலில் அத்தனை காவல் நிலையங்களுக்கும் மத்தியில் இடம் பெறும் ஆள்கடத்தல்களுக்கு தான் பொறுப்பு இல்லை என்று அரசாங்கம் கூறினால் அதனை சர்வதேசம் நம்ப முடியுமா?

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் படுமோசமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் உறுப்புரிமைக்கு அரசாங்கம் போட்டியிட்டதும் அதற்கு ஆதரவு திரட்டியதும் வெறும் கேலிக்கூத்து என்று ஐ.தே.க. குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி' என்ற நிலையில் மனித உரிமைக் கவுன்ஸிலில் உறுப்புரிமைக்கு இலங்கை போட்டியிடப்போய், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து உலக நாடுகள் முழுவதும் மிகவும் கீழ்த்தரமாக பிரசாரப்படுத்தப்பட்டுவிட்டது.

நோபல் பரிசு பெற்றவர்களான அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டர், தென் ஆபிரிக்கா அதி மேற்றிராணியார் டெஸ்மண்ட்டுட்டு, ஆர்ஜென்டீனாவின் அடோல்போ பெரெஸ் எஸ்கியூவெல் ஆகியோர் இலங்கைக்கு வாக்களிக்க வேண்டாம் என்று விடுத்த வேண்டுக்கோள் -

அனைத்து மனித உரிமை அமைப்புகளின் இலங்கைக்கு எதிரான அறிக்கைகள்-

சர்வதேச அமைப்புகள் இலங்கையின் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக வெளியிட்ட கண்டனங்கள் - நிச்சயமாக இலங்கைக்கு நன்மதிப்பை கொடுக்கப் போவதில்லை.

மனித உரிமை மீறல்களுக்கு அரசுத் தலைவர்கள் சிலர் யுத்தத்தை ஒரு காரணமாகக் காட்டுகிறார்கள். ஆனால் பாகிஸ்தான் அரசாங்கம் இராணுவப் புரட்சிகள், கிளர்ச்சிகள், குண்டு வெடிப்புகள் மத்தியிலும் மனித உரிமைகளை இயற்ற அளவு பாதுகாத்து வருகிறது. ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 114 நாடுகளின் ஆதரவைப் பெற்று உறுப்புரி மையும் பெற்றுள்ளது.

இலங்கை அரசாங்கம் இதனை ஒரு பாடமாகக் கருதி மனித உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# மனித உரிமைகள் கவுன்ஸிலிலிருந்து தோற்கடிக்கப்பட்ட இலங்கை!

சர்வதேச யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற அல்லது உணராத இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்த முதலாவது பாடமாக மனித உரிமை கவுன்ஸிலிருந்து அது



வெளியேற்றப்பட்ட செயல் அமைந்துள்ளது.

இலங்கை மனித உரிமை கவுன்ஸிலில் மீண்டும் இடம்பிடிக்க அனுமதிக்கக் கூடாது என்பது குறித்து மனித உரிமைபணியாளர்களிடம் காணப்பட்ட தீவிர உணர்வு இலங்கை அரசாங்கம் தன்மீது எவ்வளவு சேற்றினை கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் அள்ளி பூசிக் கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்தியது.

முதலில் இலங்கையைச் சேர்ந்த அரச சார்ப்பற்ற அமைப்புகளே இலங்கைக்கு மீண்டும் கவுன்ஸிலில் இடமளிக்கக் கூடாது என்ற வேண்டுகோளை விடுத்தன.



இந்த வேண்டுகோள் இலங்கைக்கு எதிரான தீவிர போர்கொடியாக பரிணமித்து சர்வதேச பிரமுகர்கள் சிலரின் கவனத்தையும் ஈர்த்தது.

சர்வதேச மனித உரிமை காண்காணிப்பகம், இலங்கையை தோற்கடிக்க வேண்டுமென்ற பிரசாரத்திற்காக தனியானதொரு இணை த்தளத்தையே உருவா கியிருந்தது.

சர்வதேச மன்னிப்புச் சபை, இலங்கையின் மனித உரிமை நிலைவரம் எவ்வாறு காணப்படுகின்றது என தனது இணையத்தில் பட்டியலிட்டது.

கடந்த வருடம் பெலாரஸ் தோற்கடிக்கப்பட்டது போன்று இம்முறை இலங்கை தோற்கடிக்கப்பட வேண்டுமென்பதில் அவை

**அனாமிக்கா**

உறுதியாக இருந்தன.

மனித உரிமை கவுன்ஸிலில் தனக்கு கிடைத்த ஆசனத்தை தன் மீதான குற்றச்சாட்டுகளை தவிர்ப்பதற்கு இலங்கை பயன்படுத்துகின்றது என்பதே இவர்களின் முக்கிய குற்றச்சாட்டாக அமைந்திருந்தது.

இலங்கைதோற்கடிக்கப்பட்டுள்ளமை மனித உரிமை குறித்து அக்கறை கொள்ளும் மனிதர்கள் உள்ளதை புலப்படுத்துகின்றது என மனித உரிமை ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் குறித்து கேள்வியெழுப்பப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் உள்விவகாரத்தில் தலையிடுகிறார்கள் என்ற கோஷம் இலங்கையிலிருந்து எழுவது வழமை.

எனினும் மனித உரிமை கவுன்ஸிலில் தோற்கடிக்கப்பட்டுள் ளதன் மூலம் உள்விவகாரம் என்பதன் அர்த்தம் எவ்வளவு தூரம் மட்டுப்படுத்தப்பட்டது என்பதை இலங்கை உணரும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி. எஸ். பி. சலுகை குறித்த சர்ச்சையும் இதனையே புலப்படுத்தி நிற்கிறது.

மனித உரிமைகள் குறித்த அக்கறைகள் எல்லைகளைக் கடந்து வியாபித்துள்ளன.

அரசசார்பற்ற அமைப்புகளின் செல்வாக்குமிக்க இன்றைய உலகில் இரும்புத்திரைகள் என்பன அர்த்தமற்றவை.

மனித உரிமை கவுன்ஸிலிருந்து இலங்கை வெளியேற்றப்பட்டமைக்கு ஐக்கிய நாடுகளுடன் நெருக்கமான அரச சார்பற்ற அமைப்புகள் திருப்தி வெளியிட்டுள்ளன.

கடந்த வருடம் பெலாரஸை போன்று இவ்வருடம் இலங்கையும் அகற்றப்பட வேண்டுமென்பது குறித்து உறுதியாக செல்வாக்கு மிக்க சில நாடுகளின் ஆதரவுடன் மீண்டும் மனித உரிமை கவுன்ஸிலில் இடம்பெறலாம் என்ற இலங்கையின் எதிர்பார்ப்பும் தகர்ந்துள்ளது. மனித உரிமை கவுன்ஸிலின் வாக்கெடுப்பிற்கு சில தினங்களிற்கு முன்னர் ஜப்பானிய பிரதிநிதியொருவர் தெரிவித்திருந்த கருத்தும் அமெரிக்காவின் மௌனமும் பல கேள்விகளை எழுப்புபவையாக அமைந்துள்ளன.

மே 13 ஆம் திகதி இடம்பெற்ற மனித உரிமை கவுன்ஸிலின் இலங்கை குறித்த மீளாய்வுக் கூட்டத்தில் இந்தியா வகித்த பங்களிப்பு தமிழ் மக்களின் மனங்களை காயப்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது.


இலங்கை கடுமையான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதை தடுக்கும் கவசமாக இந்தியா செயற்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்து இந்தியா இதுவரை எதுவித அக்கறைகளையும் வெளியிடாததும் குறிப்பிடத்தக்கது.

மனித உரிமை கவுன்ஸிலிலிருந்து இலங்கை வெளியேற்றப் பட்டதினால் கிடைத்த வெற்றியை பலப்படுத்த வேண்டிய கடப் பாடும் உருவாகியுள்ளது.

இதற்கு தீவிர பிரசாரமும் மனித உரிமை ஆர்வலர்களை இனம் கண்டு அவர்களுடன் கைகோப்பதும் முக்கியமாகியுள்ளது.




கொழும்பு என்ற சொல் சிங்களமும் அல்ல தமிழும் அல்ல. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இலங்கையை போர்த்துக்கீசர் ஆண்டபோது கிறிஸ்டோபர் கொலம்பஸின் நினைவாக நகருக்கு கொலம்போ எனப் பெயரிட்டனர். அப்பெயரே பின்னர் கொழும்பு ஆனது. 10லட்சம்பேர் கொழும்புத் தலைநகரில் வாழ்கின்றனர்.

## தகவல் டொட் கொம்

✱ காற்றில் கலந்துள்ள தூசி துணிக்கைகளாலும்,நைட்ரஜன் அணுக்களாலும் சூரிய ஒளிக்கதிரில் உள்ள ஒளிஅலைகள் சிதறடைகின்றன. நீலநிறம் அதிக சிதறவடைவதால் அது வானம் முழுவதும் நிரம்பி நீலநிறமாக மாற்றுகிறது.

✱ இரண்டு தனித்தனி பிம்பங்களையும் மூளையின் பார்வை மண்டலம் 'மிக்ஸ்' செய்து முப்பரிமாண அனுபவத்தை எமக்கு வழங்குகின்றது. அதுமட்டும்மல்ல தலைகீழ் பிம்பதையும் நேராகவும் மாற்றித்தருகின்றது.


✱ நட்சத்திரங்களுக்கு பத்து பில்லியன் ஆண்டு வாழ்நாள் உள்ளது. வானத்தில் நாம் காணும் விண்மீன்கள் ஒட்டுமொத்தமாக ஒரே சமயத்தில் தோன்றாததினால் அவை ஒட்டுமொத்தமாக அழியவும் மாட்டா. தினமும் அண்ட வெளியில் ஏதாவது ஒரிடத்தில் ஒரு விண்மீன் மறைந்து கொண்டிருக்கிறது.

✱ உடல் வெப்பம் நாக்கிலிருந்து ஆவியாவதன் மூலம் தணிக்கப்படுகின்றது. இரத்தத்தின் மிகுதியான வெப்பம் நாக்கில்வந்து குளிர்ந்து தணித்துக் கொள்கிறது.




மகாராஷ்டிராவில் அகமது நகருக்கு அருகில் அவுரங்காபாத் அருகே உள்ள தில்ரஸ்பானு என்ற ராணியின் சமாதி இரண்டாவது தாஜ்மஹால் என அழைக்கப்படுகிறது. அவுரங்கசீப் ஆட்சி செய்த நகரமே அவுரங்காபாத் என அழைக்கப்பட்டது. அவுரங்கசீப் தமது மனைவி தில்ரஸ்பானுவின் கல்லறையை தாஜ்மஹால் வடிவிலேயே கட்டினார்.தொலைவில் இருந்து பார்க்கும் போது இது தாஜ்மஹால் போன்றே காட்சியளிக்கும்.

## கற்கால உணவு உண்டால்




கற்கால மனிதர்களின் உணவான இலந்தை, உலர்ந்த பழங்கள், கொழுப்பற்ற இறைச்சி, மீன் ஆகியவை சாப்பிட்டால் இதய சம்பந்தமான நோய்கள் வரும் ஆபத்து குறையும் என்பது ஆய்வில் தெரியவந்தள்ளது.

சுவீடனில் உள்ள கைரோம்லிம்ஸ்கா என்ற அமைப்பு, சமீபத்தில் நடத்திய ஆய்வில் தெரியவந்ததாவது: நம்முன்னோர்கள் விவசாயத்திற்கு முன், பால்சம்பந்தமான உணவுகள் மற்றும் செயற்கைச் இனிப்புக்கலக்காத உணவுகளை உட்கொண்டனர். இதனால், இவர்கள் இதயநோய் ஆபத்து இன்றி உயிர்வாழ்ந்தனர். இதுகுறித்து சமீபத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கற்கால மனிதர்களின் உணவு 20பேருக்கு மூன்று வாரம் வழங்கப்பட்டது. புதிய பழங்கள், காய்கறிகள், கொழுப்பற்ற இறைச்சி, உப்பில்லாத மீன், போத்தலில் அடைக்கப்பட்ட தக்காளி, எலுமிச்சை சாறு, பால், சீனியற்ற கோப்பி அல்லது ரீ மூன்று வாரங்களுக்கு கொடுக்கப்பட்டது. தினமும் இரண்டு உருளைக்கிழங்கு மட்டும் அனுமதிக்கப்பட்டது. பால்பொருட்கள், உப்பு, வேர்க்கடலை, பாஸ்டா, அல்கஹோல்,சீனி, பழரசங்கள் முதலியவை உண்பது நிறுத்திவைக்கப்பட்டது. மூன்றுவாரங்களுக்குப் பிறகு அவர்களின் நிறை 2.5கிலோ குறைந்திருந்தது. உயர்இரத்த அழுத்தம் சராசரியாக 5சதவிதம் குறைந்தும் இரத்தத்தில் சோர்வை உண்டாக்கும் இரசாயனங்கள் 72சதவீதம் குறைந்தும் காணப்பட்டன. பால்பொருள்கள் சேர்த்துக்கொள்ளாத காரணத்தால் இவர்களது உடலில் கல்சியம் சத்து குறைவாக இருந்தது கண்டறியப்பட்டது.

## எண்ணெய் வாங்கும் முன்பு...



ஒரே வகையான உணவு எண்ணெய்களைப் பயன்படுத்தாமல் அவ்வப்போது எண்ணெயின் வகையையும் மாற்றவேண்டும் என உணவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். சமையலுக்கு பாம் எண்ணெய்,கடலை எண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், நல்லெண்ணெய் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. வடஇந்தியாவில் கடுகு எண்ணெய் பயன்படுத்தப்படுகின்றது. தவிட்டு எண்ணெயும்,பருத்தி எண்ணெயும் பாவனையில் உள்ளன. இது இதயத்தைக் காப்பதால் அமெரிக்காவின் இதய நோய் சிறப்பு மருத்துவர்கள் பருத்தி எண்ணெயை பரிந்துரை செய்கின்றனர்.

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

வேலைமுடிந்து வீடுதிரும்பும் வேளை வேல் அமுதனைச் சந்திக்கலாம்! திங்கள். புதன். வெள்ளி நாட்களில் மாலை நேரத்திலும்: சனி. ஞாயிறு நண்பகலிலும் வேல்அமுதன் வேலை செய்கின்றார்! மேலதிக விபரங்களைத் திங்கள். புதன். வெள்ளிமாலை சுயதெரிவுமுறை முன்னோடி தனிநபர் நிறுவுநர் மூத்தபுகழ்பூத்த சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல்அமுதனிடம் விசாரித்தறிகுக! வேல் அமுதனின் கொழும்பு நேரடித் தொலைபேசி: 2360488, 2360694, 4873929.

## தேவை

வீட்டுப் பணிப்பெண், காவலாளி, சாரதி, பராமரிப்பாளர், சமையற்காரர், வீட்டுப்பையன் கொழும்பு பங்களாக்களில் வேலைக்கு தேவை. சம்பளம் 8000/= - 12000/= இடையில். அரச அனுமதி பெற்ற சமித் ஏஜென்சி, 53/F கொஸ்இன்னவத்தை, கட்டுவாவல, பொரலஸ்கமுவ. 011 4868554, 0115620304 புறக்கோட்டை, பிலியந்தலை, 120, வீதி கட்டுவாவல 19ஆம் கட்டை சந்தியில் இறங்கவும்.

---

கொழும்பில் வீட்டு வேலை செய்வதற்கு பெண் வேலை ஆள் ஒருவர் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். அன்பாக கவனித்துக் கொள்ளப்படும். Tel: 071 2860606.

---

தாதிப்பணியாளர்களும் கொம்யுனிகேசன் வேலைதெரிந்தவர்களும் உடன் நிரந்தர வேலைக்குத் தேவை. ஆரம்பச் சம்பளம் 8000/=. உங்களை சிபாரிசு செய்யக்கூடிய இருவரது விபரங்களை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். Radaan Medi - Calls, No.7 'C' Hampden Lane, Colombo 6.

---

கணவன், மனைவி மட்டும் வசிக்கும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள புதிய வீட்டில் வேலைகளுக்கு உதவுவதற்கு 25 வயதிற்கு உட்பட்ட நல்ல தோற்றமுள்ள பெண்பிள்ளை உடனே தேவை. மலையக பிள்ளைக்கு முதலிடம். கவர்ச்சியான சம்பளம். Tel:2576099, 077 4170020.

---

Computer tele Package இயக்கக்கூடிய Accounts Clerk (Girl) ஒருவரும் Imports சம்பந்தமாக வேலைசெய்யக்கூடிய Imports Clerk (Girl) ஒருவரும் தேவை. Call For Appointments 2399832, 0775037506 6. சனிக்கிழமைகளில் நேரில் வரவும். இல.121, Peoples Park, Pettah. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

---

தையற்காரர். கடையில் வேலை செய்யக்கூடியவர் தேவை. தங்குமிட வசதி உண்டு. கவர்ச்சிகரமான சம்பளம் தரப்படும். 0777682275, 0779026265, 0776570896.

---

Communication & Book shopபிற்கு கணிதபாடத்தில் திறமையுள்ள O/L படித்த சுறுசுறுப்பான திருமணமாகாத இளம்பெண் தேவை. கொழும்பு 15 ஐச் சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது. மலையகஞ்சாதைச் சார்ந்தவர்களுக்கு தங்குமிட வசதியுமுண்டு. Tel: 011 2540990, 0777 325316.

---

சேட் ரவுசர் வெட்டி தைக்கக்கூடிய ஆண்களும், சாறி பிளவுஸ் தைக்கக்கூடியவர்களும் தேவை. பெண்பில் கிளார்க் ஒருவரும் தேவை. Tel:2364020, 2360 792.

---

சிங்கள உணவுவகைகள் தயாரிக்கக்கூடிய சமையலாள், சமையலாள் உதவியாளர்கள், கிச்சன் ஹெல்பர்ஸ், பயிற்சி பெற அல்லது அனுபவமற்ற வெயிட்டர்ஸ் சமையலறைக்கு ஊழியர்கள். இல.32, நாரஹேன்பிட்டி வீதி, நாவலை.

---

கொழும்பு பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 50 - 55 வயதுக்கு இடைப்பட்ட டயர் விற்பனை நிலையத்திற்கு வங்கி நடவடிக்கை புத்தகம் எழுதுவதற்கு ஞாயிறு அல்லது விடுமுறைநாட்களில் சம்பளம் ரூபா. 7000/=. மேலதிக கொடுப்பனவுகளும் உண்டு. 2344524, 077 3134060.

---

Colombo 11இல் Fancy Goods கடைக்கு Salesman தேவை. படித்த சிங்களம் பேசக்கூடிய மலையக தமிழ் இளைஞர்கள் தேவை. கொழும்பில் தங்குமிட வசதி உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும். Manager - 2395793, 0777 353393.

---

கண்டி, கட்டுகஸ்தோட்ட, அக்குறண, தம்புள்ள, கொழும்பு போன்ற இடங்களிலுள்ள முன்னணி வகிக்கும் பாமசிகளுக்கு அனுபவமுள்ள பாமசி விற்பனையாளர்கள், அத்துடன் காசாளர், Data Entry Operator போன்றவர்கள் உடன் தேவை. தொடர்பு கொள்க. Harcourts (Pvt) Ltd., No.14, schoffield Place, colombo 3. Tel: 0777 872771.

---

வத்தளையில் அமைந்திருக்கும் அச்சகசாலைக்கு (Kord Machine) கோட் மெசின் இயக்குநர் ஒருவரும் உதவியாளர் ஒருவரும் உடன்தேவை. அனுபவமுள்ளோர் உடனே தொடர்புகொள்ளவும். Tel:0714269465.

---

ஹட்டனில் வேலைக்கு உடன் தேவை. விவசாயத்தில் டிப்ளோமாவுடன் மலைநாட்டில் மரக்கறி செய்கைதொடர்பான அறிவு கட்டாயம் தேவை. பொருத்தமான நபருக்கு மனங்கவர் கொடுப்பனவுகள் உண்டு. தொடர்புகொள்க: 0777311082.

---

Do you want 50,000/= per Month? Come and Join with us கனேடிய அனுமதி பெற்றகம்பனியொன்றில் சர்வதேசமட்டத்திலான முகாமைத்துவபதவிகள் B/Management, Administration, Spoken English அதற்கான பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படும். Training Income 10,000/- Management income 50,000/- No need Experinece Call: 077 2650847, 011 4967981.

## வாடகை

வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு வெள்ளவத்தையில் Apartment வீடு A/C, I.D.D.Facility. Hot Water தளபாட வசதிகளுடன். குறுகிய கால வாடகைக்கு உண்டு. Tel: 077 3651647.

---

ஒரு மண்டபம், 3 படுக்கையறைகள், இணைக்கப்பட்ட குளியலறை மற்றும் ஒரு பல்கனி முதல் மாடி குறித்து கொள்ளவும். இந்த வீடு ஒரு குடும்ப அங்கத்தினர்களுக்கு மாத்திரமே. மற்றவர்களுக்கு கொடுக்கப்பட மாட்டாது. இல. 60/8C, ஸ்ரீவிக்கிரம மாவத்தை, மட்டக்குளிய தொலைபேசி: 011 2520533, 072 2283864

---

கல்கிசையில் புதிய 3 படுக்கை அறை, 3 குளியல் அறை, A/C, H/W, Washing Machine Fitting, பெரிய மண்டபம் 1 ஆவது மாடியில் Parking உடன் வாடகைக்கு உண்டு. 20,000/= இந்துக்கள் விரும்பப்படும். 0713 011990. (1 Year Advance).

---

அவிசாவளை பிரதான வீதியில் வெல்லம்பிட்டி பத்கமுவயில் 3 அறைகள் பெரிய ஹோல் வாகன தரிப்பிடம் டெலிபோன் மற்றும் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது. 0777 887175

---

வெள்ளவத்தையில் 3 Bedrooms, Fully Fumished, Luxury வீடு கிழமை, மாதமுறையில் வாடகைக்கு விடப்படும். வெளிநாட்டிலிருந்து விடுமுறைக்கு வருபவர்கள் விரும்பத்தக்கது. Tel:077 1979793.

---

70/05 Rodrigo Place, மட்டக்குளிய, 4 படுக்கையறைகள் கொண்ட 2 அடுக்கு மாடி வீடு தனியான குளியலறைகள், வரவேற்பறைகள், சமையலறை கொண்டதும் வாகனத் தரிப்பிட வசதியுமுண்டு. முழுமையாக வாடகைக்கு விடப்படும். Tel:4619282.

---

601/3, Havelock Road, Colombo 6. Eross படமாளிகைக்கு அண்மையில் சகலவசதிகளுடனும் Annex வாடகைக்கு உண்டு. Family only. No Brokers. விடுமுறை நாட்களில் மட்டும் பார்வையிடலாம். Tel:071 6301305

---

W.A. Silva மாவத்தை வெள்ளவத்தையில் Fully Furnished Apartment திருமண மற்றும் விசேட வைபவங்களிற்கும் வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா வருபவர்களிற்கும் வசதியான இடம் மாத /வார நாட்களிற்கு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 077 9181091, 0774783119.

---

173, Hospital Rd, Kalubowila என்ற இடத்தில் 20'x10' அளவுடைய கடை வாடகைக்கு கொடுக்கப்படும். எந்த வியாபாரத்துக்கும் சிறந்த இடம். Tel: 011 4580981, 071 5202250.

---

கொழும்பு கொட்டாஞ்சேனை 3 மாடி Luxury Full Furnished, A/C & Non A/C வீடு மாத, கிழமை முறையில் வாடகைக்கு விடப்படும். வெளிநாட்டிலிருந்து விடுமுறைக்கு வருபவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: Wijiayamala Jewellers, 213 & 215, Sea Street, Colombo - 11. Tel:2331616, 0777 382916, 2452949.

---

வத்தளை, அல்விஸ் டவுன் மிகவும் பாதுகாப்பான குடியிருப்பு பிரதேசத்தில் Lyceum International Schoolலிற்கு அருகாமையில் 3 Bedrooms with Attached Bathrooms, Kitchen with Pantry, Garage, Garden வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். மாத வாடகை ரூபா. 20,000/= தரகர்கள் தேவை இல்லை. 077 3431892.

---

வெள்ளவத்தை விகாரைலேன் ஊடாக பாத்திமா மாவத்தை சுமணதிசி பேக்கரி அருகில் இரண்டு அறைகள், ஒரு ஹோல், சமையலறை, குளியலறை அடங்கிய தனி வீடு வாடகைக்கு உண்டு. வாடகை 11,000/= ஒரு வருட முற்பணம். தொடர்பு: 0777257057, 0713456333.

---

W.A. சில்வா மாவத்தை (Royal Hospital) அண்மையில் 3 அறைகள், 2 குளியல் அறையுடன் முழு வீட்டுத்தளபாடங்களுடன் கொண்ட வீடு கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு. 3, 6 மாதங்களிற்கும் வீட்டுத்தளபாடங்களுடன் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:2587570/ 2505614. H.P.071 220 3568.

---

## கல்வி

கண்டியில் Group, Individual Classes Physics, combined Maths, Biology, Chemistry, O/L, A/L Local, London, BSc., Msc., ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். தொடர்பு: 0776505008 0773471903.

---

இரத்மலானை பகுதியில் 6-11 வரையான வகுப்புகளுக்கு கொழும்பில் பிரபல பாடசாலையில் கற்பிக்கும் யாழ். ஆசிரியை ஒருவரினால் விஞ்ஞானம், கணிதம், சுகாதாரம் ஆகிய பாடங்கள் தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும். தொடர்பு: 0777485541.

---

English, Tamil & Sinhala Medium Classes, Computer Classes, G.C.E.A/L, General English, Spoken English, Sinhala & French புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. ITI Computer Systems & English Education Centre, 38/5, Hinniappuhamy Mawatha, Colombo 13. 4937656.

## பயிற்சி வகுப்புகள்

வெள்ளவத்தையில் Indian embroideryகளான Kutch, Dharwari, Mirror, Bead, Sequin, Spring, Badla மற்றும் Brazilian, Handemb(200) etc... மூலம் Saree, Shalwar அழகுபடுத்தவும் Saree blouse, Shalwar வெட்டி தைக்கவும் பயிற்சியளிக்கப்படும். Mrs. Gayathri Srikanthan. T.P: 077 9932680

---

Tailoring, Saree blouse, Shalwar (Indian cut) மற்றும் பெண்களுக்கான சகலவித ஆடைகளும் வெட்டி தைக்க பயிற்சிநடத்தப்படும். வெள்ளவத்தை 19/1, 33rd Lane. தொடர்பு:- 2360865, 2424551

## சேவை

டாக்டரினால் நடத்தப்படும் தனியார் முதியோர்/ இல்லத்தில் முதியோர் நோயாளிகட்கு இடமுண்டு. ஒருவருக்கு ரூ. 12,500/- மட்டும் உணவு / மருத்துவ வசதிகள் உட்பட சகல வசதிகளுமுண்டு. தொடர்பு:- 011 2513562

---

உங்கள் நிறுவனத்தின் பெயரில் Website பதிவு செய்ய வருடத்திற்கு 2,500/- மட்டுமே. மேலதிக விபரங்களுக்கு www.business software developers. com. No.78, New Chetty Street, Colombo 13. T.P:- 077 3627823

---

வீடு மாற்றமா? அலுவலக மாற்றமா? உங்கள் வீட்டு உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், பாவனைப் பொருட்கள் அதிவிரைவாகவும், கவனமாகவும் நம்பிக்கையாகவும் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றிக் கொடுப்பதற்கும் மற்றும் திருமண வைபவங்களுக்கான கார்களுக்கு நாடுங்கள். நவரட்ணம் மூவர்ஸ், 18-5/2, Perera Lane, Colombo - 06. Tel: 0777 356706

---

Bird of Paradise Senior Residence கொழும்பில் மிக அமைதியானதும், பாதுகாப்பானதுமான சூழலிலும், முற்றிலும் மருத்துவர்களின் வழிநடத்தலில் முதியோர்களுக்காக நிரந்தர, தற்காலிக (நாளாந்த பராமரிப்புக்கான கட்டண அடிப்படையில்) சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட அமைதி இல்லம். தொடர்பு. Dr.Jeyaviran, Dr.Vasanthi Jeyaviran. Tel: 011 2435530.

## பழுது பார்த்தல்

அனுபவமுள்ளவர்களால் சகலவிதமான Radio, TV, DVD, Hifisystem, Micro Oven மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் Electronic, 24A, Fredrica Rd, Wellawatte. T.P:- 2594022, 077 7383087.

---

Computer பழுதுபார்த்தல் Software Installations, Virus Removal formatting, Individual computer Classes உங்கள் வீட்டிற்கு வந்து செய்துதரப்படும். பிரஷாந்தன். 077 6659334.

---

Computer Repair, Software ADSL, Net 2 Phone, Installation & P.C sales at your place. We provide quick and reliable service. Contact Tele Net. 22 Galle Road, Dehiwela. T.P:-011 2730872, 077 3934811

---

கொழும்பு கண்டி மாத்தளை பிரதேசங்களில் வீட்டுக்கு, காரியாலயங்களுக்கு நேரில் வந்து Computer repair குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படும். Hardware, Software, Windown XP, Vista and Linux free Install Virus card. தொடர்பு: முரளி 077 3920739.

---

உங்கள் வீடுகளிலேயே A/L, Fridges Washing Machines, Tinkering Painting உத்தரவாதத்தோடு வருகை கட்டணம் இல்லை. Shirley Herft 2625628 கட்டுபெத்தை.

---

SunTV, KTV, Vijay, Raj, Ten Sports, BBC, HBO, POGO Dish Tata Package கட்டணம் செய்துகொள்ள சகல, பெரிய சிறிய Dish வேலைகளுக்கும் தொடர்புக்கு: 078 5116522

---


Computer problem?? Solution at your doorstep by an experienced Technician ADSL/Internet and E-mail கிருஷ்ணா, PC care ஸ்ரீ இராமநாதன் வீதி, கொழும்பு-13.

## இந்திய யாத்திரை

சென்னை, பூரி, புவனேஸ்வர், கோனாரக் சாரநாத், வியாசகாசி, காசி கயா, புத்தகயா, ஹரித்துவார் ரிஷிகேஸ் பத்திரிநாத், கேதார்நாத், தாஜ்மகால், டெல்லி, இராமேஸ்வரம், சென்னை, மதுரை திருச்சி 01.04.08க்கு முன் பதிவு செய்யவும். ஆரம்பம் 03.06.08இல் யாத்திரிகர்கள் 20 பேர். நாட்கள் 28. விருப்பமுடையவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். விபரங்கட்கு: கலாநிதி ரி. ஸ்ரீரெங்கநாதன். தொலைபேசி - 0777 680102, 0773 108724. முன் பதிவு செய்யும்போது கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இந்த யாத்திரைகள் காலஞ்சென்ற என் மனைவியின் வேண்டுகோளிற்காக குறைந்த செலவில் செய்யப்படுகிறது.

# சிறுவர் பக்கம்

## முடியுமா?



ஒருமுறை பேராசிரியர் நியூக்லிட் தன் பேராசிரிய நண்பர்களுடன் எகிப்து நாட்டில் உள்ள பிரமிட்டுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு நண்பர், ''நியூக்லிட்! எல்லோரும் உம்மை அறிஞர் என்று சொல்கின்றனர். இந்தப் பிரமிட் சரியாக எவ்வளவு உயரம் என்று சொல்ல முடியுமா? உம்மிடம் அளக்கின்ற டேப் உள்ளதே'' என்றார். 'யாராலும் பிரமிட் மேல் ஏறி உயரத்தைக் கண்டுபிடிக்க முடியாது. ஏனென்றால் அதன் அடிப் பகுதி மிகவும் அகலமாகவும் போகப் போகக் குறுகிக் கொண்டும் செல்லும். அங்கிருந்து டேப்பைத் தொங்கவிட்டு அளக்க முடியாது' என்பது நியூக்லிட்டின் நண்பருக்குத் தெரியும். எனவேதான் அறிஞரை எல்லோரும் பார்த்துச்சிரித்தனர்.

''நண்பர்களே! இயலாதசெயல் என்று எதுவும் இல்லை. நம் மூளையைப் பயன்படுத்தினால் அதற்கும் எளிய வழி ஒன்று உள்ளது'' என்றார் நியூக்லிட்.

பிறகு அவர் தன் கையிலிருந்த டேப்பால் பிரமிட்டின் நிழலை அளந்தார். அதைக் குறிக்கச் சொன்னார். பிறகு அதே டேப்பில் தன் நிழலை அளந்தார். தன் நிழலையும் தன் உயரத்தையும் வைத்துக் கணக்கிட்ட அவர் பிரமிட்டின் உயரத்தையும் கணக்கிட்டுச் சொன்னார். அவர் சொன்னது பிரமிட்டின் துல்லியமான உயரமாக இருப்பதைக் கண்டு பேராசிரியர்கள் வியப்படைந்தனர்.

அறிவுடையார் என்றும் அறிவுடையாரே.

## கண்டுபிடிப்புக்களும் கண்டுபிடிப்பாளர்களும்

- புவியீர்ப்புக்கொள்கை - நியூட்டன்.
- கலங்கள் - ரொபட் ஹூக்.
- நுணுக்குக் காட்டி - ஜெக்ஷன்.
- மின்காந்தத் தூண்டல் விதி - பரடே.
- நான்கு குருதி வகைகள் - கார்ல்லோன்ஸ் ரைனா.
- ஆவர்த்தன அட்டவணை - மெண்டலீவ்.
- பரம்பரை தொடர்பான பரிசோதனை - கரகர் மெண்டலீவ்.
- ஒட்சிசன் - ஜோசப் பிரிஸ்லி.
- இலத்திரன் - தொம்ஸன்.
- நியூத்திரன் - இஸட்விக்.
- புரோத்திரன் - இரதபோட்.
- இரட்டைக் குருதிச்சுற்றோட்டம் - வில்லியம் ஹார்வே.
- பிறப்புரிமையியல் கொள்கை - மெண்டலீவ்.

காயத்ரி,
தரம் 8, கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு 15.






வி.சுஜிகரன்,
தரம் 8பி,
மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா.,
புதுக்குடியிருப்பு.



[illegible]ஹாரன்,
தரம் 7,
கிங்ஸ்டன் கல்லூரி,
முகத்துவாரம்.

## சிறுவர் கைவண்ணம்




தி.லிங்கேஸ்வரி,
தரம் 8பி,
வ/நெடுங்கேணி ம.வி.
வவுனியா.



பு.ஜூடிலன்,
தரம் 9,
மு/அளம்பில் றோ.க. வித்தி., முல்லைத்தீவு

## அழகாக நிறம் தீட்டுங்கள் 50



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## தொடர்மொழிக்கு ஒரு சொல்

- அறிஞர்கள் கூடி வாதிடும் களம் - பட்டிமன்றம்.
- நிலம்,நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன - ஐம்பூதங்கள்.
- அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் - அந்தப்புரம்.
- மனைவியை இழந்தவன் - தபுதாரன்.
- மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன - ஐம்பொறிகள்.
- மா, பலா, வாழை என்பன - முக்கனிகள்.
- தன்னைப் பற்றி தானே கூறும் வரலாறு - சுயசரிதை.
- தெருக்கள் சந்திக்கும் இடம் - சந்தி.
- இரப்பவர்களுக்கு இல்லையென்னாது கொடுப்போன் -வள்ளல்.
- தனக்கே உரிமையாக முழுப்பொருளையும் அனுபவித்தல் - ஏகபோகம்.

ஜீ.அலிமாபானுன்,
தரம் 8பீ, சீ/கே.முஸ்லிம் பா.ம.வி., கொழும்பு 9.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 48



முதலிடம் பெற்றவர் - என்.அஜய்,
புனித ஜோசப் முன்பள்ளி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்...

1. ம.கேஷினி பெல்வெயார் சர்வதேச பாடசாலை, கொழும்பு 05.
2. ஆர்.ஜுனைஷ்கர் தரம் 3ஏ, ப/சரஸ்வதி க.வி., பதுளை.
3. [illegible] தரம்3, ஹைலண்ட்ஸ் கல்லூரி, ஹட்டன்.
4. [illegible] தரம் 04, கொ/இந்துக்கல்லூரி, இரத்மலானை.
5. [illegible] தரம் 9, லக்பஹண கல்லூரி, [illegible] கண்டி.
6. ஜெ.யாழினி பாலர் வகுப்பு, புனித குசைப்பர் முன்பள்ளி, கிளிநொச்சி.
7. ஆர்.திவ்யா தரம் 1சீ, இந்துக்கல்லூரி, வெள்ளவத்தை.
8. ஆர்.[illegible] தரம் 3சீ, கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை.
9. ஆர்.[illegible] தரம் 3, சென்.தோமஸ் கல்லூரி, கல்கிசை.
10. [illegible] ஸ்ரீஇராமகிருஷ்ண [illegible], கலஹா.

# மீன் உணவில் ஏனைய உணவுகளை விட கொலஸ்ட்ரோல் அதிகம் உண்டா?

கேள்வி: வயது 60. எனக்கு இரத்தத்தில் கொலஸ்ட்ரோல் அளவு சற்று அதிகமாக இருக்கின்றது. டாக்டர், இறைச்சி உணவை குறைத்து நிறைய மீன் உணவை சேர்க்க சொல்கின்றார். ஆனால், மீன் உணவிலும் கொலஸ்ட்ரோல் இருப்பதாக உணவு விஞ்ஞானம் படிக்கின்ற எனது நண்பரின் மகள் கூறுகின்றார். இதன் உண்மை நிலையையும், கைக்கொள்ளவேண்டிய சரியான எனது உணவு முறையையும் விளக்கமாக தருவீர்களா?

பதில்: உங்கள் நண்பரின் மகள் கூறியது போல சகல அசைவ உணவுகளும் மீன் உட்பட, கொலஸ்ட்ரோல் அதிகமாக கொண்டுள்ளன. ஆனால், மீன் உணவில் மற்றைய உணவுகளை விட கொலஸ்ட்ரோல் மிக குறைவாகவே உள்ளது. இதனால்தான் கொலஸ்ட்ரோலைப் பொறுத்தவரையில் மீன் உணவு பாதுகாப்பான உணவாக கருதப்படுகின்றது. என்றாலும் குறைந்த அளவு கொலஸ்ட்ரோல் உள்ள மீனை சமைக்கும் விதத்தில்தான் கொலஸ்ட்ரோல் அளவு தங்கியுள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மீன் பொரிக்கும்போது நிறைய தேங்காய்ப்பால் விட்டு, எண்ணெய் கறியில் மிதக்கும் வரை சமைக்கும் போது மீன் உணவில் கொலஸ்ட்ரோலின் அளவு அதிகமாகின்றது. மீனை அவித்து, நீராவியில் வேக வைத்து (Steam) ஒலிவ் எண்ணெய், கொலஸ்ட்ரோல் குறைந்த எண்ணெயை மேலாக பூசி, ஓரளவு பொரிக்கும்போது, கொலஸ்ட்ரோல் அதில் சேராது பார்த்துக்கொள்ள லாம். சில வகை மீன்களில் Omega-3 கொழுப்பு அமிலங்கள் இருக்கின்றன. இந்தக் கொழுப்பு அமிலங்கள் இதயத்திற்கு நல்லவை.

உங்கள் உணவு முறையில் பின்வரும் பழக்கங்களை கைக்கொள்வதால் கொலஸ்ட்ரோல் அதிகளவில் உடம்பில் சேர்வதைத் தடுக்கலாம். கொழுப்பு அதிகளவு உள்ள உணவுகளை தவிர்த்தல், அதிக கொழுப்பு செறிவுள்ள உணவுகளுக்கு (High Saturated Food) பதிலாக குறைந்த கொழுப்பு உணவுகளை சேர்த்துக்கொள்ளலாம். உணவில் நார்ச்சத்துள்ள உணவு வகைகளை சேர்த்துக்கொள்ளல், உங்கள் எடையை உங்கள் உயரத்திற்கு ஏற்ற வகையில் குறைத்தல் என்பவை இந்தப் பழக்கங்களில் முக்கியமானவை யாகும்.

கேள்வி: எனது சகோதரி வயது 24. அவரது ஒரு புதிய பழக்கம் எனக்கு பயத்தை ஏற்படுத்துகின்றது. பென்சில் கூர், கரும்பலகையில் எழுதும் சோக் (Chalk), நகம், நகத்தைச் சுற்றியுள்ள தோற்பகுதி என்பவற்றை - சதா நேரமும் கடித்து சாப்பிடுவதை பழக்கமாகக் கொண்டுள்ளார். டாக்டரிடம் காட்டியபோது அவருக்கு இரத்தச் சோகை (Anaemia) என்றும், அவரது இரத்தத்திலுள்ள Haemoglobin 6 கிராம் அளவு குறைந்து காணப்பட்டதாகவும் தெரிவித்தார். இதற்கு இரும்புச்சத்து மாத்திரைகளைத் தந்தார். ஆனால், அவரது பழக்கம் மாறவில்லை. பரிகாரம் கூறவும்.



பதில்: உங்கள் சகோதரிக்கு ஏற்பட்டுள்ள கோளாறை மருத்துவத்தில் Pica என்று கூறுவர். சாதாரணமாக குழந்தைகள் வளரும் காலத்தில் வந்து மறையும் இந்தப் பழக்கம். அதாவது, சத்தில்லாத பொருட்களை சாப்பிடும் ஆர்வம். உங்கள் சகோதரி போல் வயது கூடியவர்களிடையே காணப்படும் போது அது அசாதாரணமானது. இளம் கர்ப்பிணிப் பெண்களிடம் அவர்களது முதலாவது கர்ப்ப காலத்தில் இது சாதாரணமாக காணப்படுவதுண்டு. இதற்கு காரணம் இதுதான் என்று இது வரை சரியான காரணம் காணப்படவில்லை. கலாசார,சமூக,பொருளாதார, உளவியல் சம்பந்தமான காரணங்கள் இந்தக் கோளாறுக்கு கற்பிக்கப் படுகின்றன. சில வேளைகளில் இரும்பு, துத்தநாகம் (Zinc), கல்சியம் குறைப்பாடுகளை இந்தக் கோளாறோடு சம்பந்தப்படுத்துவதுண்டு. இரும்புச் சத்து குறைவினால் இது ஏற்படுகின்றதா அல்லது இதனால் இரும்புச் சத்து குறைவாகின்றதா என்பது பற்றி இதுவரை தெளிவான மருத்துவ அபிப்பிராயங்கள் இல்லை. பசி, போஷாக்கு குறைவுகளினால் கூட இந்தப்பழக்கம் ஏற்படலாம். இளம் வயதில் உங்கள் சகோதரிக்கு ஏற்பட்டிருக்கும் இந்த பிரச்சினைக்கு மனோவியல் அல்லது மனநலத்துறை வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறுவது விரும்பத்தக்கது. சிலவேளைகளில் Behaviourac Therapy என்கின்ற மனோநல சிகிச்சை இவ்வாறான பிரச்சினைகளுக்கு பலன் அளித்துள்ளது.

கேள்வி: ஆண். வயது 59. மெலிந்த உடல் வாகு கொண்டவன். இப்பொழுது எனது நிறை குறைந்துகொண்டு போவதாக தெரிகிறது. எனது குடும்ப வைத்தியரிடம் சென்றால் நோய்கள் எதுவுமில்லை என்கிறார். கொலஸ்ட்ரோல் பரிசோதித்துப் பார்த்ததில் சற்று கூடுதலாக 250 மி.கிராம் தான் இருந்தது. 220 மி.கிராம் தான் Normal என்கின்றார்கள். இந்த வயதிலும் கொலஸ்ட்ரோல் பற்றி கவனம் எடுத்து உணவு முறைகளை நான் கைக்கொள்வது அவசியமா?

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை,கொழும்பு-14.

பதில்: கொலஸ்ட்ரோல் அதிகரிப்பு கொழுத்த பருத்த மனிதர்களுக்கும், உடல் மெலித்தவர்களுக்கும் ஏற்பட வாய்ப்புண்டு. மெலித்திருந்தால் கொலஸ்ட்ரோல் இல்லை என்று சொல்லி விடமுடியாது. ஒவ்வொருவரின் கொலஸ்ட்ரோல் அளவு பரம்பரை ரீதியிலும், உணவு பழக்கத்திலும் தங்கியிருக்கின்றது. இருதய நோய், பாரிசவாதம் என்பவற்றிற்கு கொலஸ்ட்ரோல் காரணமாக கற்பிக்கப்பட்டாலும் கொலஸ்ட்ரோல் மாத்திரம் காரணமாக இருக்காது. பரம்பரை அலகுகள், புகைபிடிக்கும் வழக்கம், பருத்த தேகம், அதிஉயர் இரத்த அழுத்தம் என்பவை கூட இருந்தால் கொலஸ்ட்ரோல் ஒரு காரணமாக அமையும். உங்கள் வயதிற்கு என்னைப் பொறுத்தவரையில் கொலஸ்ட்ரோல் அளவு அதிகம் என்று கூற முடியாது. உங்கள் அதிகரித்த கொலஸ்ட்ரோல் அளவிற்கு எதுவித மருத்துகளும் அவசியமில்லை. எனவே, ஒரு குறிப்பிட்ட அளவு பால் சம்பந்தப்பட்ட உணவுகள், கொழுப்பு உணவுகளை உங்கள் சாப்பாட்டில் சேர்த்துக்கொள்வதில் பிரச்சினை இல்லை. உங்கள் எடை அதிகரிக்க மாச்சத்து நிறைய உள்ள கோதுமை, அரிசி, பழவகைகளை அதிகமாக உணவில் சேர்த்துக்கொள்ளவும். தொடர்ந்தும் உங்கள் எடை குறைந்து கொண்டு போனால் மருத்துவ பரிசோதனை ஒன்று கட்டாயம் தேவை.

கேள்வி: வயது 23. எனது கால் விரல்களுக்கிடையில் அவிந்து புண் ஏற்படுகின்றது. நான் ஒரு கடையில் சமையல் காரனாக பணிபுரிகின்றேன். இதனால் நாள் முழுவதும் பாதங்கள் நனைந்த வண்ணம்தான் இருக்கின்றன. இதனால் கால் விரல்களில் ஏற்பட்ட புண்கள் மாறுவதில்லை. பரிகாரம் தரவும்.

பதில்: உங்கள் கால்விரல் இடுக்குகளில் ஏற்பட்டுள்ள புண்கள் ஒரு வகை பங்கஸ் (Fungus) நோய். இந்த நோயை ஏற்படுத்தும் பங்கஸ்- Tinea Pedalis வகையைச் சேர்ந்தது. நீண்ட நேரம் ஈரலிப்பு, தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களில் பணிபுரிபவர்களுக்கு இந்த நோய் அதிகமாக ஏற்படுகின்றது. கால்விரல்களுக்கிடையில் அரிப்பு, எரிவு, கால்விரல்களுக்கிடையில் உள்ள தோலின் வெடிப்புகள் அல்லது தோல் படை படையாக உரிதல் என்பவை இந்த நோயின் குணங்களாகும். சில வேளைகளில் இந்த பங்கஸ் - கால் பாதங்களில் பரவி, நகச்சுற்று, உடையும் நகங்கள் என்பவற்றைத் தரும். பொதுவான குளியலறை, கழிப்பறைகளை உபயோகிப்பவர்களுக்கு தொற்றாக பரவக் கூடியது இந்த பங்கஸ் தோல் நோய். Clotrimazole,Keto Conazole போன்ற பங்கஸ் கொல்லி மருத்துகள் மூலம் இதனை குணமாக்க முடியும். என்றாலும் திரும்பவும் ஈரலிப்பான சூழ்நிலையில் பணிபுரிந்தால் இந்த நோய் திரும்பவும் தாக்கக்கூடியது.

பங்கஸ் கொல்லி மருந்துகளோடு, பாதங்களின் சுகாதாரம், விரல்களுக்கிடையில் அழுக்கு சேராமல் ஈரலிப்பு இல்லாமல் பராமரித்துக் கொள்ளல், சுத்தமான காலுறைகள் அணிதல், பொது இடங்களில் வெறுங்காலுடன் நடமாடாது இருத்தல் போன்ற பழக்கங்கள் இந்த நோய் வராது பாதுகாக்க உதவும்.




## தமிழ்த் தொண்டு

வாய்மொழி, எழுத்து, வாழ்வு
வளம்பெற இதழ்கள் சேவை!
தூய்மொழிப் பற்று; தொன்மை
தழிழர்பண் பாடு; மேன்மை
தேய்வினில் மாய்ந்தி டாது
-தித்திக்கும் தமிழில் காத்தார்!
ஆய்வினில் திளைத்து இன்னும்
அநேகரும் இதழ்கள் விட்டார்!

எல்லாளன் எழுத்து மூட்டும்
எழுச்சியை; அறிவைத் தீட்டும்
சொல்லாளன்; வல்லோன்; ''சிம்ம
சொப்பனம்'' சங்கத் தார்க்கு!?
தொல்லைகள், மிரட்டல் கண்டு
துவளாது நிமிர்ந்து அன்னோன்
வில்லம்பாய் விடுப்பு வட்டக்
கொடையூரில் ''இளைஞன் குர''லை!

''வருமிங்கு எங்க ளுக்கும்
வண்டமிழ் எழுத்து; பேச்சு!
தருவோம்யாம் படைப்பு; மூச்சுத்
தண்டமிழ்''என்று வன்று
பெருமிதம் உரைப்பு கண்டி
திரு. க.ப. சிவனார்; அன்னார்
கருத்துப்பூங் கொத்தாய் ஈவு
கவின்'மலை முரசு' நன்றே!

மக்களின் குமுறல்; தேச
மாற்றாந்தாய் கணிப்பு; மக்கள்
துக்கிப்பு; வேலை வாய்ப்பில்
தொடர்ந்திடும் புறக்க ணிப்பு
...க்காக புட்டு வைப்பு
அநீதிக்கு எதிர்ப்பு; ஆமாம்
திக்கெல்லாம் பரவி வந்த
'மலைப்பொறி; பாலா தொண்டு!

■ கவிஞர் ஸி.எஸ்.காந்தி.

## ரண சுகம்

எந்நேரமும் உன் நினைவோடு
வாழ்ந்திருந்தேன்!
பின்நேரமும் உன்
வரவுக்காய் காத்திருந்தேன்.

...ன்றாவது ஒரு நாள் உன்னை மறந்தால்...
அன்றே இறந்து விடுவேன்
என்றவன் நீ...

கற்பும் நட்பும் கண்ணென மதித்து
வாழ்பவன் என எண்ணி
உன் செல்ல வார்த்தைகளில் கிறுங்கி
என்னைப் பறிகொடுத்தேன்.
இப்போது தவிக்கிறது என் மனம்
உன்னை நினைத்தல்ல...
உன் ஷெல் வார்த்தைகளை நினைத்து.-

உண்மையான பாசமும் நேசமும்
நீதான் என நினைத்தேன்
நடிப்பும் வேஷமும் நீ நடத்திய
உன் பாரதத்தில் புரிந்துகொண்...ன்
பிரிவையும் தவிப்பையும்
நீ அறிவாயோ; என்னவோ
எனக்கு உணர்த்தி விட்டாய்!

உன்னுடன் வாழ்ந்த சில பொழுது
நினைவுகள் இப்போது
ரண சுகமாய் உள்ளன!

நேற்று உன் அருகில் இருக்க
ஆசை கொண்டேன்
இன்று உன்னுடன் வாழ ஆசை
நாளை உன் நினைவுடன்
வாழ ... நடக்குமா?

■ சு. சுபா.

## இன்றைய காதல்

உலகத் திலெத் தனை காதலடா
நாட்டுக் கொரு காதல் உள்ளதடா
வெளிநாட்டுக் காதல் உலகம் சுத்துதடா
உள் நாட்டுக் காதல் கஷ்டப் படுகுதடா.

சொல்லாத காதல் கனவிலே கரையுதடா
சொல்லிய காதல் பாதியிலே விலகுதடா
அண்ணன் காதல் அடி வாங்குதடா
தம்பி காதலோ லண்டன் பறக்குதடா

கண்டதும் காதல் மனதிலே பூக்குதடா
கவிதை எழுதியே பாதிவயது குறையுதடா
உண்மையான காதல் எது வெடா
எந்த காதலும் உருப்படியா இல்லையடா

கொழும்புக் காதல் கோல்பீச்சோடு முடியுதடா
வன்னிக் காதலோ மண்ணுக்குள் புதையுதடா
இன்றைய காதல் இது தானடா
தடையின்றி தொடரும் காதலைப் பாருடா

ஒரு முறை நீயும் காதலை வாங்கடா
அப்பதான் புரியும் காதல் உனக்கடா
எவரிடம் காதல் இல்லை யடா
அவரிடம் போயுன் காதலைச் சொல்லடா.

■ எஸ். பி. லக்குணா, வட்டக்கச்சி.




கல்விவளம் நிறைந்தழகு பொங்கும் நாடாம்
கலைகளெலாம் குவிந்து புகழ் தங்கும் நாடாம்
நல்வினைகள் சூழ்ந்து தமிழ் விளங்கும் நாடாம்
நெஞ்சுறுதி கொண்டமறத் தமிழர் நாடாம்
இல்லையென்று எதுவுமில்லாதினிய நாடாம்
எங்களுயிர் யாழ்ப்பாணம் இதனின் கண்ணே
நல்ல பதியாய்த் திகழும் குப்பிளானில்
நடனசிகாமணி யய்யா பிறந்தார் வாழ்க.

மீன்குஞ்சை நீந்துதற்குப் பழக்கினோன் யார்?
மின்னலுக்குள் மின்சாரம் புகுத்தினோன் யார்?
மான்விழிக்கு மையெழுதிக் காட்டினோன் யார்?
மண்ணுக்குள் கனிப்பொருளை கொட்டினோன் யார்?
தேன் தமிழில் கதை கவிதை. செய்துயாத்து
திக்கெட்டும் நடனசிகா மணிபுகழை
வானுயர உயர்ந்துவதற்கு வழிசெய்தோன் யார்?
வரகவியாம் இவன் முயற்சி தானே யாவும்!

எழுபது ஆண்டுகளை நிறைவு செய்த
எந்தலை ஒருதரம்நான் நினைத்துப் பார்த்தேன்
இருபது வயதையொத்த இளைஞனாக
எப்போதும் சுறுசுறுப்பாய் இளமையோடு
உறவாடி, கவலைகளை உதறித்தள்ளி
உள்ளத்தைத் திறந்துகாட்டும் சுபாவம் கொண்ட
பெருமனிதர் இவருக்கா எழுபதாண்டு
பிள்ளையிவன்! தமிழுக்கும் பிடித்த தென்றால்.

தாய்ப்பாலைக் குடித்த பின்னால் தொடர்ச்சியாக
தமிழ்ப்பாலைக் குடித்துவரும் உணர்ச்சி மிக்கோன்
வாய்ப்பேச்சில் சொல்வதனை செயலில் காட்டி.
வற்றாத நதியாக வாழும் வேங்கை!
தூயமனம். துள்ளிவரும் அலையைப் போல
துயர்மறந்து சிரிக்கின்ற அன்பு நெஞ்சன்!
தாய்த்தமிழ்போல் பல்லாண்டு காலம் வாழ
தங்கமகன் இவனை நாம் வாழ்த்துகிறோம்.

■ கவிஞர். செ. குணரத்தினம்.

சிரேஷ்ட பத்திரிகையாளரும்,
கவிஞருமான கே. பி. நடனசிகாமணி
யின் 70 ஆவது அகவை நிறைவு
விழாவையொட்டி வெளியிடப்பட்ட
கவிதை இது.

## தேசத்தை மாற்றி விடு

வேசத்தை மாற்றி விடு - தம்பி
கோபத்தை தாழ்த்திவிடு;
தேசத்தை வென்றிடவே - உந்தன்
வீரத்தை பாய்ச்சிவிடு.

சிந்தித்துச் செயலாற்று- உந்தன்
சிந்தனை களைவீசு;
தூசித்து நீதிரியும் - அந்தச்
செயல்களை மாற்றிவிடு.

வாசித்து நீநடத்தால் - உலகம்
பூசித்து வாழ்த்துமடா;
யாசித்திருக் கையிலே - உந்தன்
யோசனை தீருமடா.

தந்தத்தை நீக்கிவிடு - நாச
பந்தத்தை போக்கிவிடு;
சொந்தத்தை யுருவாக்கு - நாட்டில்
சுதந்திரந் தனைமூட்டு.

மண்ணுக்கிரையா கு முடலை- இனிய
பண்ணுக்கு உரமாக்கு;
பெண்ணுக்கு கல்விகொடு - அவள்
பேதமையை மாற்றிவிடு.

உண்மைக்கு முதன்மைகொடு - மண்
உயர்வுக்குத் தோளைக்கொடு
கண்மையாய் நீயிருந்தால் - அவள்
பெண்மையில் தீதேதடா!

■ கவிஞர் இளையபாரதி

## மறு ஜென்மத்தில் ஒரு பிடி மண்ணாய்!

ஆறறிவுடன் நன்றியில்லா
மனிதனாய் இருப்பதை விட
நன்றிமறவாத ஐந்தறிவு நாயாய்
இருக்க விரும்புகின்றேன்...

மனிதநேயங்களே மரத்துப்
போய் விட்ட மானிடனாய்
இருப்பதை விட கல்லடிகள்
பட்டாலும் கனி கொடுக்கும்
மரமாக மாறி விட ஆசை...

கலைகள் பற்பல கற்று
கால் அங்குல பூமிவெளிக்கு
கத்தி சண்டையிட்டு காவல்நிலையம்
செல்லும் காணிக்காரனாய் இருப்பதை
விட; வரட்டியாய் வரண்டு
போய் விட்ட ரொட்டி
துண்டைக்கூட கூட்டமாய்
பகிர்ந்து உண்ணும் காக்கையாய்
இருக்கவே விரும்புகின்றேன்...

மனமெல்லாம் சாக்கடையாய்
மாறிவிட்ட மனிதனாய் வாழ்வதை
விட ஊரின் அழுக்கையெல்லாம்
அகற்றி செல்லும் சாக்கடையாய்
மாறி விட ஆசை...

மறு ஜென்மத்திலும் கூட
இந்த பண்கெட்ட மனித
சமுதாயத்தில் பிறக்காமல்
அனைத்து உயிர்களையும்
பொறுமையாய் சுமந்து
கொண்டிருக்கும்
இந்த பாரினில் ஓர்
பிடி மண்ணாய்
பிறக்கவே விரும்புகின்றேன்...

■ எம். ரமேஸ், கலஹா.

## தந்து விடு

விடியும் பொழுதே புலருகையில்
வினைகள் தனையே பரிசுகளாய்
இடியாய்த் தந்தே மறைகின்றாய்
இதுவா இன்றெம் தேவைகள்.

மனிதன் மனிதத் தன்மையினை
மறந்தே தீங்கு புரிகின்ற
அநியாயங்கள் யார் தடுப்பார்
அறிந்தோர் ஏனோ உறங்குகிறார்.

சொல்லில் செயலில் பேச்சுகளால்
செகத்தில் நிம்மதி தோன்றலையே
கொல்லும் பண்பே லட்சியமாய்
கொள்கை யாகத் தொடர்கின்றார்.

பஞ்சம் பசியில் பகைப்புகையில்
பரி தவிக்கும் ஏழைகளோ
நெஞ்சம் பதறி வாழ்கின்ற
நிலையே நாட்டில் வேதனையாய்

அன்பை பண்பை அறநெறியை
அளித்து வாழப் போதிக்கும்
இன்ப இதய நல்லோர்கள்
இன்னும் கிடையேல் நிலையென்ன?

ஒற்றுமையோடு நாட்டு மக்கள்
ஒன்றாய் வாழ வுழைக்கின்ற
பற்றுத லுள்ள மனமொன்றே
பதியி லெமக்குத் தந்துவிடு .

■ மருதூர் ஜமால்தீன்

## கல்லறை அழைப்பிதழ்

கடைசித் தண்டனைக்கு
சவால் சொல்ல
சாத்தானாலும் முடியாது!
தகுதி இல்லாத பதவி
சாவு மட்டுமே!

விதியை மாற்ற
பெட்டிசமா போடமுடியும்!
மரிப்பதென்பது -
ஒரு பருவம் மாதிரி!

போன பிறவியின்
தழும்புகள்
இந்தப் பிறவியில் -
ஞாபகம் இருந்திருந்தால்!
அடுத்த ஜென்மத்துக்காய்
மண்டாடியாவது
பார்க்கலாம்!

புண்ணிய தலத்தில்
பிரதிஷ்டை செய்தவனும்
புதைகுழியில் சிதைந்து
கிடக்கிறான்!
கடவுள் பக்கம்
யாருக்குத்தான் நம்பிக்கை
வளரும்!

ஒருவேளை எமன்
மன்னித்தாலும்
மனிதர்களுக்கு மரணம்
நிச்சயமே;
மனிதர்களே
மனிதர்களுக்கு
தீர்வு எழுதுவதால்!

■ வி. முகிலன், நெடுந்தீவு - 13

# கொசோவோ சுதந்திரப் பிரகடனம் காலனித்துவத்தின் வேறு ஒரு வடிவமா?

கடந்தமாதம் நடுப்பகுதியில் ஆஸ்திரியா வியன்னா பல்கலைக் கழகத்தில் 'கொசோவோவின் எதிர்காலம்' என்னும் தலைப்பில் நடந்த கருத்தரங்கம் ஒன்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிட்டியது. எனது பல்கலைக்கழக ஆய்வு ஒன்றிற்காக அங்கு சென்றிருந்த நான் எனது பணிகளைப்புறந்தள்ளி விட்டு இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் ஆவலைத்தூண்டியது மேற்படி தலைப்பு.

அத்தோடு இக்கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காகவே ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திலிருந்து கோபமும் சீற்றமுமாய் வந்திருந்த கொசோவோவைத் தாயகமாகக் கொண்ட எனது தோழி ஒருத்தியும் எனது ஆவலை மேலும் தூண்டி விட்டாள்.

கொசோவோ சுதந்திரப்பிரகடனம் செய்ததிலிருந்து 'கொசோவோ' ஈழப்பரப்பில் ஒரு மந்திரச்சொல்லாகவே மாறிவிட்டது. சிலர் ஈழத்து ஊடகப்பரப்பில் அதற்கு ஒரு நட்சத்திர அந்தஸ்தை உருவாக்கியிருந்ததன் விளைவு அது.

எமது ஊடகங்கள் தொடர்ந்து கட்டமைத்த இந்த மாயத்தன்மையினூடாக ஒரு புரிதலை பெற்றுகொண்ட சாதாரண ஈழத்துப் பிரஜை ஒருவர் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசப்பட்ட விடயங்கள், சமாப்பிக்கப் பட்ட அறிக்கைகளை பார்க்க நேரிட்டால், பின்பு அனேகமாக நாம் அவரை ஒரு மனநலவிடுதியில்தான் சந்திக்க நேரிடும். இதில் யாருக்கும் சந்தேகம் தேவையில்லை.ஏனெனில் கொசோவோ பற்றிய அவரது புரிதலை இக்கருத்தரங்கு கலைத்துப்போட்டிருக்கும்.

இன்று விடுதலை அடைந்திருக்கும் (விடுதலையடைய வைக்கப்பட்டிருக்கும் என்ற சொற்பிரயோகம் தான் சரியாக இருக்கும்) கொசோவோவின் எதிர்காலத்தை ஒரு சூனிய வெளியில் வைத்து பார்த்தது மட்டுமல்ல,இத்தகைய சுதந்திரம் அந்த இனத்திற்கு தேவைதானா? போன்ற கேள்விகளையும் பல சந்தேகங்களையும் ஒரு சேர முன்வைத்தது மேற்படி கருத்தரங்கு.

'சட்டி சுடுகிறது என்று துள்ளி அடுப்பில் விழுந்த' கதையாகவே கொசோவோவின் இன்றைய விடுதலையை கொசோவோவின் உண்மையான சுதந்திரத்தில் அக்கறையுள்ள மனிதநேயத்தில் விருப்புக்கொண்டுள்ள அறிவுஜீவிகளும், புத்திஜீவிகளும் பார்க்கிறார்கள்.


எமது ஊடகங்களில் கொசோவோ பரபரப்பான பேசுபொருளாக மாறிய போதே கொசோவோ பற்றிய எமது ஊடகங்களின் புரிதல் சரியானது தானா என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுவதாகவிருக்கின்றேன் என்று சக ஊடகத்துறை நண்பர் ஒருவரிடம் கூறியபோது,''சோர்ந்து போயிருக்கும் மக்களுக்கு தெம்பளிக்கும் விடயமாக அது இருக்கிறது, அதை ஏன் கலைத்து போடுகின்றீர்கள்'' என்று கேட்டார்.

அவரது கூற்று எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஒரு போராடும் இனத்திற்கு நம்பகத்தன்மை என்பது மிக முக்கியமான விடயம். அது அரசியல் சார்ந்த விழிப்புணர்விலிருந்து பிறக்கிறது. மக்களுக்கு சரியான அரசியல் விழிப்புணர்வை கொடுக்காமல் பொய்கள், புனைவுகளினூடாக போலியான நம்பிக்கைகளை ஊட்டுவது மோசமான பின்னடைவுகளுக்கு வழி வகுக்கும். கடந்த சமாதான காலத்தில் அது ஒரு வரலாறாகவே பதிவாகியிருக்கிறது.

கொசோவோவின் விடுதலை என்பது போராடும் இனம் என்ற அடிப்படையில் எமக்கு முன்தோன்றியுள்ள ஒரு நம்பிக்கை புள்ளி. உலக வரைபடத்தில் புதிதாக ஒரு தேசம் உருவாகியிருக்கிறது. அவ்வளவுதான்...

ஆனால்,எமது ஊடகங்கள் அதை ஒரு பெரிய வட்டமாக வரைந்துவிட்டன.

கொசோவோவிற்கும் தமிழீழத்திற்கும் இடையில் நிலவியல், அமைப்பு, தன்மை,தளம்,கேந்திர முக்கியத்துவம் சார்ந்து மட்டுமல்ல அவற்றின் போராட்டம் சார்ந்தே நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. அவற்றை இங்கு பட்டியலிட முடியாது. அது பேச வந்த கருத்தின் தொனியையே மாற்றக்கூடியது. சாதாரண உலக அரசியல் அறிவுள்ள ஒருவரால்




மிக இலகுவாகப் புரியக்கூடிய விடயங்கள் அவை.

'அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம்,யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல்' என்பது இன்றைய உலக ஒழுங்கின் நவீன இராஜதந்திர சொல்லாடல்களில் ஒன்று. இது குறித்த புரிதலில் பலவீனமாகத்தான் கொசோவோவையும் தமிழீழத்தையும் ஒப்பிட்டு எமது ஊடகங்கள் உளறியதை புரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. அடுத்தது தமிழீழம்தான் என்று சிலர் அறைகூவல் விடுத்தார்கள். சிலர் ஜோதிடக்காரர்களாக மாறி தமிழீழம் அங்கீகரிக்கப்படும் கால எல்லையை கூட தீர்மானித்தார்கள். வேறு சிலரோ கொசோவோ- தமிழீழ ஒப்பீட்டு அட்டவணையைத் தயாரித்து எமது அங்கீகாரம் குறித்து அப்பாவித்தனமாக அறிக்கைவிட்டார்கள்.ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தமிழீழம் என்று ஒரு நாடு உருவாகப் போவது நிச்சயம். அதை எந்தச் சக்கியாலும் தடுத்து நிறுத்தி விட முடியாது. ஆனால், அது மேற்கண்ட உளறல்களின் அடிப்படையில் ஒரு போதும் இருக்கப்போவதில்லை.

கடந்த சமாதான காலத்தில் அதற்கான விதை ஆழமாகவே ஊன்றப்பட்டுவிட்டது. தோற்றுப் போன புரிந்துணர்வு உடன்படிக்கையையும், தற்போதைய களநிலைவரங்களையும் முன்வைத்து 'தமிழீழம் சாத்திய மில்லை' என்று உளறுபவர்களுக்கு நாம் பதில் சொல்ல வேண்டியதில்லை. இவற்றுக்கும் அப்பாற்பட்ட சாத்தியங்களை தமிழீழத் தலைமை நீண்ட காலங்களுக்கு முன்பே உருவாக்கிவிட்டது. ஆனால், கொசோவோ போன்ற அபத்தங்களினூடாக சாத்தியங்களை விலத்தி தனித்துவமானமுறையில் அது வரையப்பட்டுள்ளது.

உலக ஒழுங்கை சரியாக உள்வாங்காததன் விளைவே மேற்கண்ட கொசோவோ- தமிழீழ ஒப்பீட்டுக் குழப்பம். நாம் கடந்துவந்த பாதைகளும் முறிந்துபோன கடந்த புரிந்துணர்வு உடன்படிக்கையும் எமக்கு அழுத்தமாக சொல்லும் செய்தி- ஒற்றை வரியில் சொல்வதென்றால் எமது விடுதலையை நாம்தான் வென்றெடுக்க வேண்டும். அதாவது, எமது பலத்தில் தான் எமது விடுதலை தங்கியுள்ளது. எனவே நாம் பலமானவர்களாக மாறி வலுச்சமநிலையை எம்பக்கம் திரும்புவதனூடாகத்தான் எமது விடுதலையின் அடுத்த கட்டத்தை அடைய முடியும். இந்த அரசியல் புரிதலை ஒவ்வொரு ஈழத் தமிழனுக்கும் புரியவைக்கவேண்டியது எமது ஊடகங்களின் தலையாய கடமை.இது அவசியமானது மட்டுமல்ல தற்போதைய அரசியல்,கள நிலைவரங்களின் அடிப்படையில் அவசரமானதும் கூட.

நாம் எல்லாம் எமது முரண்பாடுகளைக் களைந்து தேசியத் தலைமையின் கீழ் ஓரணியாகத் திரண்டு போராடிப் பெற வேண்டிய விடுதலை என்ற உண்மையை மேற் குறிப்பிட்ட அபத்தமான ஒப்பீடுகள் கலைத்துப் போடும் அபாயத்தை எமது ஊடகங்கள் மறந்து போனது வேதனைக்குரியது. போராட்டத்தின் பலம், பலவீனம் தொடர்பாக உண்மைச் செய்திகளை சூழலுக்கு ஏற்றவாறு சற்றே முன்பின்னாக மாற்றிக்கூறலாம். அது தவறில்லை. ஆனால், திரிக்கக் கூடாது. ஒரு போராடும் இனக்குழுமத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகங்கள் இராணுவ-படைத்துறை செய்திகளை திரித்து வெளியிடுவதையே உச்ச பின்னடைவாகப் பார்க்கப்படும் சூழலில் ஓர் அரசியல்நிகழ்வை திரிப்பது எத்தகைய அபத்தம்?

இன்று நாம் செய்யும் யுத்தம் என்பது எமது அரசியல் உரிமைக்கானது, எமது மக்களை அரசியல் விழிப்புணர்வுள்ளவர்களாக வைத்திருக்கவேண்டியது ஊடகங்களின் கடமை. நாம் யுத்தத்தில் பின்னடைவுகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம் என்பதற்காக மக்களின் அரசியல் விழிப்புணர்வை சிதைக்கக் கூடாது. மழுங்கடிக்கக்கூடாது.அதை இன்னும் கூர்மையுடன்

**பரணி கிருஸ்ணரஜனி**

வைத்திருக்கவேண்டும்.

உண்மையில் கொசோவோ ஓர் இறைமையுள்ள தேசம். அதற்கு சுயநிர்ணய உரிமை உண்டு. சேர்பியர்களால் அவர்கள் அடக்கப்படுகிறார்கள் - ஒடுக்கப்படுகிறார்கள் என்ற அக்கறையில் கொசோவோவி[illegible] இந்த நீதி வழங்கப்படவில்லை. மேற்குலக வல்லரசுகளுக்கிடையில் நடந்த சதுரங்க ஆட்டத்தில் ஒருசாரார் பிறிதொரு சாராருக்கு வைத்த 'செக்' தான் கொசோவோ சுதந்திரப்பிரகடனம்.

தமது பிராந்திய நலன், பிராந்திய மேலாண்மை தொடர்பான ஒரு வளை கோட்டுத் தத்துவத்தை காவித்திரியும் வல்லரசுகள், அதனூடாக வரையும் ஒற்றை அறத்தின் மிகச் சரியான சமீபத்திய உதாரணம்தான் கொசோவோவின் 'சுதந்திரப்பிரகடனம்'.

1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கவாட் பல்கலைக்கழக பேராசிரியர்கள் குழு ஒன்று விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசிற்குமிடையில் பிணக்குத் தீர்க்கும் முயற்சி ஒன்றில் ஈடுபட்டது. ஆனால், ஜெயசிக்குறு வெற்றி மமதையில் அந்த முயற்சியை சிங்கள அரசு புறந்தள்ளியது பல பேருக்குத் தெரியாத வரலாறு. இதன் பின்னணியில் ஓர் ஆலோசகராக இருந்த ஒரு பேராசிரியரை கடந்தவருடம் டிசம்பரில் அம்ஸ்ரடாம் பல்கலைக்கழகத்தில் வைத்து சந்திக்கும் வாய்ப்பு ஒன்று கிடைத்தது.

அவரின் கூற்றுப்படி புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில் இருந்த காலப்பகுதியில் இலங்கைத் தீவில் அனைத்து வல்லரசுகளும் தனித்தனியாக ஓர் இரகசியமான (சில வெளிப்படையாகவே) ஆய்வில் ஈடுபட்டன என்றும் தெற்காசியப் பிராந்தியத்தில் தமது பிராந்திய நலன், செல்வாக்கு, மேலாண்மை குறித்து ஒரு சதுரங்க ஆட்டத்தில் இறங்கின என்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவினதும் சீனாவினதும் மறைமுகமான தலையீடுகள் மேற்குலகத்தின் காய்நகர்த்தலுக்கு பெரும் இடைஞ்சலாக இருந்ததாகவும் குறிப்பிட்டார். உண்மையில் இலங்கைத்தீவை தமக்கான இராஜதந்திர களமாக மாற்றுவதற்கு பலரும் போட்ட போட்டியில் ஒருவருக்குமே வெற்றிகிடைக்க வில்லை என்பதுதான் நிஜம் என்று குறிப்பிட்ட அந்தப் பேராசிரியர் அதை தனது தொலைநோக்குப் பார்வையினூடாக வெற்றிகரமாக முறியடித்தவர் நமது தலைவர் பிரபாகரன் என்றும் குறிப்பிட்டார். அந்தச் சீற்றத்தின் விளைவாகவே புலிகள் பல நாடுகளிலும் தடைசெய்யப்பட்டதும் சில முட்டுக்கட்டைகள் புலிகளுக்கு எதிராக போடப்பட்டதும் என்பது அவரது வாதம்.

ஆச்சரியப்படத்தக்க வகையில் உலக வல்லரசுகளுக்கு சிங்களமும் இடம்கொடுக்கவில்லை என்பதையும் அவர் குறிப்பிட்டார் (சிங்களத்தின் தீர்க்கதரிசனமற்ற - தூரநோக்கில்லாத முட்டாள்தனமான முடிவு அது என்பதும் அவரது மேலதிக வாதமாக இருந்தது. ஏனெனில், புலிகளை வெற்றிகொள்ளலாம் என்ற மமதையில் தனது சர்வதேச நட்பை இழந்துள்ளதாகவும் அதன் விளைவாகவே தற்போதைய மனித உரிமை விவகாரங்களில் சில நெருக்கடிகளை அது சந்தித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்) விளைவு புரிந்துணர்வு உன்படிக்கை முறிவு. இரண்டு தரப்பும் தம்மைக் கைவிட்ட நிலையில் தற்போது வெற்றிகொள்பவனின் பக்கம் சாயலாம் என்ற நிலையில் களநிலைவரங்களை உலகம் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதான் இலங்கைத்தீவு தொடர்பான உலகின் தற்போதைய பார்வை மட்டுமல்ல யதார்த்த நிலையும் கூட. சர்வதேச வல்லரசுகள் கொசோவோவில் பிரயோகித்த வளை கோட்டுத் தத்துவத்திற்கும் ஒற்றை அறத்திற்கும் அப்பால் விலகியே நிற்கிறது 'தமிழீழம்'. எனவே, என்றைக்கும் எம்மை அங்கீகரிக்க அவை ஓடிவரப்போவதில்லை. ஆனால், எமது பலத்தை நாம் நிரூபித்து ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி அடிக்கும் பட்சத்தில் அவை எம்மை அங்கீகரிக்கவேண்டிய ஒரு புறநிலை ஒன்று தோன்றியிருக்கிறது. எமது விடுதலைப் போராட்டம் சார்ந்து இது முக்கியமான அம்சம். ஊடகங்கள் அதை புரிந்துகொண்டு மக்களை அதனூடாக ஒட்டுமொத்த விடுதலையை நோக்கி அவர்களை நகர்த்திச் செல்ல வேண்டும். கொசோவோவிற்கு பிறகு தற்போது சில அதிமேதாவிகள் நேபாளத்தில் நடந்துமுடிந்த தேர்தலை முன்னிறுத்தி மாவோயிஸ்டுகள் மாதிரி புலிகளும் ஜனநாயகப் பாதைக்கு திரும்ப வேண் டும் என்று உளறத் தொடங்கியிருக்கிறார்கள். ஒரு சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் மன்னராட்சிக்கு எதிராக ஒட்டுமொத்த ஆட்சி மாற்றத்திற்கான போராட்டத்தையும் ஒருசேர குழப்பி ஆய்வு என்ற பெயரில் சில இந்திய, சிங்கள ஊடகங் கள் கதை விடத் தொடங்கிவிட்டன. நாம் விழிப்படைய வேண்டும் உடனடியாகவே இந்த அபத்தக்கூத்தை மறுதலித்து புதினம் இணையத்தளம் ஒரு செய்தி ஆய்வை வெளியிட்டிருந்தது.

(23ஆம் பக்கம் பார்க்க)



# நள்ளிரவில் ஒரு நாடகம் 16

## முன்கதைச் சுருக்கம்

சிக்காகோ நகரம். இரவு நடுச்சாமத்தை கடந்துவிட்டது. அமுரா, ஹொஸ்டலில் தனது அறையில் தூங்கிக் கொண்டிருக்கிறாள். அப்போது கதவு தட்டப்படும் ஓசை! இந்த நேரத்தில் யாராக இருக்கும்! காதலன் ஜோனாக இருக்குமோ என்ற சந்தோஷத்துடன் கதவைத் திறக்கிறாள். ஆனால், ஓர் மர்ம உருவம் அவளை உட்தள்ளி கதவைத் தாழிடுகிறது. அமுராவைத் தேடி ஜீனா வருகிறாள். மர்ம உருவம் ஜீனாவையும் விட்டுவிடவில்லை. உள்ளே இழுத்துக் கொண்டது. டாக்டர் வில்லியம்ஸ் மூலமாக ரோலண்டுடன் மேரி அறிமுகமாகிறாள். அவனுடன் ஊர்சுற்றி விட்டு, ஹொஸ் டலுக்கு வருகிறாள். அங்கு மர்ம உருவத்தைக் கண்டு பயந்து வீதியில் ஓடும்போது ரோந்து பொலிஸ்காரனைச் சந்திக்கிறாள். அவனுடன் சல்லாபிக்கிறாள். அதில் உயிரையே விட்டுவிடுகிறாள். இவை அறியாத ரோசி, தோழிகள் செக்ஸ் விளையாட்டுகளில் ஈடுபடுவதாக நினைத்து அவர்களை கையும் களவுமாகப் பிடிக்க முனையும்போது மர்ம மனிதனிடம் மாட்டிக் கொள்கிறாள். மர்ம மனிதனின் பிடிக்குள் அகப்பட்ட அவள், அவனைத் தாக்கிவிட்டு ஓடுகிறாள். கொல்லும் நோக்குடன் அவளை மர்மமனிதன் தேடிக்கொண்டிருக்கிறான். இதற்கிடையில் மீண்டும் மேரியைத் தேடிவந்த ரோலண்ட் மர்மமனிதனால் கொலைசெய்யப்படுகிறான். இனி...

டுமீல்!

துப்பாக்கி வெடிச் சத்தம்.

இரவுப் பனியின் ஏகாந்த நிசப்தத்தினூடே மிக மிக மெலிதாக அந்த சத்தம் கேட்டது.

"ஸ்டோப்! ஜீப்பை நிறுத்து" என்றான் சப்- இன்ஸ்பெக்டர் ஹரிசன்.

பாலத்தின் மீதாக வேகமாக சென்றுகொண்டிருந்த பொலிஸ் ஜீப் சறே' லென்று பிரேக்கடித்து நின்றது. சாரதி ஆசனத்தில் இருந்தவனை பார்த்த ஹரிசன் "அந்த சத்தம் கேட்டதா" என்றான்.

அவன் விழித்தான். அரை தூக்கத்துடன் வண்டியோட்டிக் கொண்டிருந்த அவன் முழுசிப் பார்த்தான்.

"என்ன சத்தம்?"

என்று பயத்துடன் கேட்டான்.

சப்- இன்ஸ்பெக்டர் ஹரிசன் ஒரு சிடுமூஞ்சிக்காரன். எவரும் அவனிடம் கேள்விகேட்கக் கூடாது. கோபம் கொப்பளித்துக்கொண்டு வந்து விடும்.

"ஏண்டா மடையா, நீ செவிடனா" என்று கத்தினான். சாரதியின் காதில் அவனுடைய கத்தல் எப்படி விழுந்ததோ தெரியவில்லை. ஏதேனும் சொல்ல வேண்டும் என்பதற்காக "இன்னும் சோதிக்கவில்லை" என்று சட்டென பதில் சொன்னான்.

அந்த பதில் ஹரிசனின் கோபத்தை எகிறச்செய்துவிட்டது.

"கறுமம்!கறுமம்!" என்று தலையிலடித்துக் கொண்டு ஜீப்பின் கதவைத் திறந்து சட்'டென வெளியில் குதித்தான். அருகில் இருளில் புதைந்து கிடந்த தாதிகளின் விடுதியின் மீது பார்வை பதிந்தது.


அங்கிருந்துதான் அந்த வெடிச் சத்தம் கேட்டது என்று அவன் மனம் கூறியது. நிச்சயமாக அந்த சத்தம் அந்த திசையிலிருந்துதான் வந்தது என்று அவன் மனம் உறுதியாக நினைத்தது.

அத்திசையை அவனுடைய பூனைக்கண்கள் வெறித்தன. மிகவும் சந்தேகமான கண்கள் அவை. ஏதேனும் கொலை நடந்துவிட்டதா? இல்லை என்றால் எவனாவது யாருக்கும் எதிராக கைத்துப்பாக்கியை நீட்டி பயமுறுத்திக்கொண்டிருக்கிறானா? அப்படியானால் இன்னொரு முறை சத்தம் கேட்கும். அப்பொழுது நிச்சயப்படுத்திக்கொண்டு அத்திசைக்கு போகலாம் என்று எண்ணியவாறு காதை நீட்டிக் கொண்டு அத்திசையை வெறித்த வண்ணம் நின்றான்.

நாழிகைகள் நிமிடங்களாகிக் கரைந்தன. மீண்டும் ஒரு வெடிச் சத்தம் கேட்கவில்லை.

ஆனால், ஒரு சிறு வாகனம் நகர்வதைப் போல இருவெளிச்சக் கோடுகள் அடர்த்தியான மரஇலைகளினூடாக விட்டுவிட்டு மின்மினிப் பூச்சுகள் நகர்வது போல் தெரிகின்றன.

'அந்த வெளிச்சம் வாவிப் பக்கமாகத்தான் செல்கின்றது. அத்திசையில் சென்று இடதுபுறமாக ஒரு அரைகிலோ மீற்றர் தொலைவு கடந்து சுற்றி வருகின்ற போது இப்பாலத்தின் பக்கமாகத் தானே வரவேண்டும். அப்போது ஆளை பிடித்து 'என்னப்பா அந்த பக்கமாக




வெடிச்சத்தம் கேட்டதே, என்ன சமாச்சாரம்!' என்று விசாரித்துக்கொள்ளலாம்' என்று ஹரிசன் சாதாரணமாக நினைத்துக் கொண்டான். எதையும் சந்தேகக் கண்கொண்டு பார்த்தாலும் உடனடியாக நடவடிக்கையில் இறங்காமல் சுற்றிவளைத்து பிடிக்கும் குணம் படைத்தவன்.

ஜீப்பில் அவனும் சாரதியும் மட்டும் தான் இருந்தார்கள். முன் விளக்குகளை அணைத்துவிட்டு ஜீப்பை கொஞ்சம் இருளான இடத்தில் நிறுத்தச் சொன்னான். தனது மழைக் கோட்டையும் தொப்பியையும் அணிந்து கொண்ட ஹரிசன், வீதியோரமாக அங்கும் இங்குமாக நடக்கத்தொடங்கினான். எதையாவது நினைத்து, சிகரெட் சிகரெட்டாக ஊதித்தள்ளி பரபரப்புடன் நடமாடும்குணம் படைத்தவன்.

அவன் அந்த இருளில் நடமாடிக் கொண்டிருப்பது எவருடைய கண்களுக்கும் தென்படாது.

இரண்டு விடயங்களுக்காக ஹரிசன் அவ்வாறு நடமாடத் தொடங்கினான் .

ஒன்று அந்த வாகனம் இவ்வழியாகத்தான் பிரதான வீதிக்குச் செல்வதற்காக வரவேண்டும். இரண்டாவது இந்த ரோந்து பொலிஸ்காரன் என்ன



செய்கிறான். ரொம்ப நேரமாகவே ஆளைக் காணவில்லையே அவனை வேவு பார்க்கவேண்டும். கையும் மெய்யுமாக பிடிக்க வேண்டும் என்று திட்டமிட்டுவிட்டான்.

கைத்துப்பாக்கியின் வெடிச் சத்தமொன்று காதில் விழுந்தது உண்மைதான். ஆனால், அதன்பின்னர் வெகுநேரமாகியும் எதுவித விபரீதமான சத்தங்களும் காதில் விழவில்லை.

ஆனால், அந்த நள்ளிரவில் குலை நடுங்கச்செய்கின்ற அதிபயங்கர நாடக மொன்று அரங்கேறிக் கொண்டல்லவா இருக்கின்றது.

இரண்டு கொலைகள் இடம்பெற்றுவிட்டன. மாடிப்படியின் இருளில் ஒரு பெண்ணின் சடலம் கிடக்கிறது. அந்த விடுதிக்கு கொஞ்சம் தொலைவிலுள்ள வாவியில் சேறு மிகுந்த அடித்தளத்தில் காருடன் ஒருவன் புதைந்து போனான்.

அந்த விடுதியில் இருந்த இரு பெண்களை நிர்வாணப்படுத்தி மங்கல் வெளிச்சத்தில் அழகு பார்த்துக்கொண்டிருந்தான் ஒரு பயங்கரமனிதன். அமுரா, ஜீனா ஆகிய இரு இளம் பெண்களே அவர்கள். அறையில் அவர்கள் மாயமாகிவிட்டார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்றேதெரியவில்லை. எலிஸபெத் விடுதியின் வார்டன். தானுண்டு தன் காரியமுண்டு என்றவாறான ஒரு கனவுலகில் வாழ்ந்து வருபவள். ஆனால், வைராக்கியமானவள். குள்ளமாகவும், சதைப்பிடிப்புமாக ஒரு தாராவைப் போன்று தத்தித் தத்தி படக் படக் என்று நடக்கின்றபோதும் உடல்பலம் மிக்கவள். ஓர் ஆண்கூட அவளுடன் போராடுவது கஷ்டம். அந்த எலிஸபெத்தையும் காணவில்லை. அவளுக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

இவர்கள் அனைவருக்கும் துணையாக இருப்பது டைகர். ஆள் அளவுக்கு உயரமான நீண்ட நாக்கை எச்சில் ஒழுக ஒழுக தொங்கப் போட்டுக் கொண்டிருக்கும் ஓர் உயர் ரகமான அல்சேஷன் நாய். பத்து ஆஜானுபாகுவான கிங்கர்களையும் ஓடோட விரட்டும், பிடுங்கி பதம்பார்த்து விடும்.பொல்லாத வேட்டைக்காரன். அந்த ராட்சத மிருகத்தையும் காணவில்லை. அதற்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை. இத்தனை அமர்க்களமும், நள்ளிரவுதிகில் நாடகமாக அந்த விடுதிக்குள் அரங்கேறிக் கொண்டிருக்க இந்த சப்-இன்ஸ்பெக்டர் என்னவென்றால் ஆற்றுக்குள் வலைவீசி அதற்குள் சிக்கிவிட்ட மீனை இழுத்தெடுக்க மீனவன் காத்திருப்பது போல மரங்களுக்கிடையாகச் செல்லும் காரைப் பிடிக்கவும், மோட்டார் சைக்கிளில் சுற்றித் திரிகின்ற ரோந்துப பொலிஸ்காரனைப் பிடிப்பதற்கும் ஜீப்பை ஒரு மூலையில் நிறுத்திவிட்டு இருளில் நடமாடிக்கொண்டிருக்கின்றான்.

நல்ல வேடிக்கைதான்.

நேரம் நகர்ந்து கொண்டிருக்கிறது.

காரையும் காணவில்லை. ரோந்து பொலிஸ்காரனையும் காணவில்லை. சப்-இன்ஸ்பெக்டரின் பொறுமை எல்லை கடந்து சென்று கொண்டிருந்தது.

அநேகமாக நள்ளிரவு நேரங்களிலும். அடிக்கடி அம்புலன்ஸுகளும் சாதாரண உல்லாச நபர்களின் வாகனங்களும் அவ்வீதியின் வழியாகச்சென்று பிரதான பாதையை நாடிச் செல்லும். அவன் அங்கு வந்து அரைமணித்தியாலத்திற்கு மேலாக கடந்துவிட்டது.

இன்று ஒரு காக்கா குருவியைத் தானும் காணவில்லை. எல்லோரும் வேலைநிறுத்தம் செய்துவிட்டார்களா? யாரையாவது பிடித்து மிரட்டவேண்டும். உதைக்க வேண்டும் என்று தவித்துக்கொண்டிருந்த அந்த சிடுமூஞ்சு சப்-இன்ஸ்பெக்டருக்கு இவை ஒன்றையும் காணாததால் எரிச்சல் எரிச்சலாக வந்தது.

திடுதிப்'பென இருளில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப்பை நோக்கி வேக வேகமாகச் சென்றான். கதவைத் திறந்து சட்'டென ஆசனத்தில் அமர்ந்து "எடு வண்டியை"என்று உறுமினான். விடுதிப் பக்கம் போகவேண்டும் என்று ஏனோ அவன் மனத்தில் ஓர் உறுத்தல் ஏற்பட்டது.

வண்டி நகரவில்லை. சாரதியின் ஆசனத்திலிருந்து குறட்டைச் சத்தம் வந்துகொண்டிருந்தது. ஸ்ரியரிங்கில் சாய்ந்து அவன் நல்ல உறக்கத்தில் இருந்தான். சிகரெட்டை ஊதித்தள்ளி டென்சனில் அல்லாடிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டரின் செவிகளில் குறட்டை சத்தம் விழவில்லை.

வண்டியில் உட்கார்ந்ததுமே விரல்களால் கண்களை அழுத்திக்கொண்ட ஹரிசன் வண்டி நகராததை அவதானிக்கவில்லை. கண்களை திறந்தபோது வண்டி நகராததையும், சாரதி குறட்டை விடுவதையும் கண்டான். நர நர'வென பற்களை கடித்து அவனை அறையலாமா என நினைத்தபோது-

நடுவீதியில் -

யாரோ குடல் தெறிக்க, பேயைக் கண்டவனைப் போல ஓடிவருவதைக் கண்டான். (தொடரும்)





# ஜெனிலியாவின் சாதனை

ஒரே கதையில் மூன்று மொழிகளில் நடித்த பெருமை இப்போதுள்ள எந்த முன்னணி நடிகைகளுக்கும் இல்லை. அந்தப் பெருமையை தட்டிச்செல்கிறார் ஜெனிலியா.

ஹிந்தி இயக்குநர் அனீஸ் பாஸ்மியின் படத்தில் நடிக்கிறார் ஜெனிலியா. ஒருவகையில் இதுவொரு சாதனை.

டீ.பாஸ்கரின் 'பொம்மரிலு' படத்தில் சித்தார்த்துடன் நடித்தார் ஜெனிலியா. பிறகு அந்தப்படம் 'சந்தோஷ் சுப்ரமணியம்' என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்ப்பாகியது. இதிலும் ஜெனிலியாதான் கதாநாயகி. நடிகை ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் இதே கதையை ஹிந்தியில் தயாரிக்கிறார். சித்தார்த், ஜெயம்ரவி நடித்த வேடத்தில் ஹர்மன் பவேஜா நடிக்கிறார். இதிலும் ஜெனிலியா தான் கதாநாயகி.

# ரோபோ – சலோ அமெரிக்கா

வித்தைகள் பல கற்றிருந்தாலும் உயர் தொழில்நுட்பத்தில் ஒரு படம் பண்ணுவதென்றால் ஹொலிவுட்டை நோக்கியே ஓடவேண்டியிருக்கிறது. போருக்கான வேகத்துடனும் அமைதிக்கான நிதானத்துடனும் ரோபோ வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. படம் முழுக்க கிராபிக்ஸ் வேலைகள் இருப்பதால் அதுகுறித்துத் தெரிந்துகொள்ள ஒரு டீம் ஏற்கனவே அமெரிக்கா சென்றுள்ளது. இன்னும் சில தினங்களில் ஷங்கரும் ரஜனியும் அமெரிக்கா செல்லவிருக்கிறார்கள். ரோபோவில் ரஜனி தோன்றும் பல்வேறு கெட்டப்புகளுக்கு மேக்கப் டெஸ்ட் நடத்தவே இந்த ஹொலிவுட் பயணமாம். சிவாஜியில் பார்த்ததைவிட மேலும் சில வயதுகள் குறைத்து இளமையாக ரஜினியை காண்பிக்க முடியுமா என்ற சோதனையும் இந்த அமெரிக்கப் பயணத்தில் மேற்கொள்ளப்படுமாம். பார்த்து...ரொம்பவும் இளமையானால் அடையாளம் தெரியாமல் இருந்துவிடப் போகிறது.



## கொடைகானல்



## வாரணமாயிரம்



# விஞ்ஞானி வேடத்தில்

செல்வராகவன் இயக்கத்தில் அடுத்து உருவாகிக் கொண்டிருக்கும் படம், 'ஆயிரத்தில் ஒருவன்'. இதில் ஒல்லி அழகி ரீமா சென், கார்த்தி நடிக்கின்றனர். ரீமாசென்னுக்கு இதில் விஞ்ஞானி வேடம். படத்தின் 80சதவீத படப்பிடிப்பு முடிந்துவிட்டது.



# கொலைகாரன் வேடத்தில் வடிவேலு

இந்திரலோகம் என்ற எண்ணெய் கொப்பரையில் விழுந்து, அல்பறையை தொலைத்தவர் வடிவேலு. "வேணாம்டா இதத ஹீரோ பிழைப்பு" என்று விலகி வேறு திசையில் ஓட ஆரம்பித்தவரை மறுபடியும் லகான் போட்டு இழுத்திருக்கிறது ஒருகதை. புரபஷனல் கொலைக்காரன் ஒருவன் கொலைசெய்யப்போகின்ற இடத்தில் எல்லாம் ஏகத் தப்பாக ஏதையாவது செய்து மாட்டிக்கொள்வானாம். பிறகென்ன...? தம்அடிதான். படம் முழுக்க இப்படி நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்து விட்டதுபோல் எக்கச்சக்க நகைச்சுவை. கேட்டவுடன் பிடித்துப்போக தனது விரதத்தை முடித்துக்கொண்டாராம் வடிவேலு.

## திரைவிம

திகட்ட் திகட்
திகைக்க திகை
மனிதவாடை
சமையல்காரனு
முடிந்த காதலை
காத்திருக்கும் ப
ஒருவருடன் ஒ
அந்தப் பங்களா
மூடின் உச்சத்தி
யறையில் இருந
கதவு திறந்தால்
வாட்ச்மேன். இ
புரிந்துவிடுகிற
வைக்கு மட்டு
வையும் அலற
வேப்பஞ்சாறு.
என்ற சஸ்பென்
முன்னெப்போத
தியேட்டரில் உ
மட்டும் சும்மா
மாதிரி மனிதர்
அதிர்ச்சியுமாக
கதையின் ஆ
வுக்கு பிரகாசம
திறமை வெளிக்
காக எல்.ஐ.சி.ப
முறை டான
கட்டிக் கொள்கி
வேட்டைகாடு
தாலும் அக்காட்
பார்க்கும்போது
கொள்ளத் தோ
தால் சமூக அக்
டுக்குரியது. உ
வது, எந்தத் தவ
முயற்சிசெய்வத
பயத்தின் வலை







ட திகட்ட தேனிலவு கொண்டாட நினைக்கும் காதல்ஜோடியை
க திகைக்க திகில்வலையில் சிக்கவைக்கும் சிலந்தி இது.
வாடை இல்லாத ஆள் அரவமற்ற தனித்தீவு. வாட்ச்மேன்,
ல்காரனும் மட்டும் உள்ள பளிங்கு பங்களா. திருமணபந்தத்தில்
காதலை கண்களில் தேக்கியபடி முதல் ஸ்பரிசத்திற்காக
க்கும் புதுமணத் தம்பதிகளாக முன்னா - மோனிகா.
ருடன் ஒருவர் மகரந்தச்சேர்க்கை நடத்தப்போகும் களிப்பில்
பங்களாவிற்குள் காலடி எடுத்து வைக்கின்றனர். ரொமாண்டிக்
உச்சத்தில் இருக்கும் நேரத்தில் தட்...தட்....தட்....சத்தம். பள்ளி
ல் இருந்த ஜோடிகளுடன் படம் பார்ப்பவர்களும் எரிச்சலடைய
றந்தால் யூனிபார்மைவிட அதிக விறைப்புடன் நிற்கும்
மேன். இசையமைப்பாளர் கொடுக்கும் பின்னணியில் அப்போதே
விடுகிறது இது பயமுறுத்தும் படம் என்று. மோனிகாவின் பார்
மட்டும் வந்துபோகும் அந்த மர்மஉருவம் ஒருமுறை முன்னா
அலறவைக்க, தேனிலவு எண்ணத்தில் ஊற்றப்படுகிறது
ஞ்சாறு. காதல்ஜோடியை மிரட்டுவது அவனா? அவளா? அதுவா?
ஸ்பென்ஸ் இதயத்தில் லப்டப்பை எகிறவைக்கிறது.
எப்போதும் இல்லாத கவர்ச்சியை பந்திவைக்கும் மோனிகாமேல்
டரில் உள்ள இளசுகளின் கண்கள் மொய்க்க, கதாநாயகன் முன்னா
சும்மா இருப்பாரா என்ன? கம்மங்கொல்லையில் காய்ந்த மாடு
னிதர் புகுந்து விளையாடுகிறார். மேனியில் கவர்ச்சியும் முகத்தில்
ியுமாக பாவனைகளை மாற்றும் மோனிகாவைக் பாராட்டலாம்.
பின் ஆணிவேராக இருக்கும் கதாபாத்திரத்தில் புதுமுகம் சந்துரு
ிரகாசமான எதிர்காலம் இருக்கும் என்பதை அவரது நடிப்புத்
வெளிக்காட்டுகிறது. கஷ்டப்படும் குடும்பத்தை கரைசேர்ப்பதற்
.ஐ.சி.பாலிசிக்காக அலையும் சந்துரு, சொப்ட்வேர் பெண்களின்
டான க்கத்திற்கு இரையாகும் இடங்களில் பரிதாபத்தைக்
கொள்கிறார். தனியாக சிக்கிய சிங்கத்தை புள்ளிமான்கள்
டபோடுவது மாதிரியான ராகிங் காட்சிகள் முகம் சுளிக்க வைத்
அக்காட்சியில் இயக்குநர் காட்டும் பத்திரிகை ஆதாரங்களைப்
ம்போது அந்தக் காட்சிகளை எச்சரிக்கை மணியாகவே எடுத்துக்
த் தோன்றுகிறது. இயக்குநர் ஆதி ஒரு பத்திரிகையாளர் என்ப
மூக அக்கறையுள்ள கதைக்கருவை எடுத்துக்கொண்டது பாராட்
யுது. உயிரோடு வந்த சமையல்காரன் இறந்துவிட்டதாக சொல்
ந்தத் தவறும் செய்யாத மோனிகாவை மர்மஉருவம் கொலை செய்ய
செய்வது போன்ற காட்சிகளில் காற்றில் பறக்கிறது லொஜிக்.
ன் வலையில் சிக்க வைக்கிறது இந்தச் 'சிலந்தி'.





## சல்சா கற்கும் நமிதா

உங்கள் இதயத்துடிப்பை எகிறவைக்கும் ஒரு செய்தி. நடிகை நமீதா, சல்சா நடனம் கற்கிறாராம். கண்டதை எல்லாம் தின்கிறார், ஆனாலும் கனகச்சிதமாக இருக்கிறாரே என்று நமீதா மீது பலருக்கு சந்தேகக் கண். இதில் திடீரென்று இரண்டு மூன்று கிலோ எடைகுறைந்து, இதயத்துடிப்பை அடிக்கடி எகிற வைப்பார். இதன் ரகசியம் என்ன என்று புலனாய்வு செய்ததில் இரவுநேர நடனத்திற்கு நமீதா செல்வது தெரியவந்தது.இப்போது இடையை மட்டும் ஆட்டி எதிரிலிருப்பவர்களை கிறங்கச்செய்யும் சல்சா நடனம் கற்கிறாராம். சும்மாவே கவர்ச்சியில் சிலம்பாடுகிறவர், சல்சாவும் கற்றால்...? கடவுளே உன் கருணையே கருணை.



# எப்போதும் உற்சாகம்... சுறுசுறுப்பான வேலை!



மகிழ்ச்சி என்பது வாழ்க்கையில் உற்சாகத்தை உருவாக்கிவிடும். இது நாம் வேலையில் அதிக கவனம் செலுத்தவும் உதவும். இதுகுறித்து ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஓவியர், மருத்துவர், பொறியியலாளர், இசைக் கலைஞர் என்று பலரிடம் இக் கேள்வி கேட்கப் பட்டது. அதாவது, அவர்கள் தமது வேலையை முடிக்கும் போது எப்படி உணருகிறார்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு வெவ்வேறு துறைகளில் இருந்த அனைவரின் பதிலும் ஒரே மாதிரியாக இருந்தது.

மகிழ்ச்சியான மனநிலை இல்லாதபோது, ஒருவரால் தனது வேலையில் கவனம் செலுத்தமுடியாது. நேரம் ஆகியவை குறித்த விழிப்புணர்வும் இருக்காது.

ஒருவேலையை மகிழ்ச்சியுடன் செய்தால் வேலை முடிந்தவுடன் ஏதோ விருது கிடைத்தது போல உணர வைக்கும். இதனால், ஞாபக சக்தியும் அதிகரிக்கும். இதைவிட்டு ஏனோதானோ என்று மனதில் மகிழ்ச்சி இல்லாமல் செய்யும் வேலை எளிதில் முடியாது.

### ஆஹா...ஆப்பிள்!

பொதுவாக, சீராக உட்கொள்ளும் காலை உணவு, உங்கள் வேலைத்திறனை, சிந்திக்கும் திறனை அதிகப்படுத்தும். காலை உணவை உண்ட பல மாணவர்கள் பரீட்சையிலும் போட்டிகளிலும் முதல் இடத்தைப் பிடித்துள்ளனர் என்பதை பல ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. பதற்றம் காரணமாக யார் காலை உணவை உட்கொள்ளாது பரீட்சை எழுதுகின்றனரோ, அவர்கள் சராசரி அல்லது அதற்கும் குறைவான மதிப்பெண்களே பெற்றுள்ளனர்.

காலைநேர பரபரப்பில் காலை உணவு தயாரிக்க முடியவில்லையா, அப்போது கொழுப்பு நீக்கிய பால், பழச்சாறு, பிஸ்கெட் அல்லது உலர் பழங்கள் சாப்பிடலாம். காலை உணவானது உங்கள் குளுக்கோஸ் அளவை சீராக வைக்கும். இதனால் கிடைக்கும் சக்தியானது உங்களைச் சிறப்பாக வேலைசெய்ய வைக்கும். ஆகவே, காலை உணவை ஒருபோதும் புறக்கணிக்கக்கூடாது.

ஆப்பிளானது இரும்புச்சத்து நிறைந்தது. அத்தோடு இதில் கனிமச் சத்துகளும் உள்ளன. மூளையைச் சுறுசுறுப்பாக்க உதவும் அத்தனை அத்தியாவசிய சத்துகளும் இதில் உள்ளன. தினமும் ஓர் ஆப்பிள் உண்பதால் ஞாபகசக்தி அதிகமாகும். ஆப்பிள், திராட்சை, செரிப்பழம், கரட், உருளைக்கிழங்கு, ஏலக்காய் மற்றும் அத்திப்பழத்தில் கனிமம் மற்றும் உப்புச்சத்து அதிகம் உள்ளது. ஆகவே, தினமும் ஓர் ஆப்பிள் சாப்பிட்டு மருத்துவரை அணுகாமல் இருங்கள். உங்கள் நினைவுத்திறனை புத்துணர்ச்சியோடு விளங்கச்செய்யுங்கள்.

### கோப்பி குடிக்கலாம், ஆனால்...

தினமும் குறைந்த அளவு கோபின் அடங்கிய கோப்பி அருந்துவதால் நினைவுத்திறன் சற்று சுறுசுறுப்பாகும். சற்று சோர்ந்து போனதாக உணர்ந்தால் கோப்பி அருந்தலாம். அதுவே தினசரி வேலைகளில் ஈடுபடும் முன்பு கோப்பி அருந்துவது அவ்வளவு நல்லதல்ல. ஏனெனில், நீங்கள் ஏற்கனவே சுறுசுறுப்பாக இருக்கும் போது கோப்பி அருந்தினால் ஞாபக சக்தியில் அதிக அழுத்தம் ஏற்படுவது ஆபத்தானதாக அமையக்கூடும். இது தங்கள் அதிக ஞாபக சக்தியின் மீது எதிர் வினையை ஏற்படுத்தக்கூடும்.

### உணவுக்கு இடையே கொறிக்கவும்

நீங்கள் மந்தபுத்தியுடன் விளங்குவதாக உணர்ந்தாலோ, வேலைத்திறன் சற்றுக் குறைந்தாலோ ஏதாவது பழச்சாறு அருந்தலாம். இதனால் உங்கள் வேலைத்திறன் மற்றும் செயல்திறன் அதிகமாகும்.

பலமுறை மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு வேலைசெய்யும்போது உற்சாகம் குறைந்து விட்டதாக எண்ணுவோம். அப்போது வாழைப்பழம், ஆப்பிள், ஓரேஞ்ச் அல்லது சலட், யோக்கட் அலலது தயிர், பழச்சாறு, கோர்ன்பிளேக்ஸ், பிஸ்கெட் என்று ஏதாவது எடுத்துக்கொள்ளலாம். இது உடல் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்லாமல் ஒருவித புத்துணர்ச்சியையும் கொடுக்கும்.

இடையிடையே திரவ உணவுகளை உட்கொள்வதால் உடல் மற்றும் மூளை சுறுசுறுப்புடன் இயங்கவும் உதவும்.

### மனதுக்குள் பேசிக்கொள்ளலாம்

மூளையை அங்குமிங்கும் அலையவிடாது, எண்ணங்களை ஒருங்கிணைக்க நீங்கள் மனதுக்குள் பேசும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளலாம். இதனால், மனம் ஒருமுகப்படும்; நினைவுத்திறனும் அதிகமாகும். உதாரணத்துக்கு நீங்கள் கடைவீதிக்குச் செல்கிறீர்கள், உங்கள் காரை ஓர் இடத்தில் நிறுத்துகிறீர்கள். சாவியை எங்கே வைக்கப்போகிறோம் என்று முடிவு செய்துகொள்ளுங்கள். பிறகு எங்கு போகிறோம், கடந்தமுறை எந்தக் கடையில் வாங்கினோம். இப்ப எந்தக் கடையில் வாங்க உள்ளோம் என்று திட்டமிட்டுக்கொள்வது நல்லது.

## பெண்

பிறகு இதேபோல் திரும்பி வரும்போதும் செயற்பட்டால் உங்கள் கால்கள் தானாக கார் உள்ள இடத்தை வந்தடைந்துவிடும்.

நீங்கள் எந்தப் பொருளை எந்த இடத்தில் வைத்தீர்கள் அல்லது பொருளை தொலைத்துவிட்டாலோ, உங்கள் மனதைச் சற்று பின்னோக்கி அசைபோட்டால் விடை தெரிந்துவிடும். ஆகவே, மனது மகிழ்ச்சியுடன் செயல்பட்டால் எந்த வேலையும் எளிதாகிவிடும் என்பதே உண்மை.

# உடல்பருமனைக் குறைக்க...



'தற்காத்து தற்கொண்டான் பேணி தகை சான்ற சொற்காத்து சோர்விலாள் பெண்' என்று வள்ளுவர் பெண்மையை, பெண்ணின் குணத்தைக் கூறுகிறார். ஆனால், உண்மையிலேயே தன்னைப் பாதுகாத்துக் கொள்வதில் பெண் அக்கறை காட்டுகிறாளா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். பெண்கள் எப்போதும் எது தன் கணவருக்குப் பிடிக்கும், எது குழந்தைக்குப் பிடிக்கும் என்று பார்த்துப் பார்த்து செய்து, முடிவில் மிஞ்சும் உணவினை குப்பைத்தொட்டி போல் நினைத்து தன் வயிற்றை நிரப்பி கொழுப்பினைச் சேகரித்து உடலை பருமனாக்கிக் கொண்டு அதைப்பற்றிய கவலையில்லாமலேயே இருக்கின்றனர்.

ஒரு சிலர் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னே தவங்கிடந்து ரெடிமேட் உணவுப் பொருட்களையும் காய்ந்த ரொட்டித் துண்டுகளையும் சாப்பிட்டுவிட்டு, 'நான் ஒன்றுமே சாப்பிடுவதில்லை. இரண்டு துண்டு ரொட்டி சாப்பிட்டு, எப்படி இப்படி குண்டாகியிருக்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை' என்று கூறுவார்கள்.

அளவுக்கதிகமான கொழுப்பு உடலில் சேர்வதால் உடல் பருமன் ஆகிறது. உடல் உறுப்புகளின் செயல்பாட்டுக்கும் உழைப்புக்கும் தேவையான அளவு உணவு உட்கொண்டால் போதும். அதை விடுத்து, அதிகப்படியான உடல் உழைப்பு இல்லாத நேரத்தில் உட்கொள்ளும் உணவு, கொழுப்பாக மாறி உடலைப் பருமனாக்குகிறது.

சிலர் நொறுக்குத் தீனி மட்டும் சாப்பிட்டு உடலை ஸ்லிம்மாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றனர். தங்கள் உடலுக்குத் தேவையான சக்தி எதில் கிடைக்கிறது என்பதில் ஆர்வமில்லாமல் மற்றவரைப் பார்த்து அதையே நாமும் செய்வோம் என்று நம் பாரம்பரிய உணவை அறவே ஒதுக்கி ரெடிமேட் உணவுகள் பக்கம் தாவிவிடுகின்றனர்.

உடல் பருமனில் இருந்து எம்மை பாதுகாக்க சில யோசனைகள் இதோ:

✱ உணவு உட்கொள்ளும் அளவைக் குறைத்து, உடற்பயிற்சியின் மூலம் ஏற்கனவே இருக்கின்ற அதிகப்படியான கொழுப்பைக் குறைக்கவேண்டும்.

✱ எண்ணெய், கொழுப்புச்சத்து அதிகமாக உள்ள உணவைத் தவிர்க்கவேண்டும்.

✱ நார்ச்சத்து மிகுந்த பருப்பு, பாசிப்பயறு, கடலை ஆகியவற்றை அதிகமாகச் சோக்கவேண்டும்.

✱ நிறையக் காய்கறிகள், வெங்காயம், கரட், வெள்ளரி சலட், கீரை வகைகளை அதிகமாகச் சேர்த்துக்கொண்டு அரிசி போன்ற மாப் பொருட்களைக் குறைக்கவேண்டும்.

✱ இனிப்புகள், கேக்வகைகள், ஜஸ்கிறீம் போன்றவற்றை அறவே தவிர்க்கவேண்டும்.

✱ பழங்களை அதிகம் உட்கொள்ள வேண்டும்.

✱ எல்லாவற்றிற்கும் மேலாக உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்களுக்கு அதன் வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்ற மனப்பக்குவமும் நடைப்பயிற்சியும் விடாமுயற்சியும் அதிகமாக வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

## தக்காளி கிரேவி

**தேவையான பொருட்கள்**

நன்றாகப் பழுத்த நாட்டுத் தக்காளி - ¼ கிலோ
சின்னவெங்காயம்-100 கிராம்
தேங்காய்த் துருவல் - அரை மூடி
மிளகாய் வ்றறல் - 8
தனியா - 2 மேசைக்கரண்டி
கடலைப்பருப்பு - ஒரு மேசைக்கரண்டி
சீரகம் - ஒரு கரண்டி
வெந்தயம் - 1/2 கரண்டி
சீனி - ஒரு கரண்டி
கசகசா - ஒரு கரண்டி
பொட்டுக்கடலை - 1 மேசைக்கரண்டி
கொத்தமல்லி, கருவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவைக்கேற்ப

**செய்முறை:**

சின்ன வெங்காயத்தை தோல் உரித்து, பெரிய துண்டுகளாக நறுக்கவும். தாச்சியில் சிறிது எண்ணெய் ஊற்றி முதலில் மிளகாய் வற்றலைப் போட்டு லேசாக வறுத்து எடுத்துக்கொள்ளவும். பின்னர் தனியா,கடலைபபருப்பு, சீரகம், வெந்தயம், கசகசா எல்லாவற்றையும் போட்டு வாசனை வரும் வரை வறுக்கவும். இறக்குவதற்கு முன் தேங்காய்த் துருவல், பொட்டுக்கடலை ஆகியவற்றைப் போட்டுப் பிரட்டி எடுத்துக்கொள்ளவும். ஆறியவுடன் அனைத்தையும் மிக்ஸியில் நன்றாக அரைக்கவும்.

தக்காளியைக் கழுவி தாச்சியில் சிறிது எண்ணெய் ஊற்றி காய்ந்தவுடன் அதில் போட்டு நன்றாக வதக்கிக்கொள்ளவும். ஆறியவுடன் மிக்ஸியில் விழுதாக அரைக்கவும். தாச்சியில் 4 மேசைக் கரண்டி எண்ணெய் ஊற்றி காய்ந்தவுடன் கடுகு, கடலைப்பருப்பு மற்றும் கறிவேப்பிலையை தாளித்து நறுக்கிய வெங்காயம் சேர்த்து வதக்கவும். சிறிது மஞ்சள்தூள் சேர்க்கவும். வெங்காயம் வதங்கியவுடன் அரைத்து வைத்திருக்கும் மசாலாவை சேர்த்துக் கிளறவும். 5 நிமிடங்கள் கிளறிய பின்னர் தக்காளி விழுதைச் சேர்க்கவும். தேவையான அளவு உப்பு மற்றும் தண்ணீர் சேர்க்கவும். கலவையை மிதமான தீயில் கொதிக்க விட்டு மூடிவைக்கவும். 15 நிமிடங்கள் கொதித்த பின்னர் எண்ணெய் பிரிந்து மேலே வரும். அப்போது சீனி சேர்த்துக் கலக்கிவிட்டு இறக்கி நறுக்கிய கொத்தமல்லியைத் தூவிப் பரிமாறவும். இட்லி, தோசை ஆகியவற்றிற்குப் பொருத்தமான சுவையான கிரேவி இது.



# பயங்கரமான எதிர்காலத்தில் இலங்கை...

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் இரண்டு பெரிய நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று, நவீன இலங்கையின் மிகப்பெரிய தந்திரசாலியாகச் சொல்லப்படுகிற ஜே. ஆர். ஜெயவர்த்தன காலத்தில் ஏற்பட்டது. அடுத்தது இப்போது மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் உருவாகியிருப்பது.

இந்த இரண்டு நெருக்கடிகளும் முழுச் சிங்களச் சமூகத்தின் அங்கீகாரத்துடன் அவர்களால் ஏற்படுத்தப்பட்டவை. ஆனால், இதனால் பாதிக்கப்படுவதோ எந்தவிதமான சம்பந்தமுமில்லாத தமிழ், முஸ்லிம் மக்கள்.

ஜே. ஆரின் காலகட்டம் பனிப்போர் நிலவிய சூழல். அன்றைய சர்வதேச பிராந்திய சக்திகளின் இயல்புக்குள்ளும் போக்குகளுக்கிடையேயும் அவற்றின் அணுகுமுறைகளுக் குள்ளும் புகுந்து விளையாடினார் ஜே. ஆர்.

''தமிழரை அழிப்பதற்காக எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேர்வேன்'' என்று பகிரங்கமாகவே கூறியவர்.

ஆனால், துயரம் என்னவென்றால் அவரை மீறிய நிலைமைகள் அவரையே வியூகமிட்டு அவரைத் தோற்கடித்தன. அவருடைய எந்தத் தந்திரமும், கெட்டித்தனங்களும் அவரைக் காப்பற்றவில்லை. அவருடைய சர்வதேச நண்பர்களாலும் பிராந்திய நண்பர்களாலும் அவரை காப்பாற்ற முடியவில்லை. அன்றைய நிலைமைகளை அறிந்தவர்களுக்கு இதெல்லாம் நன்கு தெரியும்.

யாழ்ப்பாணத்தில் இந்தியா உணவுப் பொதிகளை விமானங்களின் மூலமாகப் போட்டபோது, இலங்கை எந்தளவு நெருக்கடிக்குள் சிக்கியிருந்தது என்பது புரிந்தது. அதற்குப் பிறகு இலங்கையில் நடந்த நிகழ்ச்சிகள் இந்த நெருக்கடியை மேலும் உச்ச நிலைக்கு கொண்டுசென்றன.

இந்திய இராணுவத்தின் வருகை, ஜே.வி. பியின் இரண்டாம் கட்ட எழுச்சிக்கு வித்திட்டது. இரண்டு பெரும் பிரச்சினைகளால் ஜே.ஆர். துவண்டார். அதன் விளைவாக அவர் தவிர்க்க முடியாமல் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகினார். பதிலாக தனக்கு விருப்பமானவர்களை- தன்னுடைய அரசியல் வாரிசுகளை- அவர் சிபாரிசு செய்யாமல் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையுடைய பிரேமதாசாவிடம் ஆட்சியை ஒப்படைத்தார். அப்படியான நிலைமை அப்போது இருந்தது.

தான் தோல்வியடையும் போதும் தன்னுடைய தந்திரத் தனத்தை அவர் கைவிடவில்லை. அந்த நெருக்கடி நிலையில் பலியாகக்கூடியவாறே அவர் தனக்கு விருப்பமில்லாத பிரேமதாசாவை தேர்வு செய்தார். அதாவது, ஜே. ஆரின் அரசியல் வாரிசுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்தார் பிரேமதாச.

பிரேமதாச அந்தக் கொந்தளிப்பான அரசியல் சூழலில் எப்படியும் பலியாவார் என்றே ஜே. ஆர். எண்ணினார். ஒன்று, அவரை இந்தியா அகற்றும் அல்லது ஜே. வி. பி. கொல்லும் அல்லது விடுதலைப் புலிகளால் அவ்ருக்கு ஆபத்து நேரும் என்பதே ஜே. ஆரின் கணிப்பு.

பிரேமதாச இல்லாமல் போகும்போது அதற்குப் பதிலாக தன்னுடைய அரசியல் வாரிசுகளை அதிகாரத்துக்கு கொண்டுவரலாம் என்று விரும்பினார் ஜே.ஆர். ஆனால், அவர் எதிர்பார்த்ததற்கு முரணாகவே நிலைமைகள் அமைந்தன.

அதாவது, அவர் உருவாக்கிய நெருக்கடிகளுக்கும் அவர் விரும்பிய போருக்கும் அவருடைய விருப்பங்கள் அனைத்தும் பலியாகின. அவருடைய வாரிசுகளான லலித் அத்துலத் முதலி, காமினி திசநாயக்க போன்றோர் ஜே. ஆரின் போர் வெறியினாலேயே பலியானார்கள். உண்மையில் இதற்கெல்லாம் பொறுப்பு அவரே. அவை பற்றிய விவரங்கள் அனைவருக்கும் தெரியும் என்பதால் இங்கே அவற்றைக் குறிப்பிடவில்லை.


ஆக, அதைப் போன்றதொரு நிலைமை இப்போது மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலும் உருவாகியுள்ளது. மகிந்த ராஜபக்ஷவும் தந்திரங்களாலும் எதையும் எடுத்தெறியும் கடும் போக்காலும் இந்த நெருக் கடிகளை ஜே. ஆரைப் போல உருவாக்கி யிருக்கிறார்.

பிராந்திய நெருக்கடி, சர்வதேச நெருக்கடி, உள்ளூர் நெருக்கடி என சகல நெருக்கடிகளும் இன்று

இலங்கை த் தீவைச் சூழ்ந்துள்ளன. மனித உரிமை மீறல்கள், தொடரும் போர், பொருளாதார வளர்ச்சியின்மை போன்ற முதன்மைக் காரணங்கள் இந்த நெருக்கடிகளை உருவாக்கி இருக்கின்றன.

ஜே.ஆர். அதிகாரத்திலிருந்த போது தமிழர்களைப் போருக்கு அறைகூவி அழைத்தார். அதே போல் தமிழ் மக்களின் மீது போரைப் பிரகடனப்படுத்தி அதை முழுமூச்சுடன் நடத்திக் கொண்டிருக்கிறார் மகிந்த ராஜபக்ஷ.

ஜே. ஆர். எதிர்க்கட்சிகளையும் பிற தரப்பினரையும் சிதைத்து ஒடுக்கினார். சிறிமாவோ பண்டார நாயக்காவின் குடியுரிமையையே






பறித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சி ஸ்தானத்தில் இருந்தபோதும் அவர்களின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவர்களைக் கைது செய்ய முயன்றார். அதாவது, இவ்வாறெல்லாம் செய்து தனது ஆட்சி அதிகாரத்தை கேள்விக்கிடமில்லாத வகையில் நீடிக்க முயன்றார். அதன்படியே அப்போது ஐ.தே.க.வால் பதினேழு ஆண்டுகாலம் ஆட்சி செய்ய முடிந்தது.

அதைப் போன்றே மகிந்த ராஜபக்ஷ இப்போது பிற கட்சிகளை உடைத்தும் சிதைத்தும் வருகிறார். தமது அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கான வகையில் தன்னை எந்த நிலையிலும் எதிர்க்கும், விமர்சிக்கும் தரப்பினரைப் பழிவாங்கும் இயல்பு இதற்குள் எப்போதும் மறைந்திருக்கிறது. இதன் படி இப்போது அதிகம் எரிச்சலூட்டும் மனிதராக மகிந்த ராஜபக்ஷவுக்கு ரவூப் ஹக்கீமே இருக்கிறார். ஸ்ரீலங்கா, முஸ்லிம் காங்கிரஸை அவர் உடைத்து சுக்கு நூறாக்கியதே இந்த அடிப்படையில்தான்.

ஆயிரம் விமர்சனங்கள், குறைபாடுகள் உண்டென்றாலும் ஹக்கீமே தீர்க்க தரிசனமும், அரசியல் நாகரிகமும், விவேகமும் உள்ள இன்றைய முஸ்லிம் தலைவர். ஆகவே அவரைக் குறிவைக்கிறார் மகிந்த ராஜபக்ஷ.

ஹக்கீமுக்கு எப்பொழுதும் சிங்களத் தரப்பினால் ஆபத்தே. ஏனைய முஸ்லிம் பிரமுகர்கள் மலிவு விலையில் சிங்களத் தரப்பினரால் வாங்கப்பட்டு விட்டனர். அவர்கள் ஒரு 'சீசனு'டன் அநேகமாக காணமாற் போக வேண்டியதுதான். இதுதான் நடக்கப்போகிறது. இதை வேண்டுமானால் யாரும் பொறுத்திருந்து பார்க்கலாம். இதை பற்றி பின்னர் தனியாக விரிவாகப் பார்க்க வேண்டும். இப்போது நாம் மகிந்த ராஜபக்ஷ. ஜே.ஆர். இருவரினதும் வழிமுறைகளைப் பற்றியும், அவர்களுடைய தந்திரம் மற்றும் தவறான போக்குகளால் விளைந்த அரசியல் நெருக்கடிகளைப் பற்றியும் தொடர்ந்து பார்ப்போம்.

தமது அரசியல் ஆதாயத்துக்காக இருவரும் மிகக் கீழ்த்தரமான வழிமுறைகளையெல்லாம் கையாண்டனர். அதற்காக இருவரும் ஒருபொழுதும் வெட்கப்பட்டதோ, தயங்கியதோ, அச்சமடைந்ததோ இல்லை.

விடாப்பிடி, எடுத்தெறியும் போக்கு, இனவிரோதம், போர்ப்பிரியம், அதிகார வெறி என்ற விடயங்கள் இருவருக்கும் பொதுவானவை. இருவருமே இலங்கையின் ஜனநாயகத்தை அதிகம் நெருக்கடிக்குள்ளாக்கிய தலைவர்கள்.

இதன்படி எந்தக் கூச்சமுமில்லாமல் இரண்டு இன வன்முறைகளை நடத்தியவர் ஜே. ஆர். அதைப்போல

கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

கிழக்கில் பெரும்போரை நடத்தி அதைத் தனியாகப் பிரித்திருக்கிறார் ராஜபக்ஷ.

தொடர்ந்து இப்போது வடக்கையும் அப்படியே தன்னுடைய காலின் கீழ் கொண்டு வந்து விட வேண்டும் என்ற பெரும்கனவோடு இருக்கிறார் அவர். தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பற்றியோ, அவர்களுக்கான தீர்வு பற்றியோ சிந்திப்பதை விடவும் அவர்களை எப்படிப் போரில் தோற்கடிப்பது என்பதைப் பற்றியே அவர் அதிகம் சிந்திக்கிறார்.

இதற்காக அவர், தன்னை அறிந்தோ அறியாமலோ ஏராளம் ஏராளம் தவறுகளைச் செய்து கொண்டேயிருக்கிறார். அதனால் பல பிரச்சினைகள் தொடர்ந்து வந்தபடியே இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளே ஸ்ரீலங்கா மீதான நெருக்கடிகளாகவும் இருக்கின்றன.

எனவே, முன்னர் கூறியதைப்போல் இந்தக் காரணங்களால் இப்போது அரசாங்கம் உள்ளூரிலும் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. அதைப்போல வெளியே சர்வதேச ரீதியாகவும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

உள்ளூரில் விலைவாசி உயர்வு, ஊதியத்தை அதிகரிக்க முடியாத நிலை, பொருளாதார நெருக்கடி, முடிவற்றுத் தொடரும்போர், வெல்ல முடியதா இராணுவ நடவடிக்கைகள் என்று இவை எல்லையற்று விரிகின்றன. இதன் உச்ச கட்டமாக இப்போது நாடாளுமன்றத்தையே எந்த அடிப்படையுமற்று மூடும் அளவுக்கு அரசாங்கம் சென்றுள்ளது.

மனித உரிமை மீறல்கள், ஊடகவியலாளர் படுகொலைகள், பொதுமக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லாமை, தொண்டு அமைப்புகளின் பணிக்கு அச்சுறுத்தல் என்ற எல்லா அம்சங்களிலும் அபாயநிலைகள் உருவாகியிருப்பது மகிந்த ராஜபக்ஷவின் காலகட்டத்தில்தான்.

போருக்காகவே எந்த அரசியல் உறவும் என்ற கொள்கையை உடையவர் ஜே. ஆர். 'தமிழரை அழிப்பதற்காக எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேர்வேன்' என்று பகிரங்கமாகவே கூறியவர் அவர். அந்த வழியில் தமிழ் மக்களின் மீதான போருக்காக அந்தப் போரில் தான் வெற்றி பெறுவதற்காக எதையும் செய்யத் துடித்துக் கொண்டிருப்பவர் இன்றைய ஜனாதிபதி. அவர் பலருடைய எதிர்ப்புகளின் மத்தியிலும் மடுத் தேவாலயத்தின் மீதே போரைத் தொடுத்திருக்கிறார். மடு மாதாவை இடம்பெயர வைத்திருக்கிறார்.

தன்னுடைய இந்த மாதிரியான ஏராளம் பிரச்சினைகள், போக்குகள், இயல்புகள் காரணமாக நாட்டுக்கு நெருக்கடிகளை விலைக் கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார் மகிந்த ராஜபக்ஷ. உதவி வழங்கும் நாடுகள் தமது உதவிகளைக் குறைப்பது பற்றி சிந்திக்கின்றன.


ஐ.நா., மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கை தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல பொது சர்வதேச அமைப்புகளும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளன. பகிரங்கமாகவே அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை இலங்கையின் போக்கை பல விதமாகவும் பல தடவைகள் எச்சரித்திருக்கின்றன.

இவ்வாறான ஒரு நிலைமை இதற்கு முன்னர் இலங்கைக்கு ஏற்பட்டதில்லை என்று வரலாற்று ஆய்வாளர்களும் அரசியல் அறிஞர்களும் வருத்தத்தோடு கூறுகிறார்கள். ஆனால், என்னதான் பயன்? 'கெடுகுடி சொல் கேளாது' என்பார்களே! அதைப்போல நாட்டின் நிலைமையை பாதகமான கட்டத்துக்குக் கொண்டு செல்கிறது அரசாங்கம்.

மிகவும் பயங்கரமானதொரு எதிர் காலத்தில் இலங்கை சிக்கியுள்ளது. அதை மீட்பதற்கு இன்று எந்தச் சிங்களவருக்கும் விருப்பமில்லை. பதிலாக இன்னும் இன்னும் நாட்டை அழிவு நிலைக்கே கொண்டு செல்கி றார்கள் அவர்கள். இதற்குக் கார ணம் உலகம் கண்டிக்கும் அநாகரிகம் என்று கூறும் இனவாதமே.

*நன்றி : நிலவரம்*

# சமுதாயப் பிரச்சினைகளை பிரதிபலிக்கும் 'மண்ணில் துழாவும் மனது' வஸீம் அக்ரமின் கவித்தொகுப்பு




'மண்ணில் துழாவும் மனது' ஒரு கவிதைத் தொகுப்பு. இளைஞர்,தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவரான வஸீம் அக்ரம் அக்கவிதைகளின் சிருஷ்டிகர்த்தா.

வாழ்வு பற்றிய ஏக்கம், போர்ச்சூழலை பின்புலமாகக் கொண்ட உணர்வுகள், அவற்றின் பிரதிபலிப்புக்கள், மனிதன் முட்டி மோதிக்கொள்ளும் சமகாலப்பிரச்சினைகள், சமுதாய பொருளாதார கட்டுக்கோப்பின் வெளிப்பாடுகள் என சமூகப் பிரச்சினைகள் கவிதைகளின் பாடுபொருளாகியுள்ளன. இன்றைய கவிதைகளில் பெரும்பாலானவை சமூக அவலங்களின் சித்திரங்களாகவே திகழ்கின்றன. கவிதை மனங்களின் சமூகப் புணர்தலின் பெறுபேறுகள் இவை. கவிஞர்கள் பெரும்பாலும் சமூகப் பிரக்ஞைமிக்கவர்கள்.

'வாழ்வு வரைந்த விதி, மண்ணில் துழாவும் மனது, மரணப் பொழுது, நீயும் நானும், பட்டினிப் படுக்கை, இது எனது மண், அட்டைகள், காதல் அல்லது கவிதை சொல்லும் காலம், மரணவெளி விவரணைகள், விடியலைத்தேடும் விழிகள், சோரம், சிநேகம், யதார்த்தத்தின் தோல்விகுறித்து, ஆயுதத்தின் ஓலம், வீதிக்குரல்கள், நவீன காலனித்துவம், இருப்பு, நீயில்லாத நிகழ்காலம், பயணவெளியிலிருந்து, இருட்டறை, மூன்றாம் தலைமுறைக் கனவுகள், எல்லை பற்றிய பிரத்தியேக குறிப்புகள், தேசியம் குறித்து, ஏமாற்றப்பட்ட உணர்வுகளின் முகம், சுமைகள், சூரியனை மென்றுவிட்டு செல்லும் இருளில்...' ஆகிய கவிதைகள் நூலில் உள்ளடக்கமாகியுள்ளன. அத்துடன், ஆசிரியரின் 'எனது ஆத்ம எண்ணம்' எனும் உணர்வலைகளின் உரையுடன் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை தலைவர் ருமீஸ் அப்துல்லாஹ், தமிழ்ச்சங்கத் தலைவர் எம்.எஸ்.அஸாருதீன் ஆகியோரின் நூல் பற்றிய முன்னுரைகளும் நூலின் உள்ளடக்கமுடன் இணைந்துள்ளன.

**கே.வி.**

கவிஞர் அன்பு ஜவகர்ஷா நூலாசிரியர் குறித்து சில குறிப்புகள் தந்திருக்கிறார். நூலாசிரியர் எல்.வஸீம் அக்ரம் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர். தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர். கடந்த 5 வருடகாலமாக 'படிகள்' சஞ்சிகையை நடத்திவருகிறார் என அக்குறிப்புகள் அமைகின்றன. ஏற்கனவே, பத்திரிகைகளிலும் பிரசுரமான கவிதைகளே கவிதைத் தொகுப்பாகியுள்ளன.

இலக்கியப் பற்றுமிக்கதான நமது இளைய சமுதாயம் ஆக்க இலக்கியத்திற்கான விளைச்சலை மானிட வாழ்வு எனும் நிலத்திலே கால்பதித்து உழற்றி எடுக்கின்றது. அவ்வயல்வெளியின் பிரச்சினைகளே கவிதைகளின் உட்கருக்களாகி நகமும் சதையுமென உருவமைதி காண்கிறது. புதுக்கவிதைகள் எனும் கோல வடிவினை அது பூண்டிருந்தாலும் கவிதைகள் சூல்கொண்ட மேகமென கனதியாகி விட்டிருப்பதும் அதனால்தான். கண் முன்னே நிகழ்கின்ற வாழ்வியல் துயரங்களை தினம் தினம் தரிசிக்கின்ற ஒரு கவிமனம் அதனை வெளிப்படுத்த மொழியூடாக பிரசவிக்க எழுதுகோலை பயன்படுத்துகின்றபோது உணர்வுப் பிரவாகமாக கவிதைகள் வெளிப்படுகின்றன. வஸீம் அக்ரமின் கவிதைகளும் அத்தகைய பிரவாகத்தின் அணையுடைப்புக்களே. அதனால்தான் அனைவற்றையும் விட உணர்வுகளே எஞ்சி நிற்கின்றன.

"நான் வாழ்ந்த, வாழ்கின்ற சூழலில் கண்ட அனுபவங்களையும் அறிவுரீதியாக உள்வாங்கிக் கொண்ட அனுபவங்களையும் எனது (கவிதா) மொழியில் பதிவுசெய்யத் துணிகிறேன்" என்கிறார் அக்ரம். அந்தப் பதிவுகளில் சில அழகியலுடன் ஆழ்மனத்தில் வேரோடுபவை.

மாமிசப் பாடலுக்கான
குருதிப் புனைவுகளில்
கல்லறை தூரத்தை
கணக்கிட்டுக் கொண்டு
உயிரின் இருத்தல் தொடர்கிறது.

........................................

என் இருப்பில் புகுந்து
சாதுவான ஆத்மாக்களை
ஆவேசமாக தாக்கிவிட்டு
ஆயுதத்தோடு ஓடிவிட்டாய்
நீ சமாதான மிருகமா

........................................

இனியொரு
ஆடும் ஓநாயும் ஒன்றித்திருக்கும் காலம்
கனியாதா...?
சூரியனை மென்றுவிட்டு துயிலும் இருளில்
எமது சுதந்திரம்
சிலையாக செதுக்கப்படுகிறது
உனது விரல்களால்.

மூதூர் - தோப்பூர் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதை குறித்து எழுதப்பட்ட கவிதையின் சில வரிகள் இவை.

வலிமைமிகு சொற்கள், அழகியல் மிக்க வரிகளாகி கவிதை வடிவம் கொள்வதும் நெஞ்சில் ஆழமாக வேரோடச் செய்வதுமான கவித்துவம் வஸீம் அக்ரமின் பல கவிதைகளில் துளிர்விட்டு அசைகிறது.

எல்.வஸீம் அக்ரம்
78B, ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம்.
தொலைபேசி: 0713565219, 0252225300 எனும் முகவரியுடன் தொடர்புகொண்டு நூலினை பெறலாம்.







## அவரேதான் இவரு; இவரேதான் அவரு!

ஒருவர் ஒரு வீட்டின் முன்சுவரில் ஒரு நோட்டீசைக் கண்டார். என்னேன்னு பார்த்தார். அந்த வீட்டுக்காரரை புகழோ புகழ்ன்னு புகழ்ந்து எழுதப்பட்டிருந்தது. பக்கத்துலே ஒருவர் நிற்கிறார்.

"ஏன்ங்க! இப்புடி புகழ்ந்து எழுதியிருக்கே ரொம்ப நல்ல மனுசனா?"

"ஆமா! ஆமா!" - ஆமாம் சாமி போட்டவர் முகத்தை ஆட்டினார்.

"இவரைப் பத்தி நல்லா தெரிஞ்ச ஒருவர் தான் எழுதியிருக்காரா?"

"ஆமா! ஆமா!" மேலும் கீழும் முகம் ஆடுவது தொடர்ந்தது.

"ஓஹோ! அப்புடின்னா நெருக்கமானவராகத்தான் இருக்கவேணும். இல்லேன்னா இப்புடி புகழ்ந்து எழுதியிருக்கமாட்டாரே"

"ஆமா! ஆமா!"

"அது கெடக்கு மனுஷன் தானதருமம் பண்ணுரவரா?"

"ஆமா! ஆமா!"

"நல்ல மனம். ஒழுக்கசீலர், கல்வியறிவு, மகான், தத்துவஞானி, உலகசமாதானம் அடேயங்கப்பா இவ்வளவு விவகாரங்களிலேயும் ரொம்ப நல்லவராக இருக்காரே அவரைப் பத்தி புகழ்ந்து எழுதுன புண்ணியவான் நீங்களா?"

"ஆமா! ஆமா!

"நெனைச்சேன். ரொம்ப நல்ல பணி. அது கெடக்கு, எதுக்கு இப்புடி சுவத்துலே எழுதி வைக்கிறீங்க. அந்தக் காலத்து புலவர்கள் மாதுரி முன்னாலே போய்நின்னு புகழ்ந்துபேச வேண்டியதுதானே. உச்சிகுளிர்ந்து போய் அஞ்சோ பத்தோ குடுப்பாரே"

சிரித்துக்கொண்டு பணிவாகச் சொன்னார், "ஏதும் கிடைத்தால் அவருக்கும் சில்லறை பங்கு கிடைக்குமல்லவா".

"ஆமா! ஆமா! வெளிவரவில்லை". மனுஷன் முழுசிப்பார்த்தார்.

"முடியாது" என்றார்.

"என்னது முடியாதா அடப்பாவி பொழைக்கத் தெரியாத மனுஷனா இருக்கியே. போய்யா போ. அவர் முன்னாலே நின்னு நாலுவார்த்தை புகழ்ந்துபேசு. வள்ளல் சன்மானம் தருவார்".

"முடியாது"

"ஏன்?"

'அட என்னையா நீரு. உம்மோட பெரிய தொல்லையா போச்சு. தொணன்னு தொணன்னு பேசிக்கிட்டே போரீரு. அந்த வள்ளலே நான்தான். போதுமா?"

"துலைஞ்சுது போ.நம்ம எழுத்தாளர்கள் பொழப்பும் இப்புடித்தான் ஆயிப்போச்சு. நேர்காணல், நினைத்துப் பார்க்கிறேன், அந்த நாள்கள் ஆய்வு என்றெல்லாம் இப்புடித்தானே தமது படைப்புகள் பற்றி சுயபுகழ் பாடிக்கிட்டிருக்காங்க".

## அன்பாகத் தடவி அறுக்கும் கைகள்

"அடிச்சு பயம் காட்டுரவனவிட, அன்பா பேசி அறுக்கிறவன் பொல்லாதவன்".

ஓர் இளம் பத்திரிகையாளர் நடுக்கத்தோடு புலம்பினார்.

"அனுபவம் பேசுதாக்கும்" அம்மான் கண்களை சிமிட்டிக்கொண்டு கேட்டார்.

"ஆமாங்க! நம்ம ஆபிசுல இப்புடித்தான் நம்ம தலையை தடவி விட்டுன்னே புகழ்ந்து பேசுவாரு".

"அம்பி! செய்தி செய்கிற பக்கம் நல்லா இருக்கு, நல்லா இருக்கு, நல்லாவே எழுதுரே கெட்டிக்காரன, பெரியவர்க்கிட்டே சொல்லி சம்பளத்தை உயர்த்துரேன். உயர்த்துரேன் இப்புடி ஒரே புகழ்மாலை செஞ்சிண்டே அவருடைய வேலைகளை என்மூலம் செஞ்சிடுவாரு".

"அடேயங்கப்பா! யார் இந்த மவராசன் நல்லா இருக்கனும்"

"நம்ம சீனியர்தான் இப்புடி புகழ்வார்".

"அடிசக்கை நீ கொடுத்து வைச்சவன்"

"உம், சம்பளம் உயர்த்துர நாளும் வந்துது. 'லஞ்' டைமுலே இந்த மவராசன் ஒரு பார்சல் மீன் பொரியல் கொண்டுவந்து நாலைஞ்சு பேர் சாப்பாட்டுலேயும் வைச்சாரு. போதாதுதிற்கு நம்ம ஆளுக்கு சம்பளம் உயரப்போவது அதுதான் மீன்பொரியல் உபகாரம் பண்ணுராருன்னு எல்லோர் மொகத்திலேயும் புன்னகையை வரவழைச்சுட்டாரு. இல்லேன்னு சொல்லமுடியுமா 'ஆமாஞ்சாமி' போட்டுட்டேன். ஏன்னா என்னை காட்டித்தானே சொன்னாரு".

"அடப்பாவமே! இதுக்கா மொகத்தை தொங்கப் போட்டுக்கிட்டு இருக்கே"

"உம்கும் விசயமே இனிமேதான். புரமோஷன் நாளும் வந்துது. புரமோஷனும் இல்லே, சம்பள உயர்வும் இல்லே. செய்துகிட்டிருந்த செய்திபக்கத்தை பறிச்சுட்டாங்க".

"ஆகா! ஏன் அப்படி"

"நான் மீன் பொரியல், லட்டு பார்சல் சொக்கலேட்டுன்னு குடுக்கிறவங்களுடைய செய்தியைத்தான் போடுறேனாம். நம்ம ஆளான மவராசன் பெரியவர்கிட்ட போட்டுக் குடுத்திட்டான். அதுமட்டுமில்லாம நான் எல்லோருக்கும் மீன் கொடுத்தேன் என்கிறதுக்கு சாட்சிகளையும் கூட்டிப்போயிருக்கான்".

"அடப்பாவி"

# எம்.ஜி.ஆர். வளர்த்த அ.தி.மு.காவை ஜெயலலிதா காப்பாற்றுவாரா?

தமிழக அரசியலில் பலமான அத்தி வாரமிட்டு அ.தி.மு.காவை அசைக்க முடியாத சக்தியாக மாற்றியவர் எம். ஜி. ஆர்., அவர் காலத்தில் அ.தி. மு. காவின் அடிப்படை உறுப்பினர்களாக இருந்து கட்சியை பலமிக்கதாக வைத்திருந்தவர்கள் யார் தெரியுமா? கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள் மற்றும் தலித் மக்கள். ஆனால், ஜெயலலிதா அ.தி.மு.காவுக் குள் வந்தபின் எம். ஜி.ஆர். மறக்கடிக் கப்பட்டார், புறக்கணிக்கப்பட்டார். சசிகலா அன் கோவுக்குள் சிறைப்பட்ட ஜெயலலிதாவை சாமான்யர்களால் சந்திக்க முடியவில்லை. எனவே, அ.தி.மு. காவின் அத்திவாரமாக இருந்த அந்த அடிப்படை உறுப்பினர்கள் விஜயகாந்த் பக்கம் போய்விட்டார்கள். இதனால் அ.தி.மு.கா., மாலுமியிருந்தும் அலைகளுக்கிடையே சிக்கித் தவித்துக் கொண்டிருப்பதாக தமிழக அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

நாவலர், பண்டிருட்டி, திருநாவுக்கரசு, சேலம் கண்ணன், சேடப்பட்டி, செல்வகணபதி என்று எம். ஜி. ஆரால் வளர்க்கப்பட்ட பலர் ஓரம்கட்டப்பட, சசிகலாவுக்கு ஆமாம் சாமி போடுபவர்கள் மட்டுமே கட்சியில் ஒட்டிக்கொண்டிருக் கிறார்கள். ஜெயலலிதா, சசிகலாவின் ஊழல் வழக்குகள் பலவற்றை மிகத் திறமையாக கையாண்டு அவர்களை விடுவித்த பிரபல வழக்கறிஞர் ஜோதி இப்போது தி.மு.காவில் இணைந்துவிட்டார். அங்கே உண்மையான தொண்டர்களுக்கு மரியாதையில்லை. சசிகலா குடும்பத்தினர் தங்கள் சுயலாபத்திற்காக கட்சியை நடத்துகிறார்கள். கட்சியின் பொதுச் செயலாளரான ஜெயலலிதா அந்த கூட்டத்தில் ஒரு சூழ்நிலைக் கைதியாக மாட்டிக்கொண்டதாக அங்கேயிருந்து வெளியேறிய பலர் ஒட்டுமொத்தமாக கூறுகிறார்கள். சசிகலா, தினகரன் அன் கோ ஜெயலலிதாவை தங்களின் இறுக்கமான பிடியில் வைத்துக்கொண்டு கட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே சிந்தனையுடன் செயல்படுவதாக எம்.ஜி.ஆர். விசுவாசிகள் கவலை தெரிவிக்கின்றார்கள். ஜெயந்திரர் விவகாரம், டான்ஸி வழக்கு மற்றும் நான்கு இடங்களில் வேட்பு மனுத்தாக்கல் செய்தது உட்பட பல்வேறு பிரச்சினைகளில் ஜெயலலிதாவை சிக்கவைத்தது, சசிகலாவும் தினகரனும் தானென்பதை வழக்கறிஞர் ஜோதி ஜெயலலிதாவிடம் சொல்லிவிட்டாராம். இதனால் ஆத்திரப்பட்ட சசிகலா, தினகரன் கோஷ்டி திட்டமிட்டு ஜோதியை அம்மாவை சந்திக்கவிடாமல் செய்ததாம்.



ஜெயலலிதாவுக்கு சொத்தாசை யெல்லாம் கிடையாதாம். ஆனால், இன்று இவ்வளவு சொத்துகள் சேர்த்தது யாரால் என கேள்வி கேட்கிறார் ஜோதி. இன்று அ.தி.மு.காவில் முக்கியமான பொறுப்புகளில் இருப்பவர்கள் எல்லோருமே சசிகலாவின் ஆதரவாளர்கள் மற்றும் உறவினர்கள் தானாம். அடுத்த தேர்தலில் அநேகமாக தினகரன் ஆதரவாளர்கள் தான் 'சீற்' பெறுவார்களாம். இதே நிலை நீடித்தால் அ.தி.மு.க. அழிவை நோக்கித்தான் செல்லும் என அந்த கட்சியின் பழைய உறுப்பினர்கள் கவலைப்படுகிறார்கள். மக்களின் செல்வாக்கு பெருகி வரும் விஜயகாந்தை தன் கைக்குள் வைத்திருக்காமல் யார் பேச்சையோ கேட்டு அவரைக் குடிகாரர் எனக் கூறிவிட்டார். பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் வெறும் வெளிநடப்பு மட்டும் செய்தால் போதுமா? தி.மு.காவின் கூட்டணிக் கட்சியான பா.ம.க. அளவிற்கு கூட ஆளுக்கட்சிக்கு எதிராக போராட்டங்களில் அ.தி.மு.கா. குதிக்கவில்லை. மேலும் ஜெயலலிதாவை சாதாரண மக்களால் சந்திக்கவே முடியவில்லை. உடனடியாக ஜெயலலிதா, சசி பிடியிலிருந்து விடுபட்டு ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடாவிட்டால் அ.தி.மு.காவை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது என எம். ஜி. ஆர். பக்தர்கள் வேதனையுடன் புலம்புகிறார்கள்.

**பாலா.சங்குபிள்ளை**


## பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டு கோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியு டன், தேசிய அடையாள அட்டை யின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.
கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி
'பேனா நண்பர்கள்'
இல.85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.


# தேவன் வருகை

*விஞ்ஞானச் சிறுகதை*

அந்தச் செய்தி எங்கிருந்து எப்படித் தோன்றியது? அதன் எதிரொலி உலகெங்கும், கிரகங்கள் எங்கும், மனிதன் மனிதனுடன் பேசும் போதெல்லாம் அவன் சிந்தனையில் பெரும்பான்மையை அடைத்துக் கொண்டு அந்த ஒகஸ்ட் மாதத்தை உயிர்களின் சரித்திரத்தில் ஒரு தழும்பாக, வடுவாக மாற்றியது. ஒரு சர்வதேச சர்வ அம்ச ஆவேசமாக ஜுரமாக விரவிப் பரவிய அந்தச் செய்தி ஒரு தினத்தில் ஏறக்குறைய ஒரே சமயத்தில் செய்தித்தாள்களில்,

வானொலி,தொலைக்காட்சி போன்ற மனிதத் தொடர்புச் சாதனங்களில், ஏன்,மழை காலப் பச்சை போல திடீர் என்று தோன்றிய சுவரொட்டிகளில் எங்கும் தோன்றியது.

செய்தி இதுதான்:

*தருணம் வந்துவிட்டது இன்னும் பதினைந்து தினங்கள் கழித்து வெள்ளிக்கிழமையில் சூரிய உதயத்தின்போது நான் உங்கள் முன்தோன்றுகிறேன் .நாடு நகரங்களில் இருப்பவர்கள் ஒரு பொதுஇடத்தில் கூடி இருங்கள் என்னை எதிர்நோக்கி.*

*-கடவுள்*

செய்தித்தாள்களில் முன்பக்கத்தில் கட்டமிட்டுப் பெரிய எழுத்துகளில்; நட்ட நடுவே தொலைக்காட்சி ஸ்டீரியோவிஷன் சாதனங்களில் நடந்துகொண்டிருந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டு திரைகளை ஆக்கிரமித்தது. வானொலி சங்கீதங்கள் வெட்டுண்டு



அமைதியான குரல் ஒன்று இந்தச் செய்தியைப் பேசியது.

சுவரொட்டிகள் தோன்றின... யாரோ கொடுத்தார்கள் என்று கத்தைக் கத்தையாகச் சிறிய பையன்கள் நோட்டீஸ் துண்டுகளை வீதிகளில் வாரி இறைத்தார்கள்... எல்லாவற்றிலும் ஒரே வாசகம்... ஒரே கடவுள்... உலக அரசின் உள்துறை அமைப்பின் தலைமைச் செயலகத்தில் அவசர கூட்டத்தில் ஒரு பிரம்மாண்டமான அறையில் அவர்கள் கூடியிருந்தார்கள். ஆத்மாவின் தலை கலைந்திருந்தது. தூக்கமின்மை அவர் கண்களில் தெரிந்தது. அவர் இரத்த அழுத்தம் எகிறிப்போயிருந்தது.

''என்னய்யா,கண்டுபிடித்தீர்களா, எங்கிருந்து இந்தச் செய்தி கிளம்பியிருக்கின்றது என்று....?''

எதிரே முட்டை வடிவ மேஜையைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த அத்தனை முகங்களிலும் ஈயாடவில்லை.

''செய்தி வந்து இரண்டு நாட்களாகிறது. இன்னும் கண்டுபிடிக்கவில்லையா, யார் இந்த விஷமம் செய்தது என்று? என்னய்யா, டாக்டர் பரஞ்சோதி... அத்தனை விஞ்ஞான சாதனங்களையும் பரிபாலனம் செய்து வருபவரிடம் இது எப்படிப் புகுந்தது? உங்கள் முட்டாள் கம்பியூட்டர்கள் என்ன சொல்கின்றன... உங்களுக்கெல்லாம் தண்டத்துக்குச் சம்பளம் கொடுக்கிறதா...?''

''நீங்கள் உணர்ச்சிவசப்படாமல் இருந்தால் நான் பேசுகின்றேன்'' என்றார் டாக்டர் பரஞ்சோதி.

''ஓல்ரைட்! உணர்ச்சியே இல்லை எனக்கு ! நீங்கள் சொல்லப்போவதைக் கூர்ந்து கவனமாக, நிதானமாகக் கேட்கிறேன். மௌனமாகக் குறுக்கிடாமல் கேட்கிறேன் சொல்லு'' என்று மேஜையை குத்தினார்.

எல்லோரும் எச்சிலை விழுங்கிக்கொண்டார்கள்.

''ஆத்மா! இந்தச் செய்தி எப்படிப் புறப்பட்டது என்று இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரே சமயத்தில் அத்தனை சாதனங்களிலும் ஒரே வார்த்தை அமைப்பில் தோன்றுவது... மனித சாத்தியமில்லை.''

''அப்படியென்றால் நீயும் இது கடவுள் அனுப்பிய செய்தி என்கின்றாயா? உனக்கு ஜுரம் வந்துவிட்டதா?''

''வேறு ஒரு காரணமும் கண்டுபிடிக்க முடியவில்லை.''

''சரிதான்! என்னய்யா செய்தி ஸ்தாபனம் நடத்துகிறீர்கள்... இந்தப்....''

''ஒரே ஒரு கேள்வி'' மேஜையின் ஓரத்தில் இருந்து குரல் வந்தது. இளம் டாக்டர் க்ராஸ்மன்... மனோதத்துவ பிரிவு.

''என்ன?''

''ஆத்மா, நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் இதைப் பற்றி?''

''சத்தியமாக இது ஒரு விஷமம்! யாரோ கிளப்பிவிட்ட புரளி... திட்டமிட்டுச் செய்யப்பட்ட கேலி!''

''எதற்காக அப்படி ஒருவர் செய்ய வேண்டும்?''

''எதற்காக? நீயே பார்க்கிறாயே,உலகத்தின் இன்றைய மனநிலையை. எல்லோரும் இதைப் பற்றியே பேசுகிறார்கள். எங்கே போனாலும் கடவுள் வருகையைப் பற்றித்தான் பேச்சு... இது நிஜமா? பொய்யா? நீ நம்புகிறாயா? நம்பிக்கை இல்லையா?

பந்தயங்கள்,பேச்சுக்கள்...

(21ஆம் பக்கம் பார்க்க)

# சிரிக்க சிந்திக்க



சிலர் குழந்தை பிறந்ததும் கர்ப்பப்பை சுருங்குவதற்காக வயிற்றில் இறுக்கமாக துணியைக் கட்டுவார்கள். அது அவசியமில்லை! கர்ப்பப்பை சுருங்குவது என்பது இயற்கையான விஷயம். அதற்காக வயிற்றைக் கட்டிக் கொண்டு அவதியுறுவது தேவையற்றது. சுகப்பிரசவம் ஏற்பட்டவர்கள் ஒரு மாதத்துக்குப் பிறகு உடற்பயிற்சி செய்வதன் மூலமும், சிசேரியன் செய்து கொண்டவர்கள் 4 முதல் 6 மாதங்களுக்குப் பிறகு உடற்பயிற்சி செய்வதன் மூலமும் உடலினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

மேலும், கர்ப்ப காலத்தில் இருந்தே தாயின் வயிற்றில் கோடுகள் ஏற்பட ஆரம்பிக்கும். தோலின் தன்மையைப் பொறுத்து, சிலருக்கு அது அதிகமாகவும் சிலருக்கு குறைந்த அளவிலும் இருக்கும். கர்ப்பமாக இருக்கும் 6ஆம் மாதத்திலிருந்தே விட்டமின் எண்ணெய்களையும் கிரீம்களையும் மேல் தடவி வருவதன் மூலம் இதனை ஓரளவு குறைக்கமுடியும்.

## வேலை நிலைக்க 5 வழிகள்



'சொந்தக் காலில் நிற்பது முக்கியமில்லை. நின்ற இடத்தில் நிலைப்பதுதான் முக்கியம்' என்பார்கள். எந்த ஆபீஸில் வேலை செய்தாலும் அதில் நிரந்தரமாக நிலைத்து நிற்க வேண்டும். அதற்கு 5 எளிய வழிகள்.

1. நீங்கள் என்னதான் நல்லவராகவும், நாணயமானவராகவும் இருந்தாலும் திறமை இல்லாவிட்டால் மதிப்பு இருக்காது. எனவே, ஒவ்வொரு மாதமும் உங்கள் திறமையில் ஒரு சதவீதத்தையாவது கூட்டிக் கொள்ளுங்கள்.

2. ஆபீஸில் பலம்பொருந்தியவர் யார் எனக் கண்டறியுங்கள். அவர்கள் சொல்லும் வேலைகளை விரைந்து முடியுங்கள். அவர்கள் விரும்பும் விதத்தில், எந்த வேலையைக் கொடுத்தாலும் செய்து முடிப்பவர் என்ற இமேஜை எல்லோரிடமும் வளர்த்துக் கொள்ளுங்கள். முக்கியமான நேரங்களில் இது கைகொடுக்கும்.

3. ஆபீஸ் என்றால் கோஷ்டி அரசியல் இல்லாமல் இருக்காது. நீங்கள் எந்த கோஷ்டியிலும் உங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ளாதீர்கள். முடிந்தால், அந்த கோஷ்டிகளை இணைக்கும் பாலமாகச் செயல்படுங்கள். இது அதிக பலன்களைக் கொடுக்கும்.

4. உங்களைப் பற்றி நீங்களே உயர்த்திச் சொல்லாமல் இருந்தால் வேறு யார்தான் சொல்வார்கள். சமயம் கிடைக்கும் போதெல்லாம் உங்கள் மேலதிகாரிகளிடம் நீங்கள் சமீபத்தில் அலுவலகத்துக்காக செய்து முடித்த சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள்.

5. உங்கள் தரப்பு வாதங்களை எப்போதும் உரிய ஆதாரங்களுடன் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லுங்கள். வழவழ 'டைப்' ஆட்களைப் போல் பேசாதீர்கள்.



பள்ளிப் பாடங்களை பாடல்களாய்ப் பாடும் குழந்தைகளின் குரல் கேட்டு வீணை வாசிப்பதை நிறுத்திவிட்டு கலைவாணி லயித்து ரசிக்கிறாள்!

## செல்மொழி



பொலிஸுக்கு கேஸ் வேண்டும்,
டாக்டருக்கு பேஷன்ட் வேண்டும்,
பல்விளக்க ப்ரஷ் வேண்டும்
என் எஸ். எம். எஸ். படிக்க
ஒரு லூஸ் (நண்பன்) வேண்டும்.

## புல் வெட்டும் 'திரில்' பெண்கள்



'வேலைக்காரி - வீட்டுக்காரர்' ஜோக்குகள் நிறைய படித்திருப்போம். அவை அப்படியே உண்மையில்லை என்றாலும், 'மாற்றான் தோட்டத்து மல்லிகை' மயக்கம் எல்லா ஆண்களுக்கும் உண்டுதான். இந்த மயக்கத்தை தங்களின் பிஸ்னஸை டெவலப் செய்ய நினைத்து விட்டார்கள்; இவர்களுக்குப் போன் போட்டால் போதும் மேலும், கீழும் இரு 'கர்ச்சீப்களை' மட்டும் அணிந்த அழகிய இளம் பெண்கள் வந்து இறங்கி விடுவார்கள் - புல்வெட்டும் கருவி, பூச்சிக்கொல்லி மருந்துத் தெளிப்பான் சகிதமாக.
வீட்டுத்தோட்டத்தை வெட்டிக் கொத்தி திருத்தி அமைத்துவிட்டு, மறக்காமல் கணிசமான தொகையும் பெற்றுக் கொண்டு கிளம்புகிறார்கள்.
'ஞாயிற்றுக்கிழமையும் அதுவுமா ஏன் மண்வெட்டியும், சட்டியுமாக அல்லாடுகிறீர்கள்? எங்களை அழையுங்கள். 'அழகை' ரசியுங்கள். 'வேலை முடிந்து விடும்' என்று விளம்பரப்படுத்துகிறார்கள். ஆனால், மேலைநாட்டு பெண்கள் இதையெல்லாம் விரும்பவில்லை. பின்னே, புல் வெட்டிய கையோடு புருசனை லவட்டிக் கொண்டு போய்விட்டால்...?



## சிறுவர்களும் பருவ வளர்ச்சியும்

சிறுமிகளின் உடல் மாற்றங்கள் வெளிப்படையாகத் தெரிகின்ற அளவுக்கு சிறுவர்களுக்குத் தெரிவதில்லை. அதிக பட்சமாக, அரும்பு மீசையும் உடையும் குரலும் திடீர் உயரமும்தான் ஒரு சிறுவன் பருவமடைவதை வெளியுலகத்துக்குச் சொல்லும். ஆனால், இந்த வெளிமாற்றங்கள் நிகழ்வதற்கு முன்னரே அவனுடைய உடலுக்குள் பல மாற்றங்கள் நிகழத் தொடங்கி விடுகின்றன. டெஸ்டிஸ் எனப்படும் விதைகள் வளர்ச்சி அடைவதுதான் ஆண் பருவ வளர்ச்சியின் முதல் மாற்றம். விதைகள் துண்டாப்பட்டு, ஆண்களுக்கான செக்ஸ் ஹோர்மோனான டெஸ்டோஸ்டீரான் (Testosterone) வெளிப்பட்ட உடனேயே பருவ வளர்ச்சியும் தொடங்கி விடும். அதே நேரத்தில் விதைகள், இன்னொரு முக்கியமான வேலையையும் செய்ய ஆரம்பித்துவிடும். அதுதான் விந்தணுக்களின் உற்பத்தி! இதைத்தான் உயிரணுக்கள் என்கின்றோம். பல விந்தணுக்களைக் கொண்ட வெள்ளை நிற திரவம்தான் விந்து. உதாரணமாக தண்ணீரில் மீன்கள் நீந்துவது போல, பல விந்தணுக்கள் உமிழ்நீர் போன்ற திரவத்தில் நீந்திக்கொண்டிருக்கும். முதன் முதலில் ஒரு சிறுவனுக்கு விந்தணுக்கள் உற்பத்தியாகுமே தவிர, அவை விந்துவாக வெளிப்படாது. விந்து உருவாகும் வரை விந்தணுக்கள், சிறுநீரோடு கலந்து வெளியேறிவிடும். டெஸ்டோஸ்டீரான், ஒருபக்கம் சிறுவர்களின் பருவ வளர்ச்சியை கவனிப்பதுடன் இன்னொரு பக்கம் விதைகளையும் டெஸ்டகில்ஸ்ஸையும் (விதைகளை தன்னுள் அடக்கியிருக்கும் சிறிய விதைப்பை) வளர்ச்சி அடையச் செய்கிறது.

விதைப்பையின் வெப்பநிலை, உடல் வெப்பநிலையை விட இரண்டு டிகிரி குறைவாக இருக்க வேண்டும். அதனால்தான் இது ஆண்களின் உடலுக்கு வெளியே இருக்கிறது. விதைகளின் வளர்ச்சியைத் தொடர்ந்து ஆண் உறுப்பும் பெரிதாகத் தொடங்கும். அதைத் தொடர்ந்து மறைவிடங்களில் ரோம வளர்ச்சியும் ஏற்படும்.

இந்த சமயத்தில் ஒரு நூதனமான பிரச்சினையை சில சிறுவர்கள் சந்திப்பார்கள். பல அம்மாக்களும் கூட பயந்துபோய் தங்கள் மகன்களை அழைத்துக் கொண்டு மருத்துவரைத் தேடி வருவார்கள்.

அதுதான் மார்பக வளர்ச்சி! இது பயப்பட வேண்டிய விஷயமே இல்லை. பருவ மாற்றத்தில் நிகழக்கூடிய இயல்பான விஷயம்தான் இது! ஐம்பது சதவிகித ஆண் பிள்ளைகளுக்கு பருவ வளர்ச்சி தொடங்கும் வயதில் இப்படி மார்பக வளர்ச்சி ஏற்படும். (27 ஆம் பக்கம் பார்க்க )



''என் மனைவி நடு ராத்திரில எழுந்து சமையல்கட்டுக்குள்ளே போறா டாக்டர்!''
''அதனாலென்ன?''
''அவளுக்கு தூக்கத்தில 'நடிக்கிற' வியாதி இருக்குனு சந்தேகப்படறேன்!''



''அறுபதிலும் ஆசை வரும் என்று பாடாதீங்கன்னு சொன்னேன் கேட்டீங்களா?''
''ஏண்டி''
''இப்ப நான் முழுகாம இருக்கேன். வெளியே தலை காட்ட முடியல''



''என்ன இது...உங்கள் வீட்டு நாய் இப்பத்தான் என்னை முதன் முதலாகப் பார்க்குது. ஆனாலும், பழகின மாதிரி வாலாட்டுதே''
''இதுக்குப் பெயர்தான்டா இனப்பற்றுன்னு சொல்வது.




எல்.எம்.நௌபர்,
காத்தான்குடி.

கேள்வி : பித்தா, 5000 ஆம் ஆண்டில் இந்த உலகம் எப்படி



இருக்கும் ?

பதில்: அதே உருண்டையாகத் தான் இருக்கும்.

பி.ஜெனகரூபன்,
மீசாலை.

கேள்வி : பித்தங்கிள், எனக்கு ஒரு சந்தேகம். 'பா' எத்தனை வகைப்படும் என்று கூறமுடியுமா?

பதில்: நான்கு வகைப்படும்.



ஆசிரியப்பா, கலிப்பா, வெண்பா, வஞ்சிப்பா அத்துடன் படையப் பாவையும் சேர்த்தால் ஐந்து.

கோமதி சரவணன்,
வவுனியா.

கேள்வி : ஆற்றிலே போட்டு குளத்தில் தேடுவது என்றால் என்ன பித்தா?

பதில்: வயதான பாட்டி வீட்டிற்கு வெளியே எதையோ தேடிக் கொண்டிருந்தார். அங்கு வந்த ஒருவர் ''என்ன தேடிக்கொண்டி ருக்கின்றீர்கள்'' என்று கேட்டார். ''வீட்டிற்குள்ளே போட்ட நகையை தேடிக்கொண்டிருக்கின்றேன்'' என்றார் பாட்டி. ''அதற்கு ஏன் வெளியே தேடிக்கொண்டிருக் கின்றீர்கள்?''.


''உள்ளே மின்சாரம்கட் அதுதான் வெளியே தேடுகின்றேன்'' என்றார் பாட்டி!

தங்கமலர்,
நெடுந்தீவு.

கேள்வி : கற்றோர் எப்போதும் பணிவுடன் இருப்பர் என்கிறார் வள்ளுவர். அது சரியா பித்தா?

பதில்: ''பழங்கள் நிறைத்த மரம் எப்போதும் தாழ்ந்து வளையும். நீ பெருமை அடைய வேண்டுமானால் அடக்கத்தோடும் பணிவோடும் இரு'' என்று பணிவு பற்றி ராம கிருஷ்ணரும் சொல்லியிருக்கிறார்.

எம் சங்கீதா,




கொட்டகல.

கேள்வி : வானத்தில் மூன்று கிளிகள் பறந்து கொண்டிருந்தன. முதல் கிளி தன் பின்னால் இரண்டு கிளிகள் வருவதாகக் கூறியது. இரண்டாவது கிளியும் தன் பின்னால் இரண்டு கிளிகள் வருவதாகக் கூறியது. அதே போன்று மூன்றாவது கிளியும் தன் பின்னால் இரண்டு கிளிகள் வருவதாகக் கூறியது எப்படி பித்தா?

பதில்: கிளிகள் எப்போதும் சொன்னதையே சொல்லும் !

வை.விதுசன்,
வத்தளை.

கேள்வி : மின்மினிப் பூச்சிக்கு இயற்கையாகக் கிடைத்த வெளிச்சம் மனிதனுக்கும்



கிடைத்திருந்தால்...?

பதில்: நாட்டில் கொலை,களவு நடக்காது. அந்த வெளிச்சம் அவர்களை காட்டிக் கொடுத்துவிடும்.

# தேவன் வருகை

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கூட்டாளிகள்....ஒருத்தன் கிருஷ்ணன் என்கிறான். ஒருத்தன் ராமன் என்கிறான் ஒருத்தன் இயேசு என்கிறான். ஜெஹோவா என்கிறான். தாவ் என்கிறான். சென்ற நூற்றாண் டுடன் அந்த கேலிக் கூத்தெல்லாம் முடிந்து விட்டது என்று நினைத்தோம். கடவுளுக்கே அர்த்தமில்லாமல் செய்திருந்தோம்.அவசியமில்லாமல் செய்திருந்தோம்.மறுபடியும் அடியை பிடிடா என்று ஆரம்பமாகி விட்டது. இந்த செய்தியின் மூலத்தை நாம் கண்டு பிடித்தே ஆக வேண்டும்... உலகத்தில் கலகம் ஏற்படுத்த அமைதியைக் குலைக்க ஒரு சதி இது...''

''ஆத்மா! கோபிக்காமல் இருந்தால் ஒன்று சொல்ல விரும்புகின்றேன்.''

''நான் கோபித்து என்ன பிரயோசனம்? வேலை நடக்கவில்லையே! காரணம் இன்னும் தெரியவில்லையே! சொல்லு, கோபிக்கமாட்டேன்.''

டாக்டர் பரஞ்சோதி தன் வியர்வையை துடைத்துக்கொண்டு, சட்டையை தளர்த்திக்கொண்டு, ஒரு விழுங்கு தண்ணீர் எடுத்துக்கொண்டு....

''ஒரே ஒரு வகையில் இந்தச் செய்திவருவது சாத்தியம். ஒரே ஒரு ஆசாமியால் தான் அது முடியும்!''

''யார் அது சொல்லு? உடனே அவனை கைது செய்து கொண்டுவா! விளக்கடியில் போட்டுவாட்டி எடுத்து விடலாம்...''

''யார் அது, யார்?''

''நீங்கள் தான் ஆத்மா!''

''நானா?'' நிதானமாக சிரித்தார். ''என்னய்யா, நீ! உம்மாதிரி ஒரு முட்டாளையா உலக பொலிஸ் தலைவனாக வைத்திருக்கிறார்கள்.''

''ஆத்மா! டாக்டர் பரஞ்சோதி சொல் வதை முழுவதும் கேட்கலாம் என தோன்று கின்றது'' என்றார் க்ராஸ்மென்.

''சொல்லு, சொல்லு!''என்று கைக் குட்டையால் சிரிப்புக் கண்ணீரைத் துடைத்தப்படியே சாய்ந்து கொண்டார் ஆத்மா.

''ஆத்மா,ஞாபகம் இருக்கிறதா? Flash! மற்றவர்கள் எவருக்கும் தெரியாது. உங்களுக்கும் தலைவருக்கும் எங்கள் டிபார்ட்மெண்டுக்கும்தான் தெரியும்.''

ஆத்மாவின் சிரிப்பு நின்றது. மற்றவர்கள் மௌனமானார்கள். எயர்கண்டிசனரின் உறுமல் மட்டும் கேட்டது.

''மூன்று வருஷங்களுக்கு முன் இந்த ப்ளாஷ் சாதனத்தை அமைத்தோம்... அதைப் பற்றி இப்போது மற்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டது என நினைக்கிறேன்... சொல்லலாமா ஆத்மா? சொல்ல அனுமதி இருக்கிறதா?''

''சொல்லு!'' என்றார் சிந்தனையின் ஊடே.

''உலக அரசின் புதிய திட்டம் ப்ளாஷ். உலகின் பத்திரத்தை பாதிக்கக்கூடிய மகத்தான,மிகதீவிரமான அபாயம் நேர்ந்தால் உலகின் அத்தனை செய்திச் சாதனங்களையும் ஒரே சமயத்தில் கவர்ந்து ஒரே செய்தியை அனுப்ப ஏற்படுத்திய ஒரே ஒரு சாதனம். எலெக்ட் ரானிக்ஸ் நிபுணர்களின் மூன்று வருஷ உழைப்பிற்குப் பின் ஏற்படுத்திய ஒரு சூப்பர் சாதனம்! அது ஆத்மாவின் அலுவலகத்தில் ஒரு தனி அறையில் இரட்டை பூட்டுப்போட்டிருக்கிறது.''

''அதன் சாவி எங்கே இருக்கிறது?''

''அதற்கு சாவி இல்லை. இரண்டு பூட்டுகள், அதுவும் நம்பர் அமைக்கும் கொம்பினேஷன் பூட்டுகள். ஒரு கொம்பினேஷன் ஆத்மாவுக்குத் தெரியும். மற்றது?'' என்று ஆத்துமாவைப் பார்த்தார்.

''மற்றது உலக தலைவருக்கு தெரியும்!''

''மறுபடியும் மௌனம். எல்லோரும் ஆத்மா பேசக் காத்திருந்தார்கள். ஆத்மா புன்முறுவலுடன், ''பரஞ்சோதி ம்ஹூம்!'' என்றார்.

''பரஞ்சோதி சொல்வது உண்மை தான் அப்படி ஒரு சாதனம் இருக்கிறது. இதை தலைவரோ நாமோ தனியாக திறக்க முடியாது. அவர் நம்பர் எனக்கு தெரியாது. என் நம்பர் அவருக்கு தெரியாது. இருவரும் சேர்ந்து சதிசெய்திருக்கிறோம் என்று பரஞ்சோதி சொல்ல முற்படுகின்றார் என்றால் அதையும் விசாரித்து பார்த்துவிடலாம்... தலைவர் இப்போது இங்கே இல்லை நோவாவில் இருக்கிறார். இன்று தான் இந்த கலாட்டாவை கவனிக்க புறப்படுகின்றார் அவரை பார்த்து பதினைந்து நாள்களாகிவிட்டன. செய்தி வந்தது நேற்று முன்தினம். அதற்கு மேலும் சந்தேகம் இருந்தால்...''

''சந்தேகத்துக்கு சொல்லவில்லை ஆத்மா! நீங்கள் தவறாக புரிந்துகொண்டீர்கள். இந்த செய்தி தோன்றுவதற்கு இருக்கும் ஒரே ஒரு மார்க்கத்தை சொல்வது இந்த தருணத்தில் என் கடமையாகிறது...''

''இருந்தும் எங்கள் மேல் சந்தேகத்தை விதைத்து விட்டாய்! அந்த முட்டாள் பெட்டியை ஆரம்ப பரிசோதனைக்கு அப்புறம் நான் பார்த்தது கூட இல்லை... எதற்கும் பார்த்துவிடலாம்....''

''பார்க்கவேண்டிய அவசியமில்லை. நீங்கள் அதை உபயோகிக்கவில்லை என்று சொன்னால் அந்த வார்த்தை போதும்''

''போதாது... ! பார்த்தது விடலாம் அய்யா!''

அவர்கள் ப்ளாஸ் சாதனம் அமைந்திருந்த அந்த அறை வாசலில் நின்றார்கள். நிபுணர்கள் அதன் இரண்டு பூட்டுகளையும் பரிசோதித்தார்கள். பௌடர் அடித்து விரல்ரேகைகளை தேடினார்கள்... இன்ப்ரா ரெட் போட்டுப் பார்த்தார்கள். எக்ஸ்ரே எடுத்து பார்த்தார்கள்.

''ம்ஹூம், நிச்சயமாக சொல்லலாம், இது திறக்கப்படவில்லை என்று''

''க்ராஸ்மன்,என்ன செய்ய வேண்டும், சொல்லு!மனோதத்துவ நிபுணனாயிற்றே''

''உடனே அரசாங்கச் சார்பில் ஓர் அறிக்கையிட வேண்டும்.மக்கள் மிகவும் குழப்பமான நிலையில் இருக்கிறார்கள். எல்லோரும் இதையே பேசுகிறார்கள்.... உற்பத்தி குறைந்து விட்டது... உலகின் மனநிலையே பாதிக்கப்பட்டுவிட்டது. செய்தி எப்படி கிளம்பியது என நம்மால் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும். 'செய்தி தவறானது. வெறும் புரளி' என்று அறிக்கைவிட வேண்டும்...''

''ஒரே ஒரு சந்தேகம்!'' என்றொரு வயதானகுரல் கேட்டது.

''என்னய்யா?''

''செய்தி புரளி, ஆதாரமற்றது என்று நாம் முழுமையாகத் தீர்மானித்து விட்டோமா?''

''ஏன், அதில் என்ன சந்தேகம்! நீ என்ன சொல்லப்போகிறாய்? கடவுள் வரப்போகிறார் என்றா?''

''இன்னும் பன்னிரண்டு தினங்கள் தானே, பார்த்துவிடலாமே!''

''சரிதான். நீகூட மாறிவிட்டாயா? பார்த்தாயா? செய்தி எவ்வளவுதூரம் பாதித்திருக்கிறது! பெரியவரே, கடவுள் இருக்கிறார் என்று நீர் நம்புகின்றீரா?''

''இருக்கலாம்.''

''கடவுள் இருந்தால் இப்படி முட்டாள்தனமாகப் பேப்பரில் போட்டுக்கொண்டு, ரி.வியில் அறிவித்துவிட்டு, ஒரு சினிமா நடிகனைப் போல் இன்னதேதி, இன்ன நேரம் என்று அறிவித்துவிட்டு வருவாரா? இது என்ன அவதாரமா? அதுவும் திடீரென்று நம்மேல் அவ்வளவு கருணை.... அவதாரம் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம்! நாம் என்ன, பாவம் செய்துவிட்டோமா? நாம் கொலைகள் செய்துவிட்டோமா? எவ்வளவு சந்தோஷமாக நிம்மதியாக இருக்கிறோம்! கடவுளுக்கு என்ன அவசியம்?''

விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த எலய்டோ என்பவர் பேசினார்,

''எனக்கு ஒரு விஷயம் முக்கியமானதாகப்படுகின்றது.''

''என்ன?''

''அந்த தினம்/வெள்ளிக்கிழமை!''

''அதனால் என்ன?''

''அன்று உலக பயோலஜி கேந்திரத்தில் ஒரு முக்கிய பரிசோதனை நடக்க இருக்கிறது....''

''என்ன?''

''முதன் முதலாக முழுவதும் ரசாயன அடிப்படையிலேயே மனிதக் கருவை உண்டாக்கப்போகிறார்கள்!''

''உண்டாக்கட்டும். இதற்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்...?''


''முதல் தட்வை கடவுள் அமைத்த சிருஷ்டி நியதியை மீறப்போகிறோம்'' என்றார் பெரியவர்.

''கடவுளாவது அமைத்ததாது... என்னய்யா, அபத்தம் இது!

சென்ற நூற்றாண்டின் இறுதியி லேயே இந்த விவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு காரண காரிங்களுக்கு எல்லாம் ஆதாரங்களை அலசி தீர்வு கண்டுவிட்டோம். எகிப்திய ராவிலிருந்து கிரேக்கக் கடவுள்களை, செண். தோமஸ் அக்வினாஸை, யூதர்களின் ஜெஹோவாவை, யங்கின் மனோதத்துவ அடிப்படை விசாரணைகளை, இந்துக்களின் வேதபுராணங்களை, பௌத்தத்தை, ஜைனத்தை, இஸ்லாமை, தாவிஸத்தை எல்லாவற்றையும் அலசியாகிவிட்டது. கடவுள் என்பது மனிதனின் மனஅமைதிக்கு ஏற்படுத் திக்கொண்ட சித்தாந்தம். அந்த அமைதியை அளித்துவிட்டால் கடவுள் என்கின்ற சித்தாந்தத்துக்கு அர்த்தமும் இல்லை, அவசியமும் இல்லை என்று ஆணித்தரமாக நிரூபித்துவிட்டோம்.

(அடுத்தவாரம் தொடரும்)

# விழிப்பு



சிறுகதை

உருத்திரகுமார்

அன்று சனிக்கிழமை, வீட்டின் தொலைபேசி சிணுங்கியது. தொலைபேசியை ருத்திரனின் மனைவி சஞ்சு தனது காதுகளுக்கிடையில் செருகினாள். தாறுமாறாக அவளது கணவனை யாரோ ஒரு பெண் பொரிந்துவிட்டு தொலை பேசி அழைப்பைத் துண்டித்தாள். புன்முறுவலுடன் தனது கணவனை பார்த்தாள். அவன் தொலைக்காட்சியை பார்த்துக்கொண்டிருந்தான். யாரோ அநியாயமாக அவனது வளர்ச்சியில் பொறாமைப்பட்டு இவ்வாறான அழைப்புகளை எடுத்து துவசம் செய்வது வழமை. விவரணக் கட்டுரைகளில் பல உண்மைகளை அவன் விவரிக்க வேண்டிவருவதால் இவ்வாறான தூற்றுதல்கள் வழமையானவை. அவன் அவளை கண்களால் வினாவினான் யாரென்று. ''உங்களது பழைய பிரண்ட்'' என்றாள் சஞ்சு, தனது ஒன்றறை மாதகுழந்தையின் அலுவல்களை கவனித்துக்கொண்டு . ஒரு ஊடகவியலாளனாக, ஒரு தந்தையாக, சாதாரண வாழ்வில் மகோன்னதங்களை அறிந்தவனாக அவனது பொறுப்புகள் ஏராளம்.

பிரிவென்பது பல சமயங்களில் ஏற்றுகொள்ளமுடியாதது. ஆனால்சில சமயங்களில் சுயமும் தன்னலமும் வாழ்வின் தேடல்களில் பங்காளிகளான போது பிரிவு அவசியமானதாகவே காணப்படுகிறது. ருத்திரனும் அவ்வாறே, அன்பின் சிறையில் அகப்பட்டு பாசம் எனும் மாயவிலங்கிடப்பட்டு வஞ்சகம் எனும் கூண்டிலிருந்து தப்பிவந்த ஒரு மறுபிறவி. அன்று அவன் அன்பின் இலக்கணத்தை அறிந்திருக்கவில்லை. வாழ்க்கை தடம் மாறிப் போன காலம். யாவற்றையும் மறந்து தன் நினைவுகளில் மலர்ந்திருந்தான் ருத்திரன். சிறிது நேரம் தொலைக்காட்சியில் தவழ்ந்த நாதஸ்வர ஓசை அவனது உள்ளத்தையும் மனதையும் வருடிச்சென்றது.

காலை ஒன்பது மணிஎன்பதை கடிகாரம் ஞாபகப்படுத்தியது. ஒரு சஞ்சிகை வெளியீட்டுக்காக செல்லவேண்டுமென்பதை ஞாபகப்படுத்தினாள் சஞ்சு. தன்னை தயார்ப்படுத்திக்கொண்டு மனைவியிடம் விடைப்பெற்றான். வெளியீட்டு விழாமண்டபத்திற்கு வந்ததும் ஆரவாரமான வரவேற்பு கிடைத்தது . விருந்துபசாரத்தில் பல புதுமுகங்களை அவன் காணநேர்ந்தது. தன்னை அறிமுகப்படுத்தினான், உரையாடினான். புதிய அறிமுகங்கள் அவனை உற்சாகப்படுத்தின.

பலரது சிறப்புரைகளை மனதில் நினைத்தவனாக அவனதுமனம் மகிழ்ந்து பறந்து சென்றது. புதிய சிந்தனைகள் விசேடமாக பெண்கள் வாழ்வினை குறித்தான பல அன்றைய வெளியீட்டு விழாவில் உருவாகின . அவனது எண்ணங்கள் யாவும் இன்றைய சூழ்நிலையில் விதவைகளாகும் பெண்கள், திருமணம் முடிக்காமல் இருக்கும் முதிர்கன்னிகள், வெளிநாட்டு மாப்பிள்ளைகளை மாத்திரமே மணக்க காத்திருக்கும் கன்னிகள், கணவன் எங்கே என்று தெரியாமல் வருகைக்காக காத்திருக்கும் மனைவிகள் என்று ஏராளம்... பலவாறாக சிந்தனைகள் ஓடின. ஆன்மீகம் என்ற போர்வையில் வஞ்சிக்கும் கூட்டம் ஒருபுறம், அபிவிருத்தி -மறுவாழ்வு- சுயதொழிலாண்மை என்று ஏமாற்றும் கூட்டம் மறுபுறம்.

பொதுநலத்தை சுயநலமாக மாற்றி, சுரண்டி, தமது வாழ்வை மேம்படுத்தி பொதுநலத்தை போலியாக்கும் செயல் வீரர்கள் தமது பயணத்தை இவர்கள் மூலமாகவே செழிப்பாக்கினர். ஆனால்' பாதிக்கப்பட்டோரது வாழ்வோ அதே நிலையில் தொடங்கிய இடத்தில் நகரமுடியாமல் காத்துக்கிடந்தது சாதீயம் என்றொரு மாயவலையில், போர்வைக்குள் விழிப்படையாமல் காத்துக்கிடந்தது. பாதிக்கப்பட்டோரது பெயரில் தமது வாழ்வை பாதிப்படையாது பாதுகாக்கும் குள்ளநரிகள் என பரந்துகிடக்கும் ஏமாற்றுப் பேர்வழிகள். இவர்களுக்கு நடுவில் சிக்கித்தவிக்கும் மக்கள்... பெண்கள்... சிறுவர்கள்...

ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஏதோ ஒரு அடிமைத்தனம் தொற்றிக் கொள்கின்றது . சிலருடைய வாழ்வில் பெண் அடிமைத்தனம் இழையோடியுள்ளது. ஆனால், பெண்ணடிமைத்தனத்தினை தக்கும் வியூகங்கள் ஆண்டிமைத் தனத்தினை தோற்றுவிக்கின்ற மாயையை உருவாக்கிவிடுகின்றது. பெண் அடிமைத்தனம் என்பதை சில பெண்ணியவாதிகள் ஆண்களை நசுக்கப்பயன்படுத்தும் உத்தியாக மாற்றிக்கொள்கின்றனர். ஆனால்' காலச்சக்கரம் அவ்வாறான சுயநல வாதிகளை விட்டுவைப்பதில்லை. திருமணம் என்று வந்தவுடன் அடங்கிப் போகின்றனர். குடும்பம், வாழ்வு என்றதும் அவர்களது முழக்கங்கள் யாவும் மங்கிப்போகின்றன.

நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி ஆத்மநந்தினி குமார் சமூக செயற்பாடுகளை தமது சிறப்புரையில் விளக்கிகொண்டிருந்த வேளை சில அவசிய விடயங்களை ருத்திரன் குறிப்பெடுத்தான். அவளுடைய ஆர்வமுள்ளபேச்சு அனைவரையும் கவர்ந்திருந்தது. நிச்சயம் அவளது செயற்பாடுகளைச் சென்று பார்வையிட வேண்டும் என்ற எண்ணம் அவனது மனதில் உதித்தது.

காலங்கள் உருண்டோடின. தனது வேளை நேரங்களுக்குள் திருமதி ஆத்மநந்தினி குமார் நடத்தும் 'ஹவுஸ் ஒப் ஹோப்' என்ற தாய் நிருவனத்தின் கிளையை நோக்கி தனது பயணத்தினை ஆரம்பித்தான். மூன்று நாட்களுக்கு முன்னமே அவன் தன்னை தயார்ப்படுத்தியிருந்தான். வரவேற்பு பலமாக வழங்கப்பட்டது. ஏனெனில் ஆத்மநந்தினி ஒரு விளம்பரப்பிரியை. தனது நிழற்படங்களை அடிக்கடி பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்காக சில ஆயிரங்களை அவள் அள்ளி இறைப்பது வழமை.

நேர்காணல் ஆரம்பமாவதற்கு முன்னமே தனிப்பட்ட வாழ்வினை முதலில் அவனது தாள்களில் பதியவைத்தாள். தனிப்பட்ட வாழ்வில் தனக்கு ஆண்களால் ஏற்பட்ட தோல்விகள், தனது திருமணமுறிவு' மறுதிருமணத்தின்பின் விதவையானது யாவற்றையும் பெருமிதத்தோடு சொல்லிமுடித்தாள். அவள் வாழ்வில் சந்தித்தது ஏராளம். தன்னை இன்னமும் துடிப்புள்ளவளாக யாவற்றையும் செய்து முடிக்கும், பலமுள்ளவளாக உருக்காட்டினாள். யாவற்றையும் அவளது கீழ்ப்படுத்தியவளாக தனது அலுவலகத்தில் பணிபுரியும் யாவரும் விவாகரத்து பெற்றவர்களாகவோ தமது கணவனை இழந்தவர்களாகவோ காணப்பட்டனர். அவர்களுக்கு ஒரு தாயைப்போல் அவள் காணப்பட்டாள். அன்னை தெரேசாவின் படம் மிக அழகாக அவளது அலுவலக மேசையில் வைக்கப்படிருந்தது.

விவாகரத்துபெறவிரும்பும் பெண்களுக்கு அவளது நிறுவனம் முழுமையான பொறுப்பினை ஏற்றுக் கொள்ளும். பல வழக்கறிஞர்கள் மாதாந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப் பட்டிருந்தனர். அதனைப்போல விதவைகளும், முதிர்கன்னிகளும் அந்த நிலையத்தினை நிறைத்திருந்தனர். இன்னும் அதிகரிக்கவிருக்கும் விண்ணப்பங்களை அடுக்கிவைத்தாள்.

அதிர்ந்து போனான் ருத்திரன். தனது விவரணக்குறிப்புக்குத் தேவையான சகல விவரங்களையும் சேகரித்துக் கொண்டு விடைபெற்றான்.

பலவாறான யோசனைகள் அவனை ஆட்கொண்டன. ஆழ்மனம் சிந்தனை என்ற குதிரையில் மிக வேகமாகப் பயணித்துக் கொண்டிருந்தது. இறைவன் ஏன்தான் இவ்வாறன மனிதப்பண்புகளை உருவாக்கினாரோ? இல்லையேல் இவர்களாகவே தேடிக்கொண்டார்களா? ஆத்மநந்தினி தனது வாழ்வில் தான் தகுந்தநேரத்தில் தீர்மானம் எடுக்க தவறியதன் விளைவே தனது வாழ்வின் தோல்விக்கு முதற்படி என்று சொன்னது அவனது காதில் கசப்பாக ஒலித்தது. தன்னை பெண்பார்க்க பாஸ்கரன் வீடு தேடி வந்தபோது தனது காதலனான முகிலனை மறக்கமுடியாமல் பாஸ்கரனை மறுத்தது இன்று அவள் ஒரு விதவையாக ஏனையவர்களுக்கு காட்சிபொருளாயிருக்க காரணமானது.

காலம் எத்தனை படிப்பினைகளைத் தந்தாலும் உணர்ச்சிகளும், ஆசைகளும் அந்தப்படிப்பினைகளை ஏற்க தவறிவிடுகின்றன. ஆத்மநந்தினியும் அப்படிபட்டவளே. அவள் தனது கல்லூரிக்காலத்தில் மனித முதலைகளிடம் அகப்பட்டு வாழ்வின் தேடல்களை தொலைத்து, இன்று பல இழப்புகளுடனும் சோதனைகளுடனும் வலம்வரும் ஓர் அற்புதப்பிறவி. அவளது திறமையினை உலகிற்கு கொண்டுவந்து அவளது சேவையினை மேம்படுத்த வேண்டுமென்பதே ருத்திரனின் குறிக்காள்.

அவளது வரலாற்றினை அலசி ஆராய்ந்து பல்வேறுபட்ட கோணங்களில் அவளது திறமைகளை வெளிப்படுத்த தனது சிந்தனைகளை முடுக்கிவிட்டிருந்தான் ருத்திரன். இரண்டு கிழமைகள் இரவு பகலாக கண்விழித்து தனது நேரம் யாவற்றையும் அதற்கென ஒதுக்கி அந்த விவரணக் கட்டுரையினை எழுதியிருந்தான். மூன்றாவது கிழமையின் வார வெளியீட்டிற்காக அவளது விவரணம் அவனது கையால் உருப்பெற்றிருந்தது.

சனிக்கிழமை காலை மறுபடியும் அச்சகம் சென்று கட்டுரையினை செய்தியறையில் அமர்ந்து மீளவாசித்துக் கொண்டிருந்தான். ஏதேச்சையாக தொலைக்காட்சியை பார்த்தவனுக்கு மதியச்செய்தி வியப்பினையூட்டியது. தெரிந்த முகம் ஒன்று... அது திருமதி ஆத்மநந்தினி... காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படுகின்றாள். அவளது கண்களால் அதனை நம்ப முடியவில்லை பிரதம ஆசிரியரை வினாவினான். அவரிடமும் பதில்லை. நேரடியாக செய்திசேகரிக்கும் அறையை நெருங்கிய பின்னர்தான் விவரம் புரிந்தது. நிதிமோசடி வழக்கில் அவள் கைதுசெய்யப்பட்டதாக அறிய நேர்ந்தது. தலைமை அதிகாரியான ஓர் வயதான பெண்மணியினை அவள்ஏமாற்றியதாக தகவல் கிடைத்தது. அவனது தலை விறைத்துவிட்டது. விசனமடைந்தவன் அவளுக்காக தயார் செய்த விவரண குறிப்புகளை குப்பையில் எறிந்துவிட்டு, 'ஹவுஸ் ஒப் ஹோப்' நோக்கி விரைந்தான். வயதான தலைமையதிகாரி தமது குறைகளை கொட்டித்தீர்த்தார். தாம் ஏமாற்றப் படுகின்றோம் என்று தெரியாமலே ஏமாற்றப்பட்டதை கூறி நொந்து கொண்டார். யாவற்றையும் செய்தியாக்கினான் அடுத்த நாள் தினசரியில். காலை சூடுபறந்தது விற்பனையில். எங்கும் அதே பேச்சு... இரண்டு நாள் கழித்து அவளை பிணையில் விடுவிக்கும் நோக்கில் சில சட்ட ஆலாசனைகளுடன் கதைத்துவிட்டு பயணமானான். பிணையில் விடுவிக்கப்பட்டதும் ஆத்மநந்தினி செய்வதறியாமல் தவித்தாள். ருத்திரனை அவளால் பார்க்கமுடியவில்லை. தனது வீட்டிற்கு அவளை வரும்படி அழைத்தான், அவளும் அவனைத் தொடர்ந்தாள். வீட்டுக்கு அழைத்துசெல்வதாக கூறியவன் திடீரென தனது வாகனத்தினை 'ஹவுஸ் ஒப் ஹோப்' நோக்கி திசையினை மாற்றினான் . புரியவில்லை அவளுக்கு, விளங்காதவளாக விழிப்பிதுங்கினாள்.

அவளுக்கு சொந்தமான வீடு சீல் வைக்கப்பட்டிருந்தது வங்கி கணக்குகள் முடக்கப்பட்டிருந்தன. அவளது அலுவலக ஊழியர்கள் துருவித் துருவி காவல்துறையினரால் விசாரிக்கப்பட்டனர்.

சகல நிகழ்ச்சிகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. நிலையத்தால் பராமரிக்கப்பட்ட பலர் செய்வதறியாது திகைத்தனர். பெற்றோர் தலைகுனிந்தனர். வைத்தியராக வரக்கூடியவள் இன்று சமுக நோய்க்குள் அகப்பட்டு, வாழ்வினைத் தொலைத்து , தனது சொந்தபந்தங்களால் புறந்தள்ளப்பட்டு, வாழ்வியலின் தேடல்களில் மடிந்து போனாள்.

அவளாள் 'ஹவுஸ் ஒப் ஹோப்' பில் ஏனையவர்கள் மத்தில் இனி எப்படி இருப்பது... அவளாள் தாங்கமுடியவில்லை. வேறு வழியுமில்லை. அவளது கனவுகள், எதிர்கால திட்டங்கள் யாவும் சிதைந்து போயிருந்தன. வாசலில் அவளுக்காக அனேகர் காத்திருந்தனர். வியந்தாள்... ஒன்றுமே புரியவில்லை. வயதான அந்த அதிகாரியும் அவளை இன் முகத்துடன்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## சொற்சிலம்பம் போட்டி இல. 315

சொற்சிலம்பம் 315 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் தினம் ஜூன் 01 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன் 08 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம் பம் போட்டி இல. 313 இற்கான விடைகள் அருகே தரப்பட் டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண் டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக் எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரிய வர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல.313

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சா | 2 சு | 3 வ | 4 த | ம் | ■ | 5 பூ | 6 மி |
| 7 க | த் | தி | ரி | ■ | 8 பா | க | ன் |
| 9 ச | தி | ■ | 10 ச | 11 வ | ர | ம் | ■ |
| ம் | ■ | 12 த | ன | கு | ■ | 13 ப | 14 தி |
| ■ | 15 அ | க | ம் | ■ | 16 அ | ம் | மி |
| 17 மு | க | டு | ■ | 18 ந | வ | ■ | ல் |
| 19 க | ல | ■ | 20 சி | ல | ம் | 21 பு | ■ |
| 22 தா | ம் | பூ | ல | ம் | ■ | 23 கை | தி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 313

1. எம்.ஐ.எம்.முர்சித், 26/1A, சுமனாராம வீதி, கல்கிசை.
2. எம்.எஸ்.எவ். சிபானா, 547, பெண்பாடசாலைவீதி, ஏறாவூர்03.
3. த.ரஜிதாரன், பிராந்தியசுகாதார சேவைகள் பணிமனை, திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்

1. யோசப் டொரிங்டன் ஸ்பெக், மட்டக்களப்பு.
2. அ.பத்மலோசனா, கொழும்பு-13.
3. திருமதி . ராஜனி புண்ணியமூர்த்தி, மட்டக்களப்பு.
4. திருமதி. அ. தவமணி, கொழும்பு-06.
5. டி.ஆர்.ஆன் டிலுக்ஷி, கொழும்பு-13.
6. எஸ்.செல்வநாதன், மட்டக்களப்பு.
7. கா. வேந்தன், மாங்குளம்.
8. திருமதி. பாலசரஸ்வதி தங்கவேலு, கொழும்பு-05.
9. திருமதி.எம்.ஆர்.பாலேந்திரா, கொச்சிக்கடை.
10. நெல்சன் ஜெபத்துரை, பண்டாரவளை.
11. ஜே.எஸ்.எச்.மௌலானா, தெஹிவளை.
12. என்.ஜெகநாதபிள்ளை, கல்முனை.
13. எம்.ஏ.அத்தாஸ், மாத்தறை.
14. செ.விநாயகதாஜ், வவுனியா.
15. ச.ஜோர்ஸ், கொழும்பு-13.

## சொற்சிலம்பம் போட்டி இல.315

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | 6 |
| 7 | | ■ | 8 | 9 | ■ | 10 | |
| | ■ | 11 | | | 12 | | ■ |
| 13 | 14 | | | ■ | | ■ | 15 |
| ■ | 16 | | ■ | 17 | | 18 | |
| 19 | | ■ | 20 | | ■ | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |
| 24 | | ■ | 25 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.315

### இடமிருந்து வலம்

1. எச்சரிக்கை நிறம்.
2. பனை,தென்னை போல உயர்ந்து வளரும் மரம்.
7. அதிகம்.
8. அரசர்.
10. சிரசு.
11. சேர்தல்/ கூடுதல்/ இணைதல்/கலவி.
13. கோள்.
16. மண்ணுக்கு முந்தியது.
17. முதல்வன்/ உரிமையாளன்/ தலைவன்.
19. நசி.
20. உதவி(யாளன்).
21. அதிக/ பாரமான.
22. நித்திரை.
23. அனைத்து/எல்லா/முழு.
24. குத்துவது இப்படி.
25. பாரதத்தில் பீஷ்மருக்கு இப்படி ஒரு சிறப்பு.

### மேலிருந்து கீழ்

1. காதில் மாட்டுவது.
2. ரகம்/விதம்.
3. மதங்களுடன் தொடர்புடைய பழைய கதைகள்.
5. இரண்டாவதற்கும் முந்தியது.
6. கொத்துகள், சீப்புகள் சேர்ந்து வருவது.
9. ரஷ்யாவை ஆண்ட மன்னர்கள்.
11. உட்செல்லல்/ தஞ்சமடைதல்.
12. சில தசாப்தங்களுக்கு முன்னர் தொடர் பாடலில் முக்கிய இடத்தைப் பெற்ற ஒரு முறைமை.
14. அடுத்தவருக்கு தெரியாமல் பேணப்படுவது.
15. அரசர்.
17. நீர் நிலைக்கு எல்லையில் கட்டுவது.
18. கூறுக.
19. மண்டி ( எண்ணெய்)
20. ஒரு பூச்சி வகை.
23. ஒரே அளவான.

## கொசோவோ...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாராட்டப்படவேண்டிய முயற்சி அது. ஊடக விழிப்புணர்வுக்கு நல்லதொரு உதாரணம் அது.

சமாதானகாலத்தில் எமது தலைமையும் காங்கேசன்துறையை ஒருத்தருக் கும் திருகோணமலையை ஒருத்தருக்கும் புல்மோட்டையிலுள்ள இல்மனைட் மணலை அள்ளுவதற்கு ஒருத்தருக்கும் மன்னாரில் கடல்வளத்தை அகழ்வதற்கு வேறு ஒருத்தருக்கும் குத்தகை ஒப்பந்தம் எழுதியிருந்தால் ஒருவேளை கொசோவோவிற்கு முன்பாக நாம் அங்கீகரிக்கப்பட்டிருக்கலாம் கொசோவோ சேர்பியாவிடம் நீட்டியிருந்த பிச்சைப்பாத்திரத்தை தற்போது உலக வல்லரசுகளை நோக்கி நீட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறது. அப்படி நாமும் நீட்டிப் பிடித்துக் கொண்டிருந்திருக்கலாம்.

கொசோவோவின் 'சுதந்திரபிரகடனத்தின்' பின்னுள்ள யதார்த்தமும் உண்மையும் இதுதான்.கருத்தரங்கின் இறுதியில் கொசோவோவைச் சேர்ந்த ஓர் ஆய்வு மாணவி வாசித்த ஆய்வுகட்டுரையின் இறுதிவரிகள் இப்போதும் மனதின் ஆழத்தில் அறைந்தப்படியே யுள்ளது. "சுதந்திரம் என்பது ஓர் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு வேறு ஒரு அடிமைத்தளைக்குள் இடம்மாறுவதில்லை, அடிமைத்தளைகளிலிருந்து முற்றாக விடுப்படல்.வல்லரசுகளே சுதந்திரம் என்ற பெயரில் இன்று எமக்கு நீங்கள் வழங்கியிருக்கும் நீதி காலம் காலமாக நீங்கள் காப்பாற்றி வரும் காலநிதித்துவ சிந்தனைகளின் வேறு ஒரு வடிவமா? எம்மை நாமே ஆள்வதற்கு விட்டு நீங்கள் வெளியேறுங்கள்."

நாம் ஐரோப்பிய காலநிதித்துவத்தின் பிடியிலிருந்து நழுவித்தான் சிங்களத்தின் பிடிக்குள் சிக்கினோம்.ஏன் இந்த இடம் மாற்றம்? அந்த மாணவி குறிப்பிட்ட து போல் சுதந்திரம் என்பது ஒரு அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு வேறு ஒரு அடிமைத்தளைக்குள் இடம் மாறுவதில்லை; அடிமைத்தளைகளிலிருந்து முற் றாக விடுபடல். நாம் முற்றாக விடு படுவோம்.

தனது தொலைநோக்குப் பார்வையினூடாக உலக வல்லரசுகளுக்கே 'செக்' வைத்து, எத்தகைய இடர்வரினும் தலை சாயாது உறுதியுடன் போராட் டத்தை நடத்திவரும் அற்புதமான தலைமை எமக்கு வாய்த்திருக்கிறது. எமது முரண்பாடுகளைக் களைந்து அந்த தலைமையின் கீழ்நாம் அணி திரள வேண்டியது காலத்தின் கட்டாயம். அந்த திரட்சியே எந்த எதிர்பார்ப்புகளுமின்றி எம்மை அங்கீகரிக்கும் நிலைக்கு சர்வதேசத்தைத்தள்ளும்.

## மகிந்த அரசின்....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டப்பட்டிருக்கின்றன.

**பிச்சை வேண்டாம் நாயைப் பிடி**

முதலமைச்சர் பதவி கிடைக்காமல் ஏமாற்றப்பட்ட ஹிஸ்புல்லாவும் அமைச்சர் அதாவுல்லாவைக் கடுமையாக கண்டித்து கருத்துகளை வெளியிட்டுள்ளார். ஹிஸ்புல்லாவை முதலமைச்சராக நியமிக்கா விட்டால் தாம் அமைச்சுப் பதவிகளைத் தூக்கி யெறிந்து விட்டு அரசாங்கத்திலிருந்து வெளியேறுவோம் என்று காஜித்த அமைச்சர்களான றிஷாத் பதியுதீன், அமீர் அலி, நஜீப் ஏ.மஜீத் போன் றோரும் அமைச்சர் அதாவுல்லா மீது பழியைப் போட்டு விட்டு மௌனித் துப் போய் விட்டனர். எனினும் ஹிஸ்புல்லாவின் புதிய நிலைப்பாடு முஸ்லிம் அமைச்சர்கள் அனைவருக் கும் ஆறுதலைக் கொடுத்திருக்கின்றது. தப்பினோம் பிழைத்தோம் என்கின்ற பெருமூச்சு அவர்களுக்கு ஏற்பட்டிருக் கிறது. ஹிஸ்புல்லாவும், முஸ்லிம் அமைச்சர்களும் அரங்கேற்றி வருகின்ற நாடகங்களால் முட்டாள்களானது முஸ்லிம் களே! அரசோ, ராஜபக்ஷ கம்பனியோ சற்றும் சலனப்படவு மில்லை, அசைந்து கொடுக்கவுமில்லை 'துண் டைக் காணோம் துணியைக்காணோம்' என்று தனித் குழு அமைத்து போராடப் புறப்பட்ட ஹிஸ்புல்லா, மாகாண சபை கூடுவதற்குமுன்னதாகவே 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்ற சீலத்தில் அரசிடம் மீளவும் மண்டியிட்டு விட்டார் என்கின்ற செய்தி முஸ்லிம் சமூகத்துக்கு தலைகுனிவு மிக்கதே!

## கல்விச்சுடர் பாராட்டும் மாணவச்செல்வங்கள்

**படிமுறைப் பரீட்சை - 32 இல் சிறந்த புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

### இல்மா ஹொலிடே பாடசாலை மாணவர்களின் விடைத்தாள் பெறுபேறுகள்

| | | |
|---|---|---|
| 1. C.B.பாத்திமா றஸ்மியா | ( அம்பாறை ) | 176 |
| 2. A.S.முஸ்அப் முஹமட் | ( அம்பாறை ) | 162 |
| 3. S.M.S.அஸ்பாக் மௌலானா | ( மட்டக்களப்பு ) | 151 |
| 4. T.பாத்திமா சஜானா | ( அம்பாறை ) | 148 |
| 5. J.முஹமட் ஆகில் | ( அம்பாறை ) | 142 |
| 6. A.R.நுஸ்கியா | ( அம்பாறை ) | 140 |
| 7. R.றைஹானா | ( அம்பாறை ) | 136 |
| 8. அத்தர் | ( அம்பாறை ) | 135 |
| 9. சஜாக் | ( அம்பாறை ) | 132 |
| 10. A.S.அகிலா | ( அம்பாறை ) | 130 |
| 11. றிகினா | ( அம்பாறை ) | 128 |
| 12. S.I.அஹமட் சஹி | ( அம்பாறை ) | 123 |
| 13. A.S.றிப்தாஸ் அஹமட் | ( அம்பாறை ) | 120 |
| 14. K.M.பதாஹிர் | ( அம்பாறை ) | 118 |
| 15. A.S.ஆகில்ஷிஹாப் | ( அம்பாறை ) | 118 |
| 16. H.M.ஜவாஹிர்தீன் | ( அம்பாறை ) | 118 |

### மாணவர்கள் தபால் மூலம் அனுப்பிய விடைத்தாள்களின் பெறுபேறுகள்

| | | |
|---|---|---|
| 01. S.M.பாத்திமா பெனாசீர் | -அம்பாறை | - 196 |
| 02. C.கோவலன் | -மன்னார் | - 190 |
| 03. A.வர்ஷனா | -மன்னார் | - 188 |
| 04. V.திலோஜ் | -திருகோணமலை | - 188 |
| 05. P.டன்ஸ்டன் | -அம்பாறை | - 187 |
| 06. J.கஜானி | -கிளிநொச்சி | - 186 |
| 07. பாஸ்கரன் நிவேதன் | -முல்லைத்தீவு | - 185 |
| 08. G.கிருசாகரி | -அம்பாறை | - 184 |
| 09. H.K.M.ஜெம்சித் ஹசன் | -அம்பாறை | - 182 |
| 10. G.T.பிரதீப் | -மட்டக்களப்பு | - 177 |
| 11. M.S.அத்ஹர் அலி | -புத்தளம் | - 176 |
| 12. G.யுவலதன் | -திருகோணமலை | - 162 |
| 13. P.மிதுர்சன் | -கிளிநொச்சி | - 152 |
| 14. M.A.M.அப்ராஸ் | -கண்டி | - 148 |
| 15. F.ரிம்ஸியா | -கம்பஹா | - 146 |
| 16. A.விஷால் | -கொழும்பு | - 132 |

- கல்விச்சுடர் ஆசிரியர் -

இவ்வார கல்விச்சுடர் விசேட மாதிரி வினாத்தாள் தவிர்க்க முடியாத காரணமாக வெளிவரவில்லை. மீண்டும் அடுத்தவாரம் வெளிவரும்.

# அஸ்தி

உண்மைக்கதை



மரணப் படுக்கையில் என் அம்மா சத்தியபாமா.

என்னைப் பத்து மாதம் சுமந்துபெற்றவர்; பெருமையுடன் வளர்த்து அழகுபார்த்தவர்.

இன்று நோய்க்கு வாழ்க்கைப் பட்டு, வாழ்க்கையோடு போராடு கிறார். மரணத்துக்கு தேதி கிழிக் கிறார்.

வீட்டில் பெண் பிள்ளைகள் இல்லை. என் மனைவியும் குழந்தைகளும் தூரமாய். பக்கத்தில் இருந்து பாசமாய் பார்க்க யாருமில்லை.

கூலிக்கு ஒரு பெண்ணை வைத்துக்கொண்டாலும், அதிலே திருப்தி தெரியவில்லை. ஆக, நானே நாளும் பொழுதும் அம்மாவைக் கவனிக்கலானேன்.

எனக்குத் தாயாக இருந்து எனக்கு நல்லது - கெட்டது பார்க்கவேண்டிய தாய்க்கு நானே தாதியானேன்....தாயானேன்.

அம்மாவுடன் மருத்துவமனை மருத்துவமனையாக ஏறி இறங்கினேன். நோய் குறையவில்லை. உணவுதான் குறைந்தது. மருந்தும் மாத்திரைகளுமே உணவாகிப்போயின.

சந்தனத்தேகம், பனிச் சிரிப்பு. நெற்றிப்பொட்டு சகிதமாக எப்போதும் மங்கலமாக இருப்பவர். இப்போதோ அழகான கட்டிலில் ... ஆனால், அவசரத்துக்கு சுருட்டிப் போட்ட படுக்கைவிரிப்பாக!

எங்கள் வீட்டில் நிம்மதி குறைந்தது. பணம் கரைந்தது. ஆனால், அம்மாவுக்கு சுகம் மட்டும் கிட்டவில்லை. உடலில் அசைவு இல்லை. பேச்சும் இல்லை. மூச்சுக்காற்று மட்டும் அவதியாய் தொடர்ந்துகொண்டிருந்தது.

அதுவரை கைகொடுத்த மருத்துவர்கள், 'இனி எல்லாம் கடவுள் கையில்' என திடீரென கைவிரித்து விட்டார்கள்.

நீண்டகால மருத்துவமனை வாசம் முடிந்தது. எங்கள் வீட்டின் ஓர் அறை, தற்காலிக மருத்துவமனையாக மாறியது. சிகிச்சையும் தொடர்ந்தது.

அம்மா பிழைத்துக்கொள்வார்; மறுபடியும் எங்கள் வீட்டு மகாராணியாக வலம் வருவார் என்று வண்ண வண்ணக் கனவுகளோடு காத்திருந்தேன்.

மருந்துநெடியும் அம்மாவின் அவதியும் என்னை உடலளவில் அரைநோயாளிஆக்கிவிட்டன. ஆனால், மனசு மட்டும் அம்மாவின் பாசத்தை மறக்கமுடியாமல் அடம் பிடித்தது. பல நாட்கள் தூக்கம் மறந்தது. தாய்க்கு கடமைகள் செய்தது.

ஒருநாள் இரவு - அம்மாவின் உடல்நிலையில் எதிர்பாராத மாற்றம், முன்னேற்றம். கால்கள் அசைந்தன. சைகை காட்டினார். பேச முயன்றார்.

ஓர் ஆண்டாக நான் பட்ட ரணங்கள், ஒருநொடியில் மறைந்தன. மனசுக்கு கோடைமழையின் குதூகலம்.

அதுவரை கண்ணீர்விட்டு, கண்ணீர்விட்டு வறண்டுபோன என் கண்களில் திடீர் காவிரியாக நீர்க்கோலங்கள்.

கடிகாரம் பார்த்தேன். சின்ன முள்ளை, பெரிய முள் விடாமல் துரத்தியது காதலுடன். என் அடிமனம் மகிழ்ந்துகொண்டிருந்தது, பாசத்துடன்.

உற்சாகமாக அம்மாவுக்குப் பாலூட்டினேன். 'இன்சுலின்' ஊசி போட்டேன். மறுகணம் அம்மாவை உறக்கம் தழுவியது.

'இனி அதிகாலையில்தான் அம்மா கண்விழிப்பது வழக்கம். அதுவரை கண் அயர்வோம்' என படுக்கைக்கு பயணப்பட்டேன்.

விடிந்தது. அது எனக்கு விடியல் அல்ல ! அமாவாசை. அம்மா கண் விழிக்கவில்லை. உடலில் சலனமில்லை. ஆம்...அம்மா இறந்துவிட்டார். அம்மா விரல்பிடித்து நடை பழக்கிய என் விரல்களை, அவசரமாய் அம்மாவின் மூக்கிற்கு கொண்டுபோனேன். அம்மாவின் மூச்சுக்காற்று எப்போதோ முடிச்சுபோட்டுக்கொண்டது போலும்...

அழுதேன்! அழுதேன்! அதுவரை அழாத அழுகை அழுதேன்...

கொஞ்சநேரத்தில் வீடெங்கும் உற்றார்....உறவினர்கள்...நண்பர்கள். எல்லோர் முகங்களிலும் சோகம். அது ஏதோ ஓர் உறவை இழந்த துக்கமல்ல...தாயை இழந்த துயரம். ஒற்றைப்பூ வைத்து அழகு பார்க்கும் அம்மாவுக்கு மேனி எங்கும் பூக்கள் ...மாலைகள்.

சூரியன் சோகத்துடன் இறங்குமுகமானான். என் அம்மா ஏறுமுகமாக 'அமரர்' ஊர்திக்கு இடமாற்றமானார். ஊர்தி நகர்ந்தது. ஊர்வலம் தொடர்ந்தது. நானொரு ஓவியன்.

"இவனது கிறுக்கல்கூட அழகான ஓவியங்களாகின்றன. அவன் மட்டும் ஆறஅமர உட்கார்ந்து தூரிகை பிடித்தால் பிரம்மாவுக்கே பொறாமை வந்துவிடும்" என்று என் 'ஓவிய சகா' அரசு யாரிடமோ காதுகடித்தது என் காதுகளில் விழுந்தது.

அது கொஞ்சம் மிகை என்றாலும்...உண்மையில் என் தூரிகைக்கு ஓர் உன்னதம் உண்டுதான்! அது எதை வரைந்தாலும் வெறும் வர்ணத்தின் கோடுகளாக மட்டும் தெரியாது. உருவங்கள் உயிரோடு காகிதத்தில் உருப்பெற்று இருப்பதாகவே தெரியும். அப்படி எவ்வளவு எவ்வளவு ஓவியங்கள் வார்த்து இருக்கிறேன். அவற்றில் எத்தனை எத்தனை அம்மாக்களைப் படைத்து இருக்கிறேன். ...அதை நினைத்து நினைத்து எப்படியெல்லாம் பெருமைப்பட்டு இருக்கிறேன்.

'இன்று - என் அம்மா இல்லை. அந்த அம்மாவை என்னால் சிருஷ்டிக்கமுடியுமா. பிறகு, நான் என்ன பிரமாத 'பிரம்மா' ஓவியன்?' என நேரம்காலம் தெரியாமல் மூளை கேள்விகேட்டது.

அதோ சுடுகாடு.

எத்தனையோ பேரை எரியூட்டிய இடம். அங்கே இப்போது என் அம்மாவின் சடலம். நேற்றுவரை சொகுசு மெத்தையில் தூங்கியவர் - இன்று பெட்டிக்குள். எனக்கு முதல் பால் ஊட்டிய தாய்க்கு, நான் கடைசிப்பால் ஊற்றுகிறேன். உடைந்து அழுகிறேன். உருக்குலைந்து நிற்கிறேன். பேனா பிடித்துப் பழக்கப்பட்ட என் பாச சகோதரர் கோபால் உள்ளிட்டவர்கள் என் அம்மாவை அன்போடு தூக்குகிறார்கள். மின்சார அடுப்பின் முன்னே உள்ள இரும்புச்சட்டங்களில், வலிக்காமல் வைக்கிறார்கள். அடுப்பின் வாய் ஆவேசமாய் திறக்கிறது. நெருப்பு அகோரமாய் எரிகிறது. தூரத்தில் நிற்கும் எங்களையே அது சுடுகிறது.

'அந்த எரி நெருப்புக்குள் இன்னும் சில நொடிகளில் அம்மாவின் தேகம் எனக்கு உயிரும் உடலும் தந்த தேகம். வலிமறந்து என்னைப் பிரசவித்த தேகம். சுண்டினால் இரத்தம் வருகிற தேகம். இந்த சுடுநெருப்பை எப்படித் தாங்கும்?' நான் நினைத்து முடிப்பதற்குள் எனக்கு அழைப்பு.

ஓர் இரும்புக் கம்பியைக் காட்டுகிறார்கள். அதை இழுக்கச்சொல்கிறார்கள். அதுவரை எதுவும் புரியாமல் நின்ற எனக்கு இப்போது சகலமும் புரிகிறது. எமன் தன் பாசக்கயிற்றை இழுத்தால், அவசரமாய் உயிரை எடுத்துவிடும் அல்லவா? இந்த இரும்புக்கம்பியை இழுத்தால், நடுவில் இருக்கும் உடலை அவசர கதியில் ராட்சத அடுப்பின் உள்ளே... நெருப்பின் உள்ளே தள்ளிவிடும்.

நான் மறுக்கமுடியாமல் மௌனமாய் நிற்கிறேன். மறுநொடி கம்பியை இழுக்கிறேன்.

என் தாயின் உடல் நகருகிறது... நகருகிறது...கொஞ்சம் கொஞ்சமாய் எங்கள் கண்களை விட்டு மறைகிறது.

அதோ...அதோ ...அந்தோ பரிதாபம்! ஒருநாளும் என்னை கடுஞ்சொல் சொல்லாத உறவு, இப்போது கொடும்நெருப்பில்!

என் தாயின் வருகைக்காக காத்திருந்ததுபோல், அதுவரை திறந்திருந்த மயான அடுப்பின் கோரவாய் மூடிக்கொள்கிறது.

அவ்வளவுதான்! அம்மாவைக் காணவில்லை.

நான் துடித்து அழுகிறேன். துவண்டு சரிகிறேன். யார் யார் கைகளோ ஓடிவந்து என்னைத் தாங்குகின்றன. அதுமட்டும் தெரிகிறது. என்னையறியாமல் எப்படியோ நடக்கிறேன். எதிரே போய், ஓரிடத்தில் அழுகையோடு அமருகிறேன்.

நானோ பசுமை மரங்களின் நிழலில்! என் தாயோ பொசுக்கும் தீப்பிழம்பில்.

அதன் வேதனையை நினைக்கிறேன்...உடைகிறேன்... அழுகிறேன்.

என் பக்கத்தில் அப்பா, தேம்பாமல் மனதுக்குள் மருகி அழுகிறார். தம்பியோ தேம்பித் தேம்பி அழுதுமாய்கிறான். நேரம் கரைகிறது வந்தவர்கள் கலைகிறார்கள். என்னைச் சுற்றிலும் இருந்த சூரிய வெளிச்சம், என் அம்மாவைப் போல் அவசரமாய் மறைந்துபோகிறது. என்முன்னே ஒரு சிறிய இரும்புப்பெட்டியைக் கொண்டுவந்து வைக்கிறார்கள். உள்ளே...விறகு அடுப்பில் எரிந்து மிஞ்சியதுபோல் கொஞ்சமாய் கரித்துண்டுகள் - சாம்பல் துகள்கள்.

நான் அதன் அர்த்தம் தெரியாமல், மயான ஊழியரின் முகம்பார்க்கிறேன். "இதுதான் உங்க அம்மா..." என்று அவர் நிறுத்து கிறார். நான் நிறுத்தமுடியாமல் அழுகிறேன். நம்பமுடியாமல் அதையே வெறித்துவெறித்துப் பார்க்கிறேன். அதைப் புரிந்து கொண்ட அந்த ஆள் கையில் கிடைத்த ஒருகுச்சியால் அதைக் கிளறுகிறார். எரிந்த சிரட்டைகள் போல் என் அம்மாவின் மண்டை ஓட்டுத்துண்டுகள். கூடவே ஓரிரு எலும்புத்துண்டுகள். மிச்சமெல்லாம் பஸ்பமாய்.

அதன் அருகில் இரண்டு மண் கலயங்கள் வைக்கப்படுகின்றன. அதிலே என் அம்மாவின் அஸ்தி சேகரிக்கப்படுகிறது. வெள்ளைத் துணியால் இறுகக் கட்டப்படுகிறது. இரண்டில் ஒன்று, ஆற்றில் கரைக்க! இன்னொன்று கடலில் கரைக்க!

முதல் கலயத்தை பெயர், நாள் விவரங்கள் எழுதி, அப்புறம் எடுத்துக்கொள்ள வசதியாக அங்கேயே பத்திரப்படுத்த ஏற்பாடு செய்கிறார்கள். அடுத்ததை பத்திரமாய் என் கைகளில் தருகிறார்கள்.

அம்மாவின் அஸ்தியில் சூடு குறையவில்லை. என் இதயத்தைப் போலவே தகிதகிக்கிறது.

நண்பர் கிருஷ்ணா முன்னே போகிறார். 'ஆட்டோ'வை அழைக்கிறார். 'ஆட்டோ' வருகிறது. நாங்கள் நாலுபேராய் அதில் ஏறுகிறோம். வீதியில் 'ஆட்டோ' நகர்கிறது. கவலையில் என் மனம் எரிகிறது. 'ஆட்டோ; குலுங்கி பயணிக்கிறது. நானும் குலுங்கி அழுகிறேன். ஆஸ்தி யோடு வாழ்ந்த ஐந்தடி உயரஅழகு அம்மா - அஸ்தியாய் என் ஐந்து விரல்களுக்குள்!

# நேபாள மாவோயிஸ்டுகளும் ஈழப் புலிகளும்

அனைத்துலக மார்க்சிய - லெனிய- மாவோயிஸ் அரங்கங்களிலும் தேசிய இன விடுதலை தொடர்பான சிந்தனையாளர்கள் மத்தியிலும் ஏன் வலதுசாரி சிந்தனையாளர்களிடத் திலும் 'நேபாள மாவோயிஸ' த்தின் பாதையானது தீவிர விவாதங்களை உருவாக்கியிருக்கின்றது.

நேபாள மாவோயிஸ்டுகளை ஈழத்துப் புலிகளும் பின்பற்ற வேண்டும் என்றுகூட அந்த விவாதங்களில் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசாங்கம் தலையிட வேண்டும் என்பதை வலியுறுத்தி அண்மையில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தின் மீது பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, "ஒரு குழுவாக அவர்கள் (ஈழத் தமிழர்கள்) இருந்து போராடியிருந்தால் நேபாளம் போல வெற்றி பெற்று இருப்பார்கள். வேறு பல நாடுகளைப் போன்று விடுதலை பெற்றிருப்பார்கள். போராளிக் குழுக்களுக்குள்ளேயே நடந்த மோதல்கள் காரணமாகத்தான் இந்த போராட்டம் பலவீனமாகி விட்டது. இன்று அவர்களுக்குப் பரிந்துரை செய்து பேச வேண்டி இருக்கின்றது. இலங்கையில் விடுதலை பெற சகோதர யுத்தத்தை நிறுத்துங்கள் என்று போராளிகளுக்கு வேண்டுகோள் விடும் நிலைமை ஏற்பட்டது" என்று கூறியிருக்கின்றார்.

அதே போன்று அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் ஆனந்த விகடன் ஏட்டுக்கு அளித்த நேர்காணலில் புதுச்சேரியைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளரும் நேபாள அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் பார்வையாளராகச் சென்று திரும்பியவருமான கோ. சுகுமாரன் என்பவரும் "நேபாளத்தை தமிழீழ விடுதலைப் புலிகளும் பின்பற்ற வேண்டும்" என்று அறிவுரை கூறியிருக்கின்றார்.

ஏறத்தாழ 60 ஆண்டு காலத்துக்கும் மேலாக பாரிய இன ஒடுக்கு முறைகளுக்குள்ளாகி இருந்த தமிழீழத் தேசிய இனத்தினது அவலத்தை, தமிழீழ மக்களின் இராணுவ அமைப்பாகவும் தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகவும் இருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணி வெற்றிகளே இந்த அனைத்துலக அரங்கத்துக்கு வெளிப்படுத்தி நிற்கின்றன. இன்று அவலத்தைத் துடைக்கும் சாதகமான ஒரு சூழலை நோக்கியும் பயணிக்கின்றது.

இலங்கைத் தீவின் நிலைமைகளும் நேபாளத்தின் நிலைமைகளும் எந்த வகையிலுமே தொடர்பற்ற முற்றிலும் முரணானவை.

***நேபாளம்***

நேபாளத்தில் நடைபெற்று வந்த இந்து உயர்சாதிய மன்னர் ஆட்சியை, மார்க்சிய- மாவோயிஸ வழிப்பட்டதான ஆயுதப் போராட்டத்தின் ஊடே அகுறற நேபாள கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) போராடியது.

மன்னர் ஆட்சியை புரட்சியின் மூலம் அது அகற்றிவிடாத நிலையிலும், அனைத்துல அரசியல் நிலைமைகளுக்கு ஒத்திசைந்து அரசாங்க அதிகாரததை அக்கட்சி இப்போது கைப்பற்றியுள்ளது.

இது சரியான பாதைதானா என்று அனைத்துலக கம்யூனிச அரங்கங்களும், இது கம்யூனிசத்தை அடைவதற்கு நேபாளம் பின்பற்றும் ஒரு தந்திரோபாயமே (மார்க்சிய மொழியில் செயல் உத்தி) என்று நேபாள கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சியும் கூறி வருகின்றன.

பல் தேசிய இனப் பண்பாடு கொண்ட நேபாளத்தை ஆள்வது மன்னரா, மக்களா என்ற நெடிய போராட்டத்தின் இறுதியில் 'மக்களாட்சி' மலர்கின்றது.

"நேபாளத்தின் புதிய அரசியல் சாசனம் நேபாளத்தை ஒரு குடியரசு நாடாக நிலை நிறுத்தும்" என்றுதான் நேபாள மாவோயிஸ கட்சியின் தலைவர் பிரசந்தா பிரகடனப்படுத்தியிருக்கின்றார்.

***இலங்கை***

இலங்கைத் தீவிலோ வரலாற்றுக் காலம் தொட்டே தமிழர்களுக்கு என்று தனியரசு இருந்து தமிழர்கள் கோலோச்சியிருந்தனர்.

பிரித்தானியர்களும் போர்த்துக்கேயர்களும் ஒல்லாந்தர்களும் என அந்நியர் உள்நுழைந்த காலத்தே தமிழர்களின் இறைமை பெற்ற தனியரசுகள் அழித்தொழிக்கப்பட்டு தென்னிலங்கைச் சிங்களத்தோடு இணைந்ததொரு நிர்வாக முறைமை உருவாக்கப்பட்டது.

காலனியாதிக்க முடிவில் தமது இறைமை கொண்ட தமிழ்த் தனியரசை மீட்பதில் போதுமான முனைப்பை நமது முன்னைய தலைமுறை வெளிப்படுத்தாததால் பிரித்தானியர்கள் - சிங்களவர்களோடு இணைந்த நிர்வாக





முறையை அப்படியே விட்டுவிட்டு வெளியேறிவிட்டனர்.

வெறிபிடித்த சிங்களமோ வரலாற்று வன்மத்தை வெளிப்படுத்தி இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய இனத்தை பூண்டோடு கருவறுக்க முனைந்தது.

அகிம்சைப் போராட்டங்கள் பயனற்றுப் போய் தனிநாட்டுக் கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பார் எவருமில்லாமல் போய் ஆயுதமேந்த வேண்டிய நிலைக்கு தமிழ்த் தேசிய இனம் தள்ளப்பட்டது.

விரிவாதிக்க கோட்பாட்டுடன் உள்நுழைந்த வல்லாதிக்க இந்தியாவோ, 'தமிழீழ தாயக' கோட்பாட்டையே சிதைக்க முனைந்தது.

அதனைச் சிதைக்க விடாது வல்லாதிக்க இந்தியாவுக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் போரிட்ட நிலையில் புலிகளை முற்றாக இல்லாதொழிக்க சகோதர யுத்தத்தை உருவாக்கியது இந்தியாதான் என்று தமிழ்நாடு சட்டப்பேரவையிலேயே தமிழ்நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதியே சுட்டிக்காட்டியும் இருக்கின்றார்.

தேசத்தின் விடுதலையை நேசித்து திட்டமிட்ட உண்மையும் அர்ப்பணிப்பும் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள், பலம்பெற அவர்களே ஏகப் பிரதிநிதிகளாக இன்று தமிழீழத் தனியரசைக் கட்டியெழுப்பி வருகின்றனர்.

தமிழீழத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் 'அறிவிக்கப்படாத ஒரு தனியரசு நிர்வாகத்தை' நடத்திக்கொண்டு அனைத்துலக நாடுகளின் அங்கீகாரத்துக்காக காத்திருக்கின்றனர்.

***நடந்தது என்ன ?***

நேபாளத்தில் நேபாள மாவோயிஸ்ட் அமைப்பு 1996 பெப்ரவரி 13 இல்தான் உதயமானது. திடீர் உதயமும் அல்ல அது.

ஏலவே இருந்த நேபாள கம்யூனிஸ இயக்கத்தினரை வலதுசாரிகள் என்றும், திரிபுவாதிகள் என்றும் விமர்சனம் செய்துவிட்டுத்தான் ஆயுதப் பாதைக்கு மாவோயிஸ்டுகள் திரும்பினார்கள்.

அங்கும் 10 ஆண்டுகாலமாக சகோதர கட்சிகளுடன் கருத்து மோதல்களை மாவோயிஸ்ட் கட்சி மேற் கொள்ளாமல் இல்லை.

ஈழத்திலும் இந்திய றோ தலையிடாத வரை - இந்தியப் பேரரசு தனது வல்லாதிக்க விரிவாதிக்க கனவை நடைமுறைப்படுத்த முனையாத வரை - எத்தனையோ குழுக்கள் சுதந்திரமாக நடமாடிய வரலாறும் புலிகள் உள்ளிட்ட இயக்கங்கள் ஒரு கட்டத்தில் ஐக்கியமாக நிற்க முயன்ற வரலாறும் இந்த மண்ணிலும் நிகழாமல் இல்லை.

இதே தமிழ்நாடு முதல்வர் கலைஞர் தான் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இப்படிக் கூறியதாக இந்தியாவின் ஜெயின் ஆணையம் தனது அறிக்கையில் கூறியும் உள்ளது.

"Faced with such strident criticism in the State Assembly, sri Karunanidhi, on 08th may1990, on the floor of the Assembly is reported to have accused the Research and Analysis wing (RAW) of trying to create a rift between the centre and the State appealed to the prime Minister to take appropriate action. He alleged that the RAW which

**செ. விசுவநாதன்**

was responsible in the past for creating divisions among various Tamil groups of Sri Lanka was donig the same between the centre and the state." (நன்றி: ஈழப் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி' நூல், விடுதலை க. இராசேந்திரன், தமிழ்நாடு)

"இலங்கையில் உள்ள தமிழ்க் குழுக்களிடையே பிளவை ஏற்படுத்தியமைக்கும் அதேபோல் இந்திய மத்திய மற்றும் இந்திய மாநில அரசுகளிடையே பிணக்கை உருவாக்கியதற்கும் இந்திய றோ தான் காரணம்" என்று அன்று குற்றம் சாட்டியவர் இதே முதல்வர் கலைஞர் அவர்கள்தான்.

ஆனால், தான் தெரிவித்த கருத்துக்கு மாறாக- உண்மைக்கு மாறான செய்தியை அதே தமிழ்நாடு சட்டப்பேரவையில் கலைஞர் தெரிவித்திருக்கின்றார். கலைஞர் போன்ற மதிப்பிற்குரிய ஒரு முதுபெரும் அரசியல் வாதியானவர்கள் இந்த வரலாற்றை மறத்தல் அல்லது மறைத்தல் சரிதானா?

அதேபோல்

ஸ்ரீலங்கா அரசாங்கத்தை எதிர்த்துத் தான் விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்துகிறார்கள்.

ஆனால், ஸ்ரீலங்காவின் மகிந்த அரசாங்கத்தை தூக்கியெறிந்து விட்டு ஸ்ரீலங்காவில் 'புலிகள்' அரசாங்கத்தை உருவாக்க அல்ல அந்த ஆயுதம் தரிப்பு!

ஒரு பேரினவாதத்தின் ஈவிரக்கமற்ற இனப்படுகொலையிலிருந்து ஓர் இனம் தன்னைக் தற்காத்துக்கொள்ள - இழந்து போன இறைமை கொண்ட தேச அரசுரிமையை ஓர் இனம் மீட்டுத் தக்க வைத்து வருங்கால தலைமுறைகளின் வாழ்வுரிமைகளைத் தற்காத்துக் கொள்ளவே அந்த ஆயுதத் தரிப்பு!

இலங்கைத் தீவில் கடந்த கால் நூற்றாண்டுகாலமாக நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டத்தில் எத்தனையோ அமைதிப் பேச்சுக்கள் நடந்துவிட்டன.

அந்த அமைதிப் பேச்சுகளில் புலிகள் ஒன்றும் பங்கேற்காமலும் இல்லை.

இன்னமும் சொல்லப் போனால் அண்மையில் ஸ்ரீலங்காப் பேரினவாத அரசாங்கத்தால் முறித்துக் கொள்ளப்பட்ட 'யுத்த நிறத்த ஒப்பந்தத்தை' உருவாக்க அடிப்படையாக அமைந்ததே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு தலைபட்ச போர் நிறத்தப் பிரகடனமும் அமைதிப் பேச்சுக்கான அழைப்பும் தான்!

அண்மைய அமைதிப் பேச்சுக்களிலிருந்து புலிகள் தானாக இன்னமும் வெயியேறிவிடவும் இல்லை.

போரினால் பாதிக்கப்பட்ட ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குரிய மனிதாபிமான உதவிகளைக் கூட செய்யாமல்- இருதரப்பும் ஏற்றுக்கொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் எந்த ஒரு சரத்தையுமே ஏற்றுக்கொள்ளாமல் -

யாழ்ப்பாண குடாநாட்டுக்குள் 5 இலட்சம் தமிழ் மக்களை பட்டினி போட்டு படுகொலை செய்ய ஏ- 9 பாதையை மூடி வைத்ததை மறுபரிசீலனை செய்யாமல்- இருந்ததால்தான், பேச்சு மேசைகளிலிருந்து மட்டுமே புலிகள் வெளியேறினார்கள்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகிவிட்டதாக சிங்களம் பிரகடனம் செய்த போதும் கூட, தங்கள் கண் முன்னே சொந்த மக்கள் அநீதியாக படுகொலை செய்யப்பட்ட நிலையிலும் கூட அமைதிப் பேச்சுக்கான கதவுகளை இப்போதும் இன்னமும் திறந்தே வைத்திருப்பதும் தமிழீழ விடுதலைப் புலிகள் தான்!

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள நிலையிலேயே நில வல்வளைப் புக்களும் நீதிக்கு புறம்பான படுகொலைகளும் எத்தனை, எத்தனை !

யதார்த்தமான உண்மைகள் இவையே!

தனியரசு நடத்தி அங்கீகாரத் துக்குக் காத்திருக்கும் ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தையும் அரசு நிர்வாக மாற்றத்துக்கான ஓர் ஆயுதப் போராட்டத்தையும் இணையாக ஒப்பிடுவதும் அப்படியான பிழையான கருதுதல்களுடன் கருத்துகளை வெளியிடுவதும் பொறுப்புகளில் உள்ளோருக்கு பொறுப்பாகாது அல்லவா?

*நன்றி புதினம்.*








## விநோத வழக்கு

யேர்ட்லி நார்ட்டன் என்ற அயர்லாந்துக்காரர் சென்னையில் பிரபல கிரிமினல் வழக்கறிஞராக இருந்தவர். இரண்டு பிரமுகர்கள் சம்பந்தப்பட்ட பரபரப்பான, இன்னொருவர் மனைவியுடன் தொடர்பு கொண்ட-வழக்கில் வாதியின் சார்பில் ஆஜரானார். நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்காமல் சுருக்கமாகப் புரியும் விதத்தில் அவர் பேசினார்.

"இந்த வழக்கு மிகவும் சாதாரணமானது. இம்மாதிரி வழக்கில் எல்லாப் படுக்கை அறைகளிலும் முப்பரிமாண கமெரா வைக்கப்பட்டு படம் எடுக்கப்பட்டிருந்தாலன்றி ஆதாரங்களுடன் நிரூபிப்பது கஷ்டம். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கதவைச் சாத்திக்கொண்டு ஒரு அறைக்குள் பல மணி நேரம் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் பைபிளையோ கீதையையோ படித்துக் கொண்டிருப்பார்கள் என்று நீங்கள் கருதமாட்டீர்கள் என நம்புகிறேன்". நார்ட்டன் வெற்றிபெற்றார்.



"நல்ல காலம் பிறக்குது. நல்ல காலம் பிறக்குது! ஐயாவுக்கு ஒரு தங்கமான குழந்தை பிறக்கப்போகுது....!"

"அடியே! இவன் சொல்றது பலிச்சுடப்போகுது! சீக்கிரமா அவனுக்கு ஏதாவது கொடுத்தனுப்பு!"



## முதலுதவி

தெருவோரம் ஓர் ஆள் விழுந்து கிடந்தான். சுற்றி நின்ற சிலர், "எவராவது முதலுதவி ஏதாவது செய்தால் நல்லது" என்று பதறியபோது, ஒருவர் கையில் வைத்திருந்த இட்லி பார்சலைப் பிரித்துக்கொடுத்து அவனைச் சாப்பிடச் சொன்னார். கூட்டத்தில் ஒரு குரல், "பசிக்கு இதுதான் பெர்ஸ்ட் எய்ட்..." என்றது.



புத்த பூர்ணிமா கடந்த மே மாதம் 19, 20ஆம் திகதிகளில் கொண்டாடப்பட்டது. கதையொட்டி மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள கோயிலில் புத்தர் சிலை முன்பு இருக்கும் உண்டியலில் காசுபோடுகிறான் சிறுவன்.







## 'யார் இவர்' தெரிகிறதா? 40



### இந்த வாரம் பிரசுரமாகி இருக்கும் உருவம் யாருடையது?

குத்தாட்டம் போடும் காளை இவன். இவரின் பெயரை தபாலட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை எழுதிய அதிஷ்டசாலிகள் ஐவரின் பெயர் விவரம் பிரசுரிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி
"யார் இவர் தெரியுமா?"
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

★ "யார் இவர் தெரிகிறதா?" இல.39இற்கான சரியான விடை: - கஞ்சா கறுப்பு. சரியான விடைகளை அனுப்பியோரில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:

1. ஏ.ஜே.காசில், ஏறாவூர் 6.
2. சசிக்குமார், வவுனியா.
3. எம்.சண்முகப்பிரியா, மன்னார்.
4. எல்.எம்.நௌபர், கல்முனை.
5. பீற்றர் ஜோன், நாவலப்பிட்டி.



## தத்துவம்

சங்கு- மங்கை ஒரு கொங்கை
ஊதிவிட்டால் உனக்கு சங்கை!

லிமிட்- புடவை வாங்குவதில் ஆண்கள் லிமிட் -அதில்
பெண்கள் நோ லிமிட்!

ஆப்பு- பெண்கள் போடுவது காப்பு
ஆண்களுக்கு வைப்பது ஆப்பு!

வோட்டு- மக்கள் போடுவது வோட்டு - அதை
நாக்கு நீட்டுவர் கேட்டு!

தட்டை- கோழி போடுவது முட்டை
நீ போடுவதோ தட்டை!

# மனத்தெளிவு

நிமிடக்கதை



அம்மா சாந்தா நினைத்த மாதிரியேதான் சங்கரன் நடந்து கொண்டான். சம்பளக்கவரை மனைவியிடம் நீட்டினான். புதுப்பெண் பூவிழியின் முகம் , மலர்க்காடாய் மலர்ந்தது.

வழக்கமாய் அம்மா சாந்தா விடம்தான் சம்பளப் பணத்தை சங்கரன் கொடுப்பான். 'அம்மா, அம்மா' என அவளையே சுற்றிவருவான்...

'புதுத்துணை கிடைத்தபிறகு அவன் அடியோடு மாறிவிட்டான்'! அம்மாவுக்கு மனம் வெதும்பியது.

பூவிழியின் கையிலிருந்த சம் பளக் கவரையும் சங்கரனையும் மாறிமாறிப் பார்த்தாள் சாந்தா.

அப்போது வாழைஇலையில் இருந்த மல்லிகை சரத்தை தாயின் கையில் கொடுத்தான், சங்கரன். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''அம்மா! இதை உன் கையாலே பூவிழிக்கு வைத்துவிடு. பூவிழி! சம்பளக் கவரை அம்மாவிடம் கொடு'' என்றான். மனைவியோடு சேர்ந்து தானும் அம்மாவிடம் வாழ்த்துப்பெற்றான். தாய் மனம் குளிர்ந்தது. ''நீ மகராஜனா இருப் பாய்'' என்ற சாந்தா ...சம்பளக் கவரை மனநிறைவுடன் மருமகள் பூவிழியின் கையில் திணித்தாள்.

சாந்தாவின் மனசு இப்போது தெளிவாகிஇருந்தது.

## விழிப்பு...

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்றார்.

வெட்கித் தலைகுனித்தாள்.

உள்ளே வந்ததும் இன்னுமோர் ஆச்சரியம்...விவாகரத்தான அவளது கணவர்....செய்வதறியாது துடித்தாள்.

புன்முறுவலுடன் அவளைப் பார்த்தான் ருத்திரன். யாவரையும் தத்தமது வேலைகளுக்கு அனுப்பி விட்டு, இருவருடனும் உரையாட ஆரம்பித்தான். இவர்தான் நீங்கள் மோசடிசெய்ததாக சொல்லப்படும் தொகையினை மீளவும் கொடுத்து உங்களுக்காக பரிந்து பேசியவர். இவர் வேறுயாருமல்ல எனது நிறுவனத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர். உங் களுக்கு கடந்த காலத்தில் இவரது துணை தேவைப்படாமல் இருந்திருக்க லாம். ஆனால் இன்று உங்களுக்கு நினையாப் பிரகாரமாக உதவி செய் துள்ளார். இறைவன் பல சமயங்களில் எம்மை அறியாமலே எமக்கான முடிச் சினை அவிழ்க்க ஆட்களை வைத் திருப்பார். பயப்படவேண்டாம். பேசிமுடிவெடுங்கள்'' என்று கூறி விட்டு தனது வாகனத்தை நோக்கி தன் கண்களைத் திருப்பினான்.

ஆத்மநந்தினி ஆழ்ந்த சிந்தனை யில் மூழ்கினாள். ருத்திரனின் வார்த் தைகள் அவளை முள்ளாக தைத்தன. தனது வாழ்நாளில் அவள் செய்த நன்மைகள் பல. ஆனால், அவளைத் தேடிவந்த தெல்லாம் தீமையே. எவ் வளவு இளம் உள்ளங்களின் உணர்வு களை - தனது வாழ்வில் ஏற்பட்ட கசப் பான அனுபவங்களை-அடிப்படை யாக வைத்து விவாகரத்து என்ற பெயரால் உடைத்திருப்பாள். சுய தொழில் என்றபெயரில் எத்தனை இளம் பெண்களை அவர்களது கணவர்களுடன் சேரவிடாது அவர்களது வாழ்வினை தனிமைப் படுத்தி தனது நிறுவனம் உயர வேண்டும் என்று உழைத்தவள், தன்னை சூழ அபலைகளின் வாழ்வினை பணயம் வைத்து தனது வாழ்வினை உயர்த்தியவள் யாரோ அன்பளிப்பாக அபலைகளின் வாழ்வுக் காக கொடுக்கும் அன்பளிப்புகளை தனது சுய தேவைக்காகவும், தனது பிரபலத்தை வெளிக் கொணரவும் பயன்படுத்தினாள். ஆனால், இன்று அவள் நட்டாற்றில் தவிக்கும் துடுப்பில் லாத படகு.

தனது முதல் தவறு, தனது கண வனை விவாகரத்து செய்தது. இரண் டாவதாக ஏதேச்சையாக முடிவெடுத்து மீண்டும் திருமணபந்தத்தில் இணைந்தது. அதுவும் அவளுக்கு நிலைக்கவில்லை. தன்னிலை உணர்ந்து தனக்கென ஓர் இடத்தை தேடிக்கொடுத்து அதில் அவளை உயர்த்திய வயதான அந்த உயர் அதி காரியை ஏமாற்றியது அவளது மூன்றா வது தவறு. அவற்றை திருத்திக்கொள்ள முடிவெடுத்தாள்.

புதிய பணி ஆரம்பமாகியது. தனது கணவனுடன் சேர்ந்துவாழ ஆயத்தமா னாள். விவாகரத்துக்கு வழக்காடும் வழக் கறிஞர்களை விவாகரத்து பெறமுடி யாத, ஆலோசனை வழங்கக்கூடிய குடும்ப நல்ல வழக்கறிஞர்களாக மாற்றினாள். தன்னுடன் இணைத்துக் கொண்டாள். சுயதொழிலை குடும்ப நலத் தொழிலாக மாற்றினாள். பெண் களின் திறமைகளை புது மெருகூட்டி னாள். சாதனைப்பயணம் தொடர்ந்தது. விளம்பரங்களை விரும்பாமல் தன்னடக் கத்துடன் அவளது சேவை தொடர்ந்தது.

ருத்திரன் என்றோ தயாரித்த விவர ணக் கட்டுரையை பிரசுரிக்க ஆயத்த மானான்.

## சிறுவர்களின்...

(20 ஆம் பக்க தொடர்ச்சி)

இதற்குக் காரணமும் டெஸ்டோஸ்டீரான் தான்.இந்த ஹார்மோன் மார்பகம் தோல் போன்ற இடங்களில் மட்டும் ஈஸ்ட்ரோஜென் (பெண்களுக்குரிய ஹோர்மோன்)ஆக மாற்றம் அடைந்து,அந்த இடங்களில் எல்லாம் கொழுமைபைப் படியச் செய்கிறது. சில ஆண்களுக்கு மட்டும் அந்த இடங்களில் மென்மையான திசுக்கள் இருக்கும். அப்போழுது படிகிற கொழுப்பு மார்பகத் திசுக்களை வளர்ச்சி அடையச் செய்து விடுகிறது.இதனால் தான் அந்த மார்பக வளர்ச்சி. சிலருக்கு ஒரு மார்பகம் மட்டும் வளர்ச்சி அடையலாம்.இரு மார்பகங்களிலும் வளர்ச்சி இருக்கலாம்.

இதற்காக பயந்துவிடக் கூடாது.ஆரம்ப நிலையில்தான் இப்படி நிகழும். இதே டெஸ்டோஸ்டீரானின் அளவு சிறுவனின் உடலில் அதிகரிக்க அதிகரிக்க,உடல் முழுக்க இருக்கிற கொழுப்பின் அளவு குறைந்து, மார்பக அளவும் குறைந்துவிடும் (இரண்டுவருடங்கள் கழித்தும் மார்பகத்தின் அளவு பெரிதாக இருந்தால் மட்டும்,அதை எளிய அறுவை சிகிச்சை மூலம் நீக்கிவிடலாம்). .

ஒப்பிட்டுச் சொல்வதானால்,இதே காலகட்டத்தில் சிறுமிகளின் மார்பகப் பகுதிகளிலும் உடல் முழுவதும் கொழுப்பைப் படிய வைக்கிறது ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன்.''பெண் பூரிச்சுப் போயிருக்கா... விரைவில் வயசுக்கு வந்திடுவா'' - என்று கிராமத்துப் பெண்கள் சொல்வதை கவனித்திருப்பீர்கள்.சிறுவர்கள் விஷயத்தில் கொழுப்பைக் குறைத்து விடுகிறது டெஸ்டோஸ்டீரான். இதனால்தான் சிறுவயதில் கொழுக் மொழுக் என்று இருக்கும் சிறுவர்கள் கூட இந்த வயதில் மெலிந்துபோய், என்னடா.. ஆளே மாறிவிட்டாய்?'' என்கிற

கேள்விக்கு ஆளாகிறார்கள்.

# ராசி பலன்

26-05-2008 முதல் 01-06-2008 வரை

பொ.சந்திரலிங்கம்

### மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை1.

காரியத்தடையுண்டு. பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இரு... உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும்.தாய் நலம், தந்தை நலமி... வீடு,வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அ... அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையு... திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்... உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னே... குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### இடபம்

கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம்.

### மிதுனம்

மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம்1,2,3

காரியத்தடையுண்டு. அலைச்சல் இருக்கும். பணப்பற்றாக் கு... நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர்; தாய் நலமில்லை, தந்... நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியி... ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரா... தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாப... அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### கடகம்

புனர்பூசம் 4 , பூசம், ஆயிலியம்

காரியத்தடையுண்டு. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம்இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### சிம்மம்

மகம், பூரம், உத்தராடம் 1

காரிய சித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### கன்னி

உத்தரம் 2,3,4 அத்தம்,சித்திரை 1,2

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர்கள் அயலவர்கள் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை, தந்தை நலம். விடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமை யலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும்.

### துலாம்

சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3

காரிய சித்தியுண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமை யலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது.

### தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### மகரம்

உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர்.பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை வர வாய்ப்புண்டு.

### கும்பம்

அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நல முண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும்.தொழில்துறை முன்னேறும்.எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### மீனம்

பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரியத்தடையுண்டு. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வி யில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

# பரதநாட்டிய அரங்கேற்றம்



கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகளும் திரு.திருமதி சிவசுப்ரமணியம் தம்பதிகளின் புதல்விகளுமான செல்விகள் கீர்த்தனா, சரண்யா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் என்.மாலைராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். கீர்த்தனா, சரண்யா சகோதரிகள் கொழும்பு றோயல் இன்ஸ்டிடியூட் சர்வதேச பாடசாலை மாணவிகள் ஆவர்.

# அகவை எழுபது நிறைவில்...

ஸ்ரேஷ்ட பத்திரிகையாளரும் கவிஞருமான கே.பி. நடன சிகாமணியின் 70ஆவது அகவை நிறைவுவிழா இலங்கை மக்கள் பொதுப்பணி மன்றத்தின் சார்பில் அண்மையில் கல்கிசையிலுள்ள அவரது இல்லத்தில் அமைதியாக கொண்டாடப்பட்டது. மதியபோசன விருந்தின் பின் எடுக்கப்பட்ட படத்தில் இடமிருந்து வலமாக பிரபல விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன், தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், பத்திரிகையாளர் 'சண்', ரி.கணேசநாதன் (பொலிஸ் அத்தியட்சகர்), முன்னாள் ராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராசா ஆகியோர் காணப்படுகின்றனர்.





கேக் வெட்டி மகிழ்ச்சியாக கொண்டாடுபவர்கள் ஓரினத் தம்பதி ஜெனிபர் பைசர் மற்றும் டொரினா வாங் ஆகியோர். அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள மேற்கு ஹொலிவூட் நகரில்தான் இந்தக் காட்சி. ஓரினச் சேர்க்கையாளர்கள் சட்டப்படி திருமணம் செய்து கொள்ளலாம் என நீதிமன்றம் அளித்த தீர்ப்பை கொண்டாடும் விதத்தில்தான் இவர்கள் கேக் வெட்டுகின்றனர். எனினும், இதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதன் விளைவாக சில மாநிலங்களில் சட்டத்திருத்தம் செய்யப்பட்டு, ஓரினத் திருமணம் தடைசெய்யப்படும் எனத் தெரிகிறது.


STUDY IN SINGAPORE
PAID JOB TRAINING
Earn - SGD900 – SGD1200 per month
TOP CLASS UNIVERSITIES AND COLLEGES
UK, USA, AUSTRALIA, NEWZELAND, CANADA, CYPRUS, MALASIYA.
Special Offers
Free Air Ticket For Singapore
COURSES AVAILABLE IN ANY FIELD
* INSTALLMENT PAYMENTS
* ACCOMMODATION WILL BE ARRANGED
* PART TIME JOBS
100% Guarantee Visa
Fly Within 5 Days
A GREAT OPPORTUNITY STUDY IN U.K PAYMENT AFTER VISA
MINIMUM G.C.E (O/L) * NO NEED IELTS / TOFEL * NO NEED SPONSOR
GLOBAL ALLIANCE
No.133/1, hillStreet, Dehiwala.
Tel: 011-4876710 Fax:0112739191
HOTLINE 0774545367 0777704420








HOTEL WESTEERN PVT LTD
உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.
No.35, Frankfurt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P:+94 11 2507161, +94 11 2507163, +94 4518485
Fax:+94 11 4518481 E-mail:info@hotelwesteern.com
Website:www.hotelwesteern.com


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2008, மே. 25 ஆம் திகதி வெளியிடப்பட்டது.